# குறைபாடு, மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு கையேடு





<u>தொகுப்பாளர்கள்:</u>

நவமணி வெங்கடாஜலபதி
தினேஷ் கிருஷ்ணா
லட்சுமி.R.

## வளர்ச்சி தாமதம் என்றால் என்ன?

முதல் அடி எடுத்து வைத்தல், முதல்முறையாக சிரித்தல், "பை பை" என்று கை அசைத்தல் போன்ற திறன்கள் "வளர்ச்சி மைல்கற்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

குழந்தைகள் எவ்வாறு விளையாடுகிறார்கள், கற்றுக் கொள்கிறார்கள், பேசுகிறார்கள், நடந்து கொள்கிறார்கள், நகர்கிறார்கள் (எடுத்துக்காட்டாக ஊர்ந்து செல்வது மற்றும் நடப்பது) என்பதில் பல்வேறு வளர்ச்சி நிலை படிநிலைகளை அடைகிறார்கள். குழந்தைகள் தாமாக தங்கள் போக்கில் வளருகிறார்கள். எனினும் சில குறிப்பிட்ட வயதிற்கு தகுந்த வளர்ச்சி படி நிலையை அடைய முடியவில்லை எனில் இது வளர்ச்சி தாமதம் என்று அழைக்கப்படுகிறது. ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பது, குழந்தை அந்தந்த வயதிற்கேற்ப வளர்ச்சிநிலையை அடைய உதவும்.

## வளர்ச்சி குறைபாடுகள் என்றால் என்ன?

வளர்ச்சி குறைபாடுகள் என்பது உடல் இயக்கம் கற்றல், மொழி, சமூக அல்லது நடத்தை சார்ந்த பகுதிகளில் ஏற்படும் குறைபாடுகள் காரணமாக குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படுவதாகும். இவை குழந்தைகளின் வளர்ச்சி காலத்தில் தொடங்குகின்றன. இது அன்றாடம் செய்யக்கூடிய செயல்பாடுகளை பாதிக்கலாம் மற்றும் இந்த பாதிப்பு ஒரு நபரின் வாழ்நாள் முழுவதும் நீடிக்கலாம். உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, வளர்ச்சி தாமதங்களைக் கொண்ட குழந்தைகளுக்கு பொருத்தமான ஆரம்பகால சிகிச்சை முறைகள் அளிக்கப்படாவிட்டால் அதன் விளைவாக இந்த குழந்தைகள் வாழ்நாள் முழுவதும் சிரமத்திற்கு உட்படுத்தப்படுவார்கள். மேலும் அதிக வறுமை மற்றும் அதிகளவு சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் நிலை உருவாகலாம்.

## ஆரம்ப கால சிகிச்சைமுறை என்றால் என்ன?

குழந்தையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் சிகிச்சை முறைகள் உடல்ரீதியான சமூக, உணர்ச்சி, மொழி மற்றும் அறிவுதிறன் போன்ற வளர்ச்சி பகுதிகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த வளர்ச்சிப் பாதைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பயிற்சிகளே ஆரம்பகால சிகிச்சை முறை என்று அழைக்கப்படுகிறது. இது இயன்முறை சிகிச்சை, தொழில்முறை சிகிச்சை, பேச்சுமொழி சிகிச்சை மற்றும் சிறப்புகல்வி ஆகியவற்றை உள்ளடக்கியது. ஆரம்பகால சிகிச்சைமுறை உடல், அறிவாற்றல், உணர்ச்சி, நடத்தை, சமூக மற்றும் தகவல் தொடர்பு போன்ற பகுதிகளில் வளர்ச்சி குறைபாடுள்ள குழந்தைகளுக்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது. தரமான ஆரம்பகால சிகிச்சைமுறைகளால் குழந்தைகள் தங்களுக்கு சாத்தியமான முழு திறனையும் அடையமுடியும். மேலும் அவர்கள் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை இந்த சமூகத்துடன் ஒருங்கிணைந்தும் வாழ முடியும்.



## Enable Inclusion ஒருங்கிணைத்தல்

அமர் சேவா சங்கத்தின் "எனேபிளிங் இன்குளுசன் திட்டமானது" பல விருதுகளை வென்ற "எனேபிளிங் இ.செயலி" மூலம் கிராம மறுவாழ்வு பணியாளர்களை மறுவாழ்வு சிறப்பு நிபுணர்களோடு (பிஸியோதெரபிஸ்ட்கள், ஆக்குபேஷனல் தெரபிஸ்ட்கள், சிறப்பு ஆசிரியர்கள், பேச்சு பயிற்சியாளர் மற்றும் பேச்சு பயிற்சி உதவியாளர்) இணைத்து கிராம மறுவாழ்வு பணியாளர்களின் மூலமாக குழந்தைகளின் வீடுகளில் அல்லது சமுதாய மையங்களில் ஆரம்பகால சிகிச்சையை அளிக்கிறது. இந்த திட்டத்தின் மூலமாக வளர்ச்சி குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு அதிக பலன் கிடைத்துள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் மூலம் அதிகமான குழந்தைகள் தங்கள் முன்னேற்றம் வளர்ச்சிபடி நிலைகளை அடைந்துள்ளார்கள்.

# அமர் சேவா சங்கம் (ASSA)

அமர் சேவா சங்கம் கிராமப்புறங்களை மையமாகக் கொண்டு ஊனமுற்றோர்களின் வளர்ச்சிக்காக பணியாற்றும் ஒரு முக்கிய நிறுவனமாகும். இது தமிழ்நாட்டின் தென்காசி மாவட்டத்தில் உள்ள ஆய்க்குடி கிராமத்தில் அமைந்துள்ளது.

**அமர் சேவா சங்கத்தின் குறிக்கோள்**

சவால் விடப்பட்டோர்களுக்கு மறுவாழ்வு மற்றும் முன்னேற்ற மையங்களை நிறுவி அதன் முலம் கிராமங்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தி இவைகளை ஒரு முன்மாதிரி மையங்களாக உருவாக்கி சவால் விடப்பட்டோர்களை சுய உதவி குழுக்களாக ஒருங்கினைத்து சமுதாயத்தில் இவர்களையும் கூடி வாழச்செய்வதே அமர் சேவா சங்கத்தின் குறிக்கோளாகும்

**அவர் சேவா சங்கத்தின் அணுகுமுறை**

உடலாலும் மனதாலும் மாற்றுத்திறன் படைத்தவர்களின் வாழ்க்கைத்திறனை மேம்படுத்துவதற்காக அனைத்து வசதிகளையும் கொண்ட வள மையத்தை உருவாக்கி செயலாக்கம் செய்ய வேண்டும். மேலும் இந்த செயல்பாட்டில் கிராம சமுதாயத்தை ஈடுபடுத்தி சவால் விடப்பட்டவர்கள் இந்த சமுதாயத்தில் சம வாய்ப்பு, சமஉரிமை, மற்றும் சம அந்தஸ்துடன் வாழ வழிவகை செய்யும் ஊடகமாக செயல்பட வேண்டும்

கிராமபுறங்களை மையமாகக் கொண்டு ஊனமுற்றோர்களின் மேம்பாட்டிற்காக திரு. ராமகிருஷ்ணன் என்பவரால் ஊனமுற்றோர்கான சர்வதேச ஆண்டில் அமர் சேவா சங்கம் நிறுவப்பட்டது.



**பத்மஸ்ரீ S.ராமகிருஷ்ணன்** நிறுவனர் தலைவர்

திரு.S.ராமகிருஷ்ணன் தனது நான்காவது ஆண்டு பொறியியல் கல்லூரியில் படிக்கும் போது கடற்படை அதிகாரிகள் தேர்வு சோதனையின் கடைசி சுற்றில் கலந்து கொள்ளும் போது அவரது முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டு இரண்டு கைகள் மற்றும் கால்கள் செயலிழக்கப்பட்டார். இவர் ஊனமுற்றோருக்கான சர்வதேச ஆண்டில் தனக்கு சிகிச்சை அளித்து ஊக்கப்படுத்திய மருத்துவர் ஏர் மார்ஷல் டாக்டர். அமர்ஜித்சிங் சாகல் அவர்களின் பெயரில் இந்த அமர் சேவா சங்கத்தை 1981-ஆம் ஆண்டு நிறுவினார். S.ராமகிருஷ்ணன் அமர் சேவா சங்கத்தின் தலைவராகக் செயல்பட்டு வருகிறார்.



**S.சங்கரராமன்** செயலாளர்

.S.சங்கரராமன் ஒரு பட்டய கணக்காளர்(ஆடிட்டர்). இவர் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு சக்கரநாற்காலி உதவியுடன் வாழ்ந்து வருகிறார். இவர் தன்னை 1992-ல் அமர் சேவா சங்கத்தின் சேவையுடன் இணைத்துக்கொண்டார். இவர் அமர் சேவா சங்கத்தின் செயலாளராக பணியாற்றி வருகிறார். இவர் அமர் சேவா சங்கத் தலைவர் எஸ் ராமகிருஷ்ணன் அவருடன் இணைந்து ஆய்க்குடியில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் வள மையத்தை ஏற்படுத்தி மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் ஒருங்கிணைந்து வாழ்வதற்கான பல்வேறு சேவைகளை செய்து வருகிறார்

# குறைபாடு, மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு கையேடு

## பொருளடக்கம்


| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | அங்கீகாரம் | 5 |
| 2. | முன்னுரை | 6 |
| 3. | அறிமுகம் | 7 |
| 4. | விழிப்புணர்வுக்கான வழிமுறைகள்<br>• கலைநிகழ்ச்சி<br>• காட்சிகள்<br>• விவாத மேடை | 10 |
| 5. | சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 14 |
| 6. | மகளிர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 40 |
| 7. | பள்ளி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்<br>• சகாக்களின் ஆதரவை மேம்படுத்த மாணவர்களுக்கான விழிப்புணர்வு<br>• உள்ளடக்கிய வகுப்பறையை மேம்படுத்த ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு | 49 |
| 8. | பணியாளர்களுக்கான கூடுதல் தகவல்கள்<br>• சட்டங்கள் மற்றும் கொள்கைகள் | 81 |
| 9. | இணைப்பு<br>• அமர் சேவா சங்கத்தில் செயல்பாடுகள்<br>• மேற்கோள் | 108 |

# 1. அங்கீகாரம்

பெயர்கள் குறிப்பிடப்படாத பலரின் பங்கேற்பு மற்றும் உதவி இல்லாமல் இந்த கையேட்டை நிறைவு செய்திருக்க முடியாது.

அவர்கள் அனைவரது பங்கேற்பையும் மனப்பூர்வமாக பாராட்டி நன்றியுடன் அங்கீகரிக்கிறோம்.

இருப்பினும் கீழ்வரும் சிலரை குறிப்பிடுகிறோம்.

- **உள்ளடக்கிய பாடத்திட்டத்தைப் பற்றிய பங்களிப்பு**

  1. M.சுப்புலெட்சுமி, சிறப்புக்கல்வி ஆசிரியர், சங்கமம் சிறப்புப் பள்ளி, அமர் சேவா சங்கம்.
  2. T. பேச்சிமுத்து, கிராமப்புறப்பள்ளி மறுவாழ்வுத்திட்டத்தின் சிறப்புக் கல்வியாளர், அமர் சேவா சங்கம்
  3. Ms.பிரியதர்ஷினி சுந்தர்ராஜ், முதுகலை மாணவர், அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம்.

- **ஓவியங்கள் மற்றும் கிராபிக்ஸ்**

  1. S.ஸ்ரீநிதி, மாணவர், டெல்லி பப்ளிக் பள்ளி
  2. ஹர்ஷினி லட்சுமி நாராயணன், ஹேக்கா ஃபவுண்டேஷன், அமெரிக்கா
  3. T.சிவகுருசண்முகம் - மாணவர், சிவசரஸ்வதி வித்யாலயா மேல்நிலைப்பள்ளி

# 2. முன்னுரை

கடந்த நான்கு தசாப்தங்களாக/நாற்பது வருடங்களாக அமர் சேவா சங்கம் மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு மற்றும் சிகிச்சைகள் வழங்குவதற்கு தேவையான வளங்கள் கிடைப்பதில் தன் செயல்பாட்டுக்குள் உள்ள பகுதியில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் உள்ளடக்கிய சமுதாயத்தை நோக்கி சமூகத்தில் உள்ள மக்களின் அணுகுமுறை மற்றும் நடத்தையை மாற்றி அமைப்பதில் தான் ஒருங்கிணைந்த சமுதாயத்தை நோக்கிய முன்னேற்றம் பெரும்பாலும் அடங்கியுள்ளது என்பதை எங்கள் அனுபவம் எங்களுக்கு உணர்த்தியுள்ளது.

ஒருங்கிணைத்தலில் மாற்றுத்திறனாளிகளை "உள்ளே" இணைக்காமல், பொதுமக்களின் புரிதல் மற்றும் ஒத்துழைப்பு இல்லாமல், ஒருங்கிணைந்த சமூகத்தை நோக்கி செய்யும் எந்த விதமான செயல்பாடுகளும் மற்றும் முயற்சிகளும் தகுந்த பலனை அளிக்காது.

எனவே மாற்றுத்திறனாளிகளின் தேவைகளைப்பற்றி சமூகத்திற்கு கற்பிப்பதற்கும், அனைத்து மக்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சமூகத்தை ஊக்குவிப்பதற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவது முக்கியம்.

இதனை கருத்தில் கொண்டு இந்த கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு சமூக அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் பற்றிய விழிப்புணர்வை வழங்குவதற்கான வழிமுறைகள் மற்றும் கருவிகள் பற்றி தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நிர்வாகம், மறுவாழ்வு நிபுணர்கள் மற்றும் சமூக மறுவாழ்வுப் பணியாளர்களுக்கு கற்பிப்பதே இந்த கையேட்டின் நோக்கமாகும்.

ஊனம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பற்றிய விழிப்புணர்வை வழங்குவதற்கான தேவைகள் மற்றும் முக்கியத்துவத்தின் அடிப்படை அறிமுகத்துடன் கையேடு தொடங்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துவதற்கான வழிமுறைகளும், விளக்கமும் உள்ளது; மேலும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றிய தகவல்களும் வழங்கப்பட்டு இருக்கிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை திட்டமிடுவதற்கும், அதை செயல் படுத்துவதற்கும் உதவியாக இருக்கும் பிற தகவல்களையும் சேர்த்துள்ளோம்.

ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் கூடுதல் தகவல்களை பெறுவதற்கான குறிப்புகளின் பட்டியலை வழங்கியிருக்கிறோம்.

# 3. அறிமுகம்

இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் 2.21% பேர் மாற்றுத்திறனாளிகளாக உள்ளனர். பல நிபுணர்கள் இந்த எண்ணிக்கை குறைத்து மதிப்பிடபட்டிருப்பதாக கருதுகின்றனர்.

இந்த அதிகார புள்ளி விவரங்களின் அடிப்படையில் கூட மாற்றுத்திறனாளிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 26.8 மில்லியன் ஆகும். இது பல நாடுகளின் மக்கள் தொகையை விட அதிகமாகும்.

வாழ்க்கை அனைவருக்கும் சவாலானது. ஒரு ஊனமுற்ற நபருக்கு சமூகம் முன்வைக்கும் கட்டுப்பாடுகள் காரணமாக வாழ்க்கை மிகவும் சவாலானதாகிறது. ஊனம் என்பது ஒரு நபரின் உடல், மனதின் நிலை மற்றும் சமுதாயத்தில் இருக்கும் தடைகளால் அந்த நபர் சில செயல்களை செய்வதற்கும், தன்னைச் சுற்றியுள்ள உலகில் பங்கு கொள்வதற்கும் தடையாக இருக்கும் நிலையாகும்.

அமைப்புகள், சாதனங்கள் மற்றும் சமுதாய கட்டமைப்புகள் மாற்றுத்திறனாளிகள் உள்ளடக்கிய அனைவரும் பங்கேற்கும் படியாக இருக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் பங்கேற்க தேவையான நியாயமான அமைப்புகளையும் வழங்க வேண்டும்.

சமூகத்தில் உள்ள மற்ற தனிப்பட்ட நபர்களைப் போல் தான் மாற்றுத்திறனாளிகளும் என்பதை உணர்ந்து நமது சமூகத்தின் அனைத்து கட்டமைப்புகளும் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளுக்கு ஏற்றவாறு அமைதல் வேண்டும்.

குறைபாடு உள்ளவர்கள் சந்திக்கும் மிகப்பெரிய தடையாக அமைந்ததற்கு அவர்களுடைய குறைபாடு மட்டுமல்லாமல் மற்றவர்களுடைய அனுகுமுறையும் தான். மேலும் நமது சமூகம் மாற்றுத்திறனாளிகளை அவமானப்படுத்தி, களங்கமாக கருதி, பாகுபடுத்தி அவர்களுக்கு வாய்ப்புகளை மறுத்து ஒதுக்குவதும் தடையாக அமைகிறது.

இதுவே அமர் சேவா சங்கம் மற்றும் பிற மாற்றுத்திறனாளி அமைப்புகளை மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு என்ற களத்திற்கு அப்பால் அவர்களின் பணியை நகர்த்தியுள்ளது.

40 வருடங்களாக மாற்றுத்திறனாளிகளுடன் நாங்கள் பணியாற்றிய காலத்தில் மாற்றுத்திறனாளிகள் தங்கள் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதையும், சமூகத்தின் அங்கமாக இருப்பதையும் அதிகம் விரும்புவதை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கிய சமூகத்தை உருவாக்குவதே அமர் சேவா சங்கத்தின் நோக்கம். இந்த சமூக மாற்றத்தை கொண்டு வருவதற்கு எங்களுடைய அணுகுமுறையும் மேம்படுத்த வேண்டியிருக்கிறது. 21ஆம் நூற்றாண்டு தொடங்கிய பொழுது அமர் சேவா சங்கம் தன் செயல்பாட்டை மையம் சார்ந்த மறுவாழ்வு என்ற எல்லைக்கு அப்பால் சமூக சார்ந்த மறுவாழ்வு என இரண்டு காரணங்களுக்காக விரிவுபடுத்தியது.

முதன்மைக்காரணம் எங்கள் சேவைகளை, எங்கள் மையங்களைத் தேடி வருபவர்களுக்கு மட்டுமே என்று வரையறுத்துக் கொள்ள விரும்பாதது மற்றும் இரண்டாவதாக மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய சமுதாயமாக நமது சமுதாயம் உருவாக வேண்டும் என்ற தொலை நோக்கு பார்வையை நாங்கள் கொண்டிருக்கிறோம்.

இதை அடைய தனிநபரின் மறுவாழ்வுக்கு அப்பால் சமூக மாற்றத்தை உருவாக்க முயல வேண்டும் என்பதை உணர்ந்தோம். ஊனமுற்றோர் மற்றும் அவர்களது குடும்பங்களின்

வாழ்க்கை மற்றும் வளர்ச்சிக்கு இடையூறாக இன்னமும் சமூகத்தில் பரவலாக இருக்கும் ஊனமுற்றோரை விலக்குதல் என்னும் தடையை சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி அகற்ற வேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறோம்.

ஊனம் என்பது ஒரு சமூக பிரச்சனையாகும். நாம் வாழும் சமூகம், கல்வி நிறுவனங்கள், குடும்பம், அரசாங்கம் மற்றும் சமூக அமைப்புகள் போன்றவை அனைத்து மக்களுக்கும் அவர்கள் உடல் திறன் அல்லது மனதிறன்களை பொருட்படுத்தாமல் அனைவரும் அணுகக்கூடிய சமூகமாக மாற்றுவதில் மிகுந்த பங்கு அளிக்கின்றன.

அறிவு, அணுகுமுறைகள் மற்றும் நடத்தைகள் மாற்றப்படும் பொழுதே சமூக உள்ளடக்கத்தை அடைய முடியும். இந்த மாற்றமே விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் இலக்கு ஆகும்.

ஊனமுற்றோர் உரிமைகள், மாற்றுத்திறனாளிகளின் பங்களிப்பு மற்றும் அவர்களுக்கு பொருத்தமான தகவமைப்புகள் போன்றவைகள் பற்றிய விழிப்புணர்வே மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் அர்த்தமுள்ள பங்களிப்பை ஏற்படுத்த ஊக்குவிக்கும்.

மாற்றுத்திறனாளிகள் பற்றிய விழிப்புணர்வு என்பது குறைபாடுகள் குறித்து மக்களுக்குக் கற்பித்தல் மற்றும் சரியான வழிகளைப் பின்பற்ற தேவையான தகவல்களை வழங்குதல் ஆகும். மரபியல் மற்றும் விபத்து காரணமாக எந்த நேரத்திலும், யார் வேண்டுமானாலும் இயலாமையால் பாதிக்கப்படலாம். இன்று எந்த ஒரு பணியில் சேரும் 10 தொழிலாளர்களில் 3 பேர் ஓய்வு பெறும் முன் ஊனமுற்றவராகிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடிய உள்ளடங்கிய சமுதாயம் மற்றும் கன்னியமான வாழ்க்கையைப் பெற மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டும். இதை அடைய சமூகம் பெண்கள் மற்றும் கல்வி நிலையம் ஆகிய மூன்று நிலைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கான வழிகாட்டியை வடிவமைத்துள்ளோம். மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பல்வேறு சட்டங்கள், உரிமைகள், மற்றும் கொள்கைகளை முன்னிலைப்படுத்துவதுடன் விழிப்புணர்வு நடத்துவதற்கான வழிமுறைகள் ஆகியவை இந்த கையேட்டின் குறிப்பிடத்தக்க பகுதியாகும். நமது ஆணாதிக்க சமூகத்தில் மாற்றுத்திறனாளி பெண்கள் சந்திக்கும் அவலநிலையை மற்ற பெண்களுக்கும் புரிய வைக்கும் விதத்தில் மகளிர் விழிப்புணர்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பள்ளி விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாணவர், ஆசிரியர் மற்றும் கல்வி நிர்வாகம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவும் மாற்றுத்திறனாளி குழந்தைகளைப் பற்றி புரிதல் கொண்டவர்களாக இருக்குமாறு கற்பிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் பள்ளிப்படிப்பு என்பது பெரும்பாலும் குடும்பத்திற்கு அப்பால் ஒரு குழந்தை சந்திக்கும் முதல் மற்றும் முக்கியமான சமூக அமைப்பாகும். இந்த பள்ளிகல்வித்துறை அனைத்து குழந்தைகளுக்கும் நட்புறவாக இருக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகளின் நிலையிலிருந்து அவர்களின் சூழ்நிலையை தெரிவித்தல் மற்றும் இயலாமை என்பது மனிதர்களின் பன்முகத்தன்மையின் ஒரு அங்கம் என்பதை புரிய வைத்தலே இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் நோக்கமாகும்.

**சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சி**

உலகில் எந்த ஒரு தனிமனிதனும் அவனது சமூகம் இல்லாமல் முன்னேற முடியாது. சமூகம் என்பது அவர்களது குடும்பம், உறவினர்கள், அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் நிறுவனங்கள் (அரசு, சமூக மற்றும் மத நிறுவனங்கள்) அடங்கும். இவை அனைத்தும் தனிநபரின் வாழ்க்கையில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. எந்த ஒரு தனிநபரும் தனது திறனை வளர்த்துக்கொள்வதற்கும், வெளிப்படுத்துவதற்கும் மற்றும் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கும் சமூகத்தின் அங்கீகாரமும், ஏற்றுக்கொள்ளப்படுதலும் (acceptance) தேவைப்படுகிறது. இயலாமையை சமூகம் ஒரு தடையாகக் கருதும் போது அது மாற்றுத்திறனாளிகளுக்கு தீங்கு விளைவிக்கும் சூழலை உருவாக்குகிறது. இயலாமை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான ஆதரவு அமைப்பு குறித்து நமது சமூகத்திற்குக் கற்பிப்பதன் மூலம் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் ஒருங்கிணைந்த சமூகம் அமைய

வழிவகுக்கும். நேர்மறையான சூழ்நிலை இருந்தால் மாற்றுத்திறனாளிகள் நன்கு செழித்து அவர்கள் சமூகத்திற்கு மீண்டும் பங்களிக்க முடியும். இதற்கான சில உதாரணங்களை இந்த கையேடு விளக்குகிறது.

**மகளிர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

ஆணாதிக்க சமூகத்தில் நாம் வாழ்கிறோம். இங்கு பெண்கள் தங்கள் ஆண்குடும்ப உறுப்பினர்களைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். பெண்கள் செய்யும் வீட்டு வேலைகள், அவர்களின் குடும்பம் மற்றும் சமூகத்தால் பெரியதாக கருதப்படுவதில்லை. இது பெண்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அவர்கள் தங்கள் சொந்த வீட்டிலும், சமூகத்திலும் பாகுபாடு காட்டப்படும் ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். உடல் வலிமை, பொருளாதாரம் மற்றும் உணர்வு ரீதியில் மற்றவர்களைச் சார்ந்திருப்பதால், குறைபாடுள்ள பெண்கள் மேலும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. மற்ற பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளி ஆண்களை விட இவர்களை களங்கப்படுத்தும் வாய்ப்பு இந்த சூழ்நிலையில் அதிகமுள்ளது.

மாற்றுத்திறனாளி பெண்களின் நிலைமையை மற்ற பெண்களும், ஆண்களும் புரிந்து கொள்வது மிக அவசியமாக இருப்பதால் மாற்றுத்திறனாளி பெண்களை மையமாகக் கொண்ட விழிப்புணர்விற்கான ஒரு தனிப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. பெண்கள் விழிப்புணர்வு பிரிவு மற்ற பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பயன்படுத்தலாம். ஓர் ஆணாதிக்க சமூகத்தில் பெண்கள் தங்கள் சகபாதியான ஆண்களை விட அதிகமான வீட்டுப் பொறுப்புகளைக் கொண்டுள்ளனர். பொதுவாக ஒரு குடும்பத்தில் தாய்மார்களும், பிற பெண்களும் குழந்தைகளின் முதன்மை பராமரிப்பாளராக கருதப்படுகிறார்கள். ஊனமுற்ற குழந்தைகளை வளர்க்கும் பொழுது பல தாய்மார்கள் அதிக சுமை மற்றும் களங்கத்தை எதிர்கொள்வதால் சமூக அமைப்பின் அணுகுமுறைகளை சரியான வழியில் நடத்திச்செல்வது பொதுமக்களின் கடமையாகிறது.

**பள்ளி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

பள்ளிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தை உள்ளடக்கிய ஒரு நிறுவனமாக உள்ளது. இதில் மேற்கண்ட அனைவரும் கல்வித்துறையில் மிக முக்கியமான பங்கைக் கொண்டுள்ளனர். கல்வி என்பது சாதி, இனம், பாலினம் மற்றும் இயலாமை ஆகிய அனைத்திற்கும் அப்பால் ஒரு குழந்தையின் உரிமை ஆகும். இந்தியாவில் 5 வயதுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகளுள் 72% பேர் எந்த கல்வி நிறுவனத்திற்கும் சென்றதில்லை. மேலும் 6-19 வயதுள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளில் 23% பேர் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றதில்லை. ஆனால் 99.4% மற்ற குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதாக கணக்கெடுப்பு கூறுகின்றது. நமது பள்ளிக்கல்வி முறையானது அனைவரையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும் மாறும் போது தான் குறைபாடுகள் உள்ள குழந்தைகள் கல்வி கற்கும் நிலை ஏற்படும். ஒருங்கிணைந்த கல்வி முறையை பள்ளி நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் மட்டுமே அடைய முடியும். எனவே பள்ளி அமைப்பில் முக்கிய பங்குதாரர்களான சகமாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தை இலக்காக கொண்டு விழிப்புணர்வுத் திட்டங்களை வடிவமைத்துள்ளோம்.

# 4. விழிப்புணர்வு நிகழ்ச்சிகான வழிமுறைகள்

நாம் வடிவமைத்துள்ள விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் முக்கிய நோக்கம், நமது சமூகத்தை ஒருங்கிணைந்த சமூகமாக மாற்றுவது மற்றும் இயலாமையை மனித பன்முகத்தன்மையின் ஒரு பகுதியாக சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது தான். இதை வலியுறுத்துவதன் விதமாக ‘‘ஊனமுற்றோர் சமூகம்’’ என்ற சமூகத்தில் எவரெல்லாம் உறுப்பினராகலாம் என்ற கேள்வியுடன் நமது திட்டங்களை தொடங்குகிறோம்.

‘‘ஊனமுற்றோர் சமூகம்’’ என்பது ஒரு சிறுபான்மை குழுவாகும். இவற்றில் எவர் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் சேர்ந்து கொள்ளலாம். சிலர் பிறந்ததிலிருந்து, சிலர் விபத்தினால் ஊனமுற்றதிலிருந்து அல்லது வயோதிகத்தினால் நோயுற்றதிலிருந்து இதில் இணைந்து கொள்ளலாம். உங்களுக்கு நடந்திருந்தால் நீங்கள் எங்ஙனம் நடத்தப்பட வேண்டும் மற்றும் விழிப்புணர்வு எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புவீர்கள்? இந்த வகையான செய்திகள் ஒவ்வொரு நபரையும் ஒரு ஊனமுற்றோரின் நிலையில் தங்களை உணரச் செய்கிறது. இந்த செய்தியை நாம் உரக்கக்கூறும் பொழுது மாற்றுத்திறனாளிகள் பற்றிய புரிதலில் சமூகத்தின் கவனத்தைப் பெற உதவும்.

**முக்கிய செய்திகள்**

- மாற்றுத்திறனாளிகளின் உணர்வுகளை அவர்களின் நிலையிலிருந்து உணர்தலையும், அவர்களை ஏற்றுக்கொள்ளுதலையும் மேம்படுத்த வேண்டும்.
- அவர்களது திறனின் மீது கவனம் செலுத்தும் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டும்.
- குறைபாடுகள் பற்றி பொதுவாக கேட்கப்படும் கேள்விகளுக்கு தீர்வு காண வேண்டும்.
- இயலாமையை வாழ்க்கையின் ஓர் அங்கமாக முன்னிறுத்த வேண்டும்.
- குழந்தைகள் அவர்களிடமிருந்து வித்தியாசமாக தோன்றும் மற்றவர்களை நேர்மறையான முறையில் பார்க்க பழக்க வேண்டும்.

இந்த செய்திகள் மிகவும் தர்க்கரீதியாகவும், எளிமையாகவும் தெரிவிக்கப்பட வேண்டியவை. ஆனால் நிஜத்தில் உலகம் மிகவும் சிக்கல்கள் உடையது. ஏனென்றால் அது வெவ்வேறு விதமான மக்களை கொண்டிருக்கிறது மற்றும் ஒவ்வொரு செய்தியையும் வெவ்வேறு விதமாக புரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இது மாற்றுத்திறனாளிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை சிக்கலாக்குகிறது. இந்த இடையூறுகள் இருந்த போதிலும் எல்லா மக்களிடத்தும் ஒத்துப்போகும் உணர்வு அலைகளை பயன்படுத்தி அதன் மூலம் எங்கள் செய்தியை அவர்களுக்கு தெரிவிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. அதே சமயம் நாம் சமூகத்துடன் பணிபுரியும் போது இந்த சமூகத்தின் நம்பிக்கைகளையும், கட்டமைப்பினையும் உணர்ந்து ஆக்கப்பூர்வமாக செயல்பட வேண்டும்.

விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தும்பொழுது எங்களது நோக்கம் அதிக மக்களின் கவனத்தை ஈர்த்தல், ஊனமுற்ற நபர்களிடத்து அவர்கள் அணுகும் முறை மற்றும் நடந்து கொள்ளும் விதத்தை மாற்றுவதில் கவனம் செலுத்துவதே ஆகும். விழிப்புணர்வு நிகழ்ச்சி பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்றால் தகவல்களை கூறுவதோடு மட்டுமல்லாமல், சொன்ன தகவல்களை மக்களின் மனதில் பதிய வைக்க வேண்டும். பதியவைப்பதென்றால் நாம் சொன்ன தகவல்களை மக்கள் நினைவில் கொண்டு, அதை நடைமுறைபடுத்த வேண்டும். முடிந்தவரை இதற்கேற்றபடியான பல உத்திகளை நாங்கள் கொடுத்திருக்கிறோம்.

- **கலை நிகழ்ச்சிகள்**

கலைநிகழ்ச்சிகளுக்குள் பல வகையான நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன. நம் சமூகத்தின் தன்மை மற்றும் நம் கலாச்சாரத்திற்கேற்ப தெருக்கூத்து, மைம் (சைகை), கதை சொல்லுதல் மற்றும் இசையுடன் கூடிய நாடகம் போன்ற சில கலை வடிவங்களை தேர்ந்தெடுக்கலாம்.

- **தெருக்கூத்து**

நவீன காலத்திற்கு முன்பிருந்தே தெருக்கூத்து என்பது விழிப்புணர்வை ஏற்படுத்த மிகவும் பயனுள்ள கருவியாக இருந்து வருகிறது. இவற்றிற்கு கட்டமைப்போ, தொழில்நுட்பமோ தேவையில்லை. இதன் மூலம் செய்தியை தெரிவிக்க தேவைப்படுபவை ஒரு இடம், இசை மற்றும் ஒரு குரல். அமர் சேவா சங்கம் மற்றும் பிற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்படும் கிராமப்புற இந்தியாவில், இந்த வகையான கலைநிகழ்ச்சி விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றது. ஒரு குழு அந்த சமூகத்தில் நிலவியுள்ள இயலாமை பற்றிய எண்ணங்கள் அல்லது சமுதாயத்தில் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை உள்ளடக்கிய கரு கொண்டு தெருக்கூத்து நடத்தும்.

- **மைம்**

மைம் எனப்படுவது சைகை கொண்டு நடிக்கப்படும் நாடகம் ஆகும். தெருக்கூத்தினால் ஏற்படும் அனைத்து நன்மைகளும் மைமிற்கும் பொருந்தும். இந்த கலைக்கு தேவையானவை மிதமான இசை மட்டுமே. பேசி நடிப்பவர்கள் (குரல்) தேவையில்லை. கலை வடிவமான இது ஒரு கருவியாக மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஏனெனில் இதன் மூலம் தெரிவிக்கப்படும் செய்திகளுக்கு குரல் தேவையில்லை. விழிப்புணர்வை ஏற்படுத்தப் பயன்படும் இந்த கலை, பேச்சு மூலம் மட்டுமே ஒரு செய்தியை தெரிவிக்க வேண்டியது அவசியமில்லை என்பதையும் உணர்த்துகிறது.

- **கதை சொல்லுதல்**

இது சமீப காலமாக மீட்டு எடுக்கப்பட்ட நமது பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றாகும். இந்த கலையானது மிகவும் திறமையான முறையில் குழந்தைகளுக்கு ஒழுக்கம் மற்றும் உயரிய மதிப்புமிக்க பண்பாடுகளை கற்பிக்கப் பயன்படுகிறது. கதை சொல்பவர்களுடன் கேட்பவர்களுக்கு உள்ள தொடர்பினால் இது தலைமுறை தாண்டி செய்திகளை தெரிவிப்பதில் மிகவும் பயனுள்ள கருவியாக இருந்து வருகிறது.

- **இசை**

சுற்றியுள்ள மக்களின் கவனத்தை ஈர்க்க இசை ஒரு சிறந்த கருவியாகும். இசையைப் பயன்படுத்த இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று விழிப்புணர்வு பிரச்சாரங்களில் பேசுவதற்கு முன் இசையை வாசிப்பது வழக்கமான ஒரு முறை. மற்றொன்று கூற விளையும் செய்திகளை பாடலின் வரியாக இசைத்துப் பாடுவது.

- **காணொளி/காட்சிகள்**

காட்சிகள் சில சமயங்களில் மக்களிடம் வார்த்தைகளை விட கருத்துகளை வேகமாக பகிர்கின்றன. ஏனெனில் மக்கள் எளிதில் நினைவுக்கூறக்கூடிய படங்களை நாம் பகிருவது மக்களின் கவனத்தை ஈர்க்கும். விழிப்புணர்வு நிகழ்ச்சியின் போது காட்டக்கூடிய சுவரொட்டிகள் மற்றும் கைகளில் கொடுக்கப்படும் துண்டு பிரசுரங்கள் சொல்ல நினைக்கும் செய்தியை தெரிவிக்கவும், மனதில் பதியச்செய்யவும் பயன்படுத்தக்கூடிய இரண்டு கருவிகள் ஆகும்.

- **துண்டுபிரச்சுரங்கள்**

படங்கள் கொண்டு சிறிய அளவில் இருக்கலாம். ஆனால் தனிப்பட்ட முறயைில் தாக்கத்தை ஏற்படுத்தும் வார்த்தைகள் கொண்டு செய்தியை தெரிவிக்கும் விதமாக அமைந்திருக்கும். இவை நிகழ்ச்சியில் பங்குகொள்ளும் சமூக உறுப்பினர்களுக்கு விநியோகிக்கலாம் மற்றும் பரந்த அளவில் பொது மக்களுக்கு வழங்கலாம்.

- **குறிப்பு அட்டை**

குறிப்பு அட்டை என்பது கற்றல் உதவி அட்டை ஆகும். இவை சிறியதாகவோ அல்லது முழுநீள காகிதமாகவோ அல்லது கணினி மின்னணு சாதனம் மூலம் வழங்கப்படும் விளக்கப்படமாக இருக்கும். விவாதிக்கப்படும் செய்தியை வரைபடம் மூலம் காட்டுவதே இதன் நோக்கம். இந்த கையேட்டில் நாங்கள் அளித்திருக்கும் செயல்பாடுகள் அதிகபட்சமாக மின்னட்டை சார்ந்த வரைகலையுடன் (graphics) சம்பந்தப்பட்டே இருக்கும். நீங்கள் அவற்றை பயன்படுத்திக கொள்ளலாம்.

- **சுவரொட்டிகள்**

பொதுமக்கள் அதிகம் நடமாடும்/கூடும் இடத்தில் ஒட்டப்பட்டால் அதிக நபரின் கவனத்தை ஈர்க்கும். படங்கள் சிறிதளவேனும் மிகவும் (அழுத்தமான/மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வார்த்தைகள் கொண்ட செய்திகளுடன் இருத்தல் அவசியம். அமர் சேவா சங்கம் இங்ஙனம் தயாரித்த சில சுவரொட்டிகள் உங்களுக்காக பகிரப்பட்டுள்ளன.

- **காணொளிப்படங்கள்**

குறும்படங்கள் மற்றும் இயலாமையிலும் சாதனை புரிந்த மாற்றுதிறனாளிகளின் ஊக்கம் அளிக்கும் காணொளிப்படங்கள் காண்பிக்கலாம். இவ்வாறு செய்வதால் அதிக நபர்கள் இவற்றைக் காண வழிவகுக்கும். அதே சமயத்தில் இவற்றில் காணொளி மற்றும் ஒலி கலந்து செய்திகள் பகிரப்படுவதால் அதிக ஈடுபாட்டுடன் மக்கள் இவற்றினைப் பார்ப்பார்கள். இந்த காணொளி காட்சிகள் சமூக வலைதளங்களிலும் பகிரலாம்.

- **விவாத மேடை**

ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் செய்திகளை பதியச்செய்வதற்கு பயன்படும் இன்னொரு எளிமையான கருவி விவாத மேடை ஆகும். இந்த விவாதம் மேடை மக்கள் செய்தியை நினைவில் வைத்துக் கொள்ளச் செய்வதுடன், பங்கேற்பாளர்கள் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களின் சந்தேகங்களைத் தெளிவுபடுத்தவும் மற்றும் தவறாக புரிந்து கொண்ட செய்திகளை நேரடியாக நிவர்த்தி செய்து கொள்ளவும், வழிவகுத்து சிறந்த குழுக்கற்றலை அனுமதிக்கிறது மேலும் விழிப்புணர்வு திட்டங்களை மேம்படுத்தவும், செம்மைப்படுத்தவும் உதவுகிறது.

விவாத மேடையின் கலந்துரையாடல்களின் போது புதிய முன்னோடியான கருத்துக்களைச் சேகரிப்பதற்காக பங்கேற்பாளர்களின் கேள்விகள், கருத்துகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் அவர்கள் பரிமாறும் கருத்துகளை கலந்துரையாட அனுமதித்தல் அவசியம். இருப்பினும் கலந்துரையாடலின் போது நாம் தெரிவிக்க விரும்பும் முக்கிய செய்தியினை கருப்பொருளை விவாதத்தில் முன்னிறுத்துதல் அவசியம். திசை திருப்பப்படாமல் இருப்பதை உறுதி செய்வது முக்கியம்.

ஒருவர் மட்டுமே கருத்துகள் தெரிவிக்கும் பேச்சு அல்லது கருத்தரங்கை விட மக்களின் கவனத்தை வெகு இலகுவாக ஈர்ப்பதில்லை மற்றும் ஒரு செய்தியை ஒருவரிடத்து பதிய வைக்க இயலாது. ஆனால் மேற்கூறப்பட்ட மற்ற கருவிகள் இலகுவாக ஒருவரை ஈர்க்க செய்வதிலும்,

கருத்தை பதிய வைப்பதிலும் விழிப்புணர்வில் அதிக பயனுள்ள விளைவுகளை ஏற்படுத்துவதிலும் சிறந்தது.

எந்த ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சியின் நோக்கமும் மக்களின் கவனத்தை ஈர்ப்பது. அவை மூலம் கூற விரும்பும் கருத்துக்களை பயனாளர்களிடத்து பதிய வைப்பதே ஆகும். எந்தவொரு விழிப்புணர்வு பிரச்சாரத்தின் வெற்றியும் மக்களின் பங்களிப்பை பொறுத்தே இருக்கும்.

மேற்குறிப்பிட்டுள்ள விழிப்புணர்வு கருவிகள், மிக குறைந்த செலவு மற்றும் குறைந்த தொழில்நுட்பம் மூலம் அனைவரிடத்தும் இலகுவாக கருத்துக்களை எடுத்து செல்ல வல்லது. இதன் காரணமாகவே விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தகுந்த முறையாக கருதப்படுகிறது. ஆகையால் இந்த கருவிகள் மூலம் நாம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தலாம்.

# 5. சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக மதிப்பீட்டு கேள்விகளை தயாரித்துள்ளோம். இந்த கேள்விகளை விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு முன் மற்றும் பின் கேட்க வேண்டும். பதில்களில் ஏற்படும் மாற்றத்தை அளவிடுவதன் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் தாக்கத்தை மதிப்பிடலாம்.

Enabling inclusion App உபயோகப்படுத்திக் கொண்டிருந்தால் உங்கள் பங்கேற்பாளர்களின் அறிவு மற்றும் அணுகுமுறைகளில் ஏற்படும் மாற்றத்தைக் கண்காணிப்பதற்காக மதிப்பீட்டு கேள்விகளுக்கான இரண்டு விடைகளையும் Enabling inclusion app–ல் பதிவு செய்யலாம்.

## மதிப்பீட்டு கேள்விகள்:

1. ஊனம் என்பது எல்லா வகையான சமூகங்கள் மற்றும் குடும்பங்களில் பொதுவானதாக காணப்படுகிறதா?
   a) ஆம் அனைத்து சமூகம் மற்றும் குடும்பங்கள் மத்தியில் காணப்படுகின்றன. (சரியான பதில்)
   b) இல்லை சில சமூகம் மற்றும் குடும்பங்களில் மட்டுமே காணப்படுகின்றன.

2. பின்வருவனவற்றும் எது ஊனம் ஏற்படுவதற்கான காரணம் இல்லை.

   a. விபத்துகள்
   b. விஷம்/மருந்து/மது
   c. சாபம் (சரியான பதில்)
   d. நோய்கள்.

3. ஊனமுற்ற நபருக்கு அல்லது ஊனமுற்ற குழந்தை உள்ள குடும்பங்களின் அணுகுவதில் எது சிறந்தமுறை?
   a. பச்சாதாபம்
   b. அனுதாபம்
   c.பரிதாபம்.

4. குறைபாடுடையவர்கள் செயல்படுதல் மற்றும் சமூகத்தில் பங்கேற்க இயலாததற்கு காரணம் என்ன?
   a. அவர்களின் உடல் மற்றும் மனநிலை குறைபாடுகள்.
   b. சமூகத்தின் அணுகுமுறை.
   c. உடல் மற்றும் மனநிலை குறைபாடு மற்றும் சமூகத்தின் அணுகுமுறை இரண்டும் (சரியான பதில்).

5. மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உரிமை உள்ளதா?
   a. இல்லை. பெரும்பாலான குறைபாடுகள் உள்ளவர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பைப் பெற இயலாது.
   b. இல்லை. இதற்கான உரிமை பற்றி இந்தியாவின் சட்டங்களில் இல்லை. ஆனால் அதை அடைய நாம் அவர்களை ஆதரிக்க முயற்சி செய்யலாம்.
   c. ஆம் இதற்கான உரிமை பற்றி சட்டங்களில் உள்ளது. அதை அடைய நாம் அவர்களை ஆதரிக்க வேண்டும். (சரியான பதில்).
   d. ஆம் ஆனால் அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டியது அரசாங்கம் மட்டுமே.

6. மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்ற குழந்தைகளுடன் பொதுவான பள்ளியில் படிக்க வேண்டுமா?
    a. ஆம். இதுவே சிறந்த அணுகுமுறை (சரியான பதில்)
    b. ஆம். ஆனால் மற்ற மாணவர்களுக்கு நல்லதல்ல.
    c. இல்லை. அவர்கள் அனைவரும் சிறப்புப்பள்ளியில் படிக்க வேண்டும்.
    d. இல்லை. அவர்கள் பள்ளிக்குச் செல்ல தேவையில்லை.

7. மாற்றுத்திறனாளிகளுக்கு சாத்தியமாக என்ன வேலைவாய்ப்புகள் உள்ளன.
a. கணினி வேலை
b. தொழிலாளர் வேலை
c. அரசியல்வாதி
d. மருத்துவர்
e. விஞ்ஞானி
f. நடிகர்
g. மேலே உள்ள அனைத்தும் (சரியான பதில்).

8. ஊனமுற்றவர்கள் திருமணம் செய்து கொள்ளலாமா?

a. இல்லை. அவர்களுக்கு திருமணத்திற்கான தகுதி இல்லை.
b. ஆம் ஊனமுற்ற நபர்கள் அனைவரும் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.
c. பல சூழ்நிலைகளில் இது சாத்தியம் மற்றும் இவை சமூகத்தால் ஆதரிக்கப்பட வேண்டும் (சரியான பதில்).
d. இதை அனுமதிக்கக்கூடாது.

9. நீங்கள் ஒரு குழந்தைக்கு சக்கர நாற்காலியைக் கொடுக்கறீர்களென்றால் அந்த சக்கர நாற்காலி

a. அவர்களை வாழ்நாள் முழுவதும் முடக்கிவிடும்.
b. தன்னிச்சையாக/சுதந்திரமாக அவர்கள் இயங்க மற்றும் செயல்பாடு அல்லது வளர்ச்சியில் அவர்கள் மேம்பட செய்யும் (சரியான பதில்).

10.மாற்றுத்திறனாளிகளுக்கு தங்களுக்கான திறனை அடைவதற்கு எவை வழி வகுக்கின்றன.

a) வளர்ச்சி தாமதம் மற்றும் குறைபாடுகளை ஆரம்பகாலங்களிலேயே கண்டறிதல்
b) சிகிச்சை முறைகள்
c) கல்வி
d) குடும்பம் மற்றும் அண்டை வீட்டாரின் ஊக்கம்.
e) அவர்களுக்கு ஏற்ற தங்கும் இடம்
f) பணியிடத்திலும், சமூகத்திலும் அவர்களது திறன்களை அங்கீகரித்தல்
g) மேலே கூறப்பட்ட அனைத்தும் (சரியான பதில்).

## சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கான செயல்பாடுகள்

**செயல்பாடு 1**

படி 1 : பங்கேற்பவர்களிடம் கேட்க வேண்டும் - குறைபாடுகள் உள்ளவர்கள் யார்?
"உங்களில் எத்தனை பேர் ஊனமுற்றவர்களை பார்த்திருக்கிறீர்கள், அவர்களை எங்கே பார்த்தீர்கள்?

படி 2 : பங்கேற்பவர்களிடம் கேட்க வேண்டும - "உங்கள் குடும்பம் மற்றும் உறவினர்கள், உங்கள் பெற்றோர், நண்பர்கள், அண்டை வீட்டார்கள், தாத்தா, பாட்டி, மாமாக்கள், அத்தைகள், மருமகன்கள், மருமகள்கள் மற்றும் உறவினர்கள் இவர்களில் யாருக்கேனும் உடல் இயக்கம், செவித்திறன், பார்த்தல், புரிந்து கொள்வது, கற்றல், சமூகத்துடன் பழகுதல் போன்றவைகளில் ஏதேனும் குறைபாடு உள்ளதா? அந்த குறைபாடு அதிகபட்சமாகவோ, குறைந்தபட்சமாகவோ, பிறப்பிலிருந்தோ அல்லது பிற்காலங்களிலோ ஏற்பட்டிருக்கலாம். யாருக்கு அந்த குறைபாடு உள்ளது/இருந்தது என்று சொல்லுங்கள்"?.

படி 3 : ஒரு பலகை அல்லது தாள்/அட்டையில் அவர்கள் கூறுவதை எழுதவும்.

இந்த செயல்பாட்டின் மூலம் மாற்றுத்திறனாளிகள் தங்கள் சமூகத்தில், சொந்தத்தில் மற்றும் குடும்பத்தில், நாம் நேசிக்கும் ஒரு நபராக, ஒரு அங்கமாக இருக்கிறார்கள் என்றும் அவர்கள் பிறரால் மதிக்கப்பட வேண்டும் மற்றும் நியாயமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்ற செய்தியை நாங்கள் அளிக்கிறோம்.

**செயல்பாடு 2:**

படி 1: பங்கேற்பவர்களிடம் கேட்க வேண்டும் - காணக்கூடிய மற்றும் கண்ணுக்கு தெரியாத ஊனங்கள், குறைபாடுகள் என்னனென்ன

படி 2 : பங்கேற்பவர்களிடம் கேட்க வேண்டும்.
ஊனம் என்பது உடல்ரீதியாக மட்டுமே உள்ளதா அல்லது வேறு வகையான குறைபாடுகள் உள்ளனவா?



உடல் ரீதியில் அல்லது பிற குறைபாடுகளின் வகைகள் என்ன?

படி 3 விளக்கம்:வெளிப்படையாக தெரியாத குறைபாடுகள் பற்றி விளக்கவும். இயலாமை என்ற சொல் குறிப்பிடப்படும் போதெல்லாம், பெரும்பாலான மக்கள் உடல் குறைபாடுகளைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறார்கள். ஏனெனில் இந்த குறைபாடு கண்ணினால் காணமுடியும். எல்லா குறைபாடுகளையும். கண்களால் காண முடிவதில்லை. கண்களால் காணமுடியாத இயலாமை என்பது ஒரு நபரின் இயக்கம், உணர்வு, செயல்பாடு இவற்றினைக் கட்டுப்படுத்தக்கூடிய அல்லது ஒருவரது இயல்பான வாழ்க்கைக்கு சவால்விடக்கூடிய ஆனால் வெளியில் தெரியாத உடல், மனது அல்லது நரம்பியல் நிலைகளால் ஏற்படுவதாகும். (துரதிஷ்டவசமாக வெளிப்படையாகத் தெரியாதவை என கருதப்படும் இந்த குறைபாடுகள் தவறான புரிதல்கள், தவறான பார்வை அல்லது முடிவுகளுக்கு வழிவகுக்கும்.).

**எடுத்துக்காட்டுகள்**

சிறுநீரகச்செயலிழப்பு, நாள்பட்ட வலி, நாள்பட்ட சோர்வு மற்றும் தூக்கக்கோளாறுகள் போன்றவை ஒருவரைச் செயலிழக்கச் செய்யும். ஆனால் இந்த காரணங்கள் கவனிக்கப்படாமல் இருக்கலாம். மேலும் நாம் அறிந்திராத (கேள்விப்படாத) சில குறைபாடுகளும் உள்ளன.

பங்கேற்பாளர்கள் கேட்கும் பட்சத்தில் அல்லது விவாதிக்க விரும்பினால் பணியாளர்களுக்கான பின்வரும் கூடுதல் தகவல்கள்.

**சிறுநீரகச்செயலிழப்பு**

சிறுநீரகங்கள் இரத்தத்தில் இருந்து கழிவுகளை நீக்கும் திறனை இழக்கின்றன.

**விளைவுகள்:**

நீண்டகாலம் பயன்படுத்தும் மருந்துகள் தேவைப்படலாம். டயாலிசிஸ் கழிவுகளை செயற்கை முறையில் நீக்குவது மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்.


நாள்பட்ட வலி : ஒற்றைத்தலைவலி, முதுகுவலி, முழங்கால் வலி போன்றவை நீண்டகால வலி நிலைகளாகும். பார்ப்பதற்கு அந்த நபர்களுக்கு எந்தவித குறைபாடுகளும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்களின் செயல்பாட்டின் நிலையில் பாதிப்புகள் இருக்கும்.

தூக்கக்கோளாறுகள் : வழக்கமான தூக்கம் சில காரணங்களால் பாதிக்கப்படுதல் அதாவது தூங்கும் நேரம், தூக்கத்தின் அளவு மற்றும் தூக்கத்தின் தன்மை ஆகியவற்றில் ஏற்படும் சிக்கல்களால் பகல்நேரத்தில் சோர்வு ஏற்படும் காரணத்தினால் செயல்பாட்டில் பாதிப்புகள் ஏற்படும்.

மனச்சோர்வு : மனச்சோர்வு என்பது துன்பஉணர்வு கொண்டிருத்தல் அல்லது சோர்வடைந்த மனநிலை ஆகும். மேலும் விரும்பி செய்யும் செயல்களில் ஈடுபாடு இல்லாமல் இருத்தல் போன்றவை. வெளிப்புறமாக இந்த மனநிலை கொண்ட நபர் நன்றாக செயல்படுவது போல் தோன்றலாம். ஆனால் அவர்கள் வேலை செய்ய முடியாமல் போகலாம். கண்ணுக்குத்தெரியாத நிலையில் அவர்களுக்கு மற்றவருடன் உள்ள உறவு பலவீனமடையலாம்.

படி 4 : பங்கேற்பவர்களிடம் கேட்க வேண்டியது

சமூகத்தில் எத்தனை சதவீதம் பேர் ஊனமுற்றவர்கள்?
அவர்களிடம் பதில்களைக் கேட்டப் பிறகு அவர்களிடம் கூறவேண்டியது. சமூகத்தில் 15% குறைபாடுடையவர்கள் அவர்களில் 4% பேர் குறைபாடுகளால் அதிகபட்ச செயல்பாட்டை இழந்தவர்கள்.




படி 5 : பங்கேற்பவர்களிடம் கேட்க வேண்டியது. “குறைபாடுகளால் அதிகம் பாதிக்கப்படுகின்ற சமூகம் எது”?

பதில் : அனைத்து சமூகங்களும் சமமாக பாதிக்கப்டுகின்றன. இந்தியா மற்றும் உலகெங்கும் உள்ள அனைத்து சமூகங்கள், குடும்பங்கள், நாடுகள், பிராந்தியங்கள், இனத்தவர்கள் அனைவரும் குறைபாடுகளால் பாதிக்கப்படுகின்றனர்.

(இந்த செயல்பாட்டின் நோக்கமானது கண்ணுக்குத் தெரியாத குறைபாடுகளைப் பற்றி மக்களுக்குக் கற்பிப்பதும் குறைபாடுகள் பொதுவாக இருப்பதை சுட்டிக்காட்டுவதும், அது அனைத்துச் சமூகங்களையும் எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் மேலும் இது விவாதிக்க வேண்டிய ஒரு பிரச்சனை என்பதை பங்கேற்பாளர்களை உணர வைக்க வேண்டும்.)

**செயல்பாடு 3**



**இயலாமைக்கான காரணங்கள்**

படி 1: பங்கேற்பவா்களிடம் கேட்க வேண்டியது.
ஒரு நபா் ஊனமுற்றவராக ஆவதற்கு காரணங்கள் என்ன?

படி 2: ஒரு பலகை அல்லது அட்டையில் பங்கேற்பாளா்கள் கூறுவதை எழுதிக்கொள்ளுங்கள்.

படி 3: அவா்களின் பதில்களை உண்மையான காரணங்கள் மற்றும் தவறான நம்பிக்கைகள் என வகைப்படுத்தவும்.

**உண்மையான காரணங்கள்**

விபத்துகள், வன்முறை, ஊட்டச்சத்து குறைபாடு, மரபியல் காரணிகள், பரம்பரை நோய்கள், சுற்றுச்சூழல், ஆபத்துகள், தொற்றுகள், பிறவியிலிருந்து வ்நதவை, சுகாதார பராமரிப்புகளை அலட்சியம் செய்தல் (நோய்த்தடுப்பு மருந்துகளை பெறாதது, பிரசவம் மற்றும் பராமரிப்புகளை அலட்சியம் செய்தல்). விஷம்/மருந்து/மது/நீரிழிவு/பக்கவாதம் போன்ற நோய்கள், வயது தொடா்புடைய மூட்டுவலி.


**தவறான நம்பிக்கைகள்**

க்ர்ப்ப காலத்தில் சில செயல்களைச் செய்தல், தாய்மாா்களின் பழக்கவழக்கங்கள், முறையான பிராா்த்தனை மற்றும் சடங்குகளை செய்யாததால் சாபங்கள் அல்லது பெற்றோா்/முன்னோா்களின் பாவங்கள், சில உணவுகளை உண்பதால் தாய் ஒரு நல்ல பெண் இல்லை என்ற எண்ணம்.

(இயலாமையைப் பற்றிய தவறான நம்பிக்கைகளை அகற்ற இந்த செயல்பாடு முயற்சிக்கிறது).

**பணியாளா்களுக்கான கூடுதல் தகவல்**

- ஓவ்வொரு சமூகத்திலும் குறைபாடுகள் பற்றிய பல விதமான நம்பிக்கைகள் இருக்கின்றன. இது சமூகத்திற்கு சமூகம் மாறுபடலாம்.
- இந்த தவறான நம்பிக்கைகள் காரணமாக, மக்கள் தங்களுக்குப்பயனளிக்கும் சிகிச்சை/தலையீடுகளைப்பெறத் தயாராக இல்லாமல் இருக்கலாம். குற்ற உணா்வானது மனச்சோா்வு மற்றும் மோசமான செயல்பாட்டிற்கு வழிவகுக்கும்.



- சமூக மறுவாழ்வு பணியாளர்கள் தங்களுடைய சமூகத்தில் இருக்கும் இது போன்ற நம்பிக்கைகளை பட்டியலிட வேண்டும். இந்த நம்பிக்கைகள் சரியானதா அல்லது தவறானதா என்ற சந்தேகம் இருந்தால் தயவுசெய்து உங்கள் நிபுணர்கள் அல்லது பிற திட்ட மேலாளர்களிடம் கேளுங்கள். இது உங்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தும் போது உங்கள் சமூகம் சார்ந்த நம்பிக்கைகளுக்கு மக்களுக்கு சரியான புரிதலை ஏற்படுத்த உதவும்.

குறிப்பு: இந்த செயல்பாடு 3-ஐ தெரு நாடகமாகவும் நடத்தலாம்.

**செயல்பாடு – 4**

ஊனம் என்றால் என்ன?

படி1: இவ்வளவு நேரம் ஊனத்தைப்பற்றிய பேசிகொண்டிருக்கிறோம், அவற்றின் வரையறை என்ன?

படி2: “ஒரு நபரின் இயக்கங்கள், அறிவுத்திறன், உணர்வுகள் அல்லது செயல்பாடுகளில் உள்ள குறைபாடுகளை நாம் குறைபாடுகள் என்றே குறிப்பிடுகிறோம்.


படி3: ஒருவரது குறைபாடுகள் மட்டுமே அவரை ஊனமுற்றவராக ஆக்குகிறதா? அல்லது தங்கள் சமூகம் அமைந்துள்ள விதத்தால் ஊனமுற்றவராக ஆகிறாரா?. சமூகம் ஒருவரை எங்ஙனம் ஊனமுற்றவராக மாற்றுகிறது என்பதற்கு உதாரணம் தரவும்.

படி4: உதாரணம்

சக்கர நாற்காலி பயன்படுத்தும் ஒரு நபர் படிகள் உள்ள ஒரு கட்டிடத்தினுள் நுழைவதோ, மிகவும் உயரமான சிங்க்கை பயன்படுத்துவதோ இயலாது. இது அவர்களை முடக்குகிறது. இதனாலேயே இவர்கள் ஊனமுற்றவர்களாக ஆகின்றனர். ஆனால் ஒரு சாய்வு தளம் அமைப்பது மற்றும் தாழ்வான சிங்குகளை கட்டுவது, அந்த செயல்களை அந்த நபர் செய்வதை இயன்றதாகிவிடும்.

படி5: “நீங்கள் கண்ணாடி அணிந்திருந்தால் உங்கள் கைகளை உயர்த்தவும். கைகளை உயர்த்தி இருக்கும் நபர்களிடம் கேளுங்கள் கண்ணாடி அணிந்திருப்பதால் உங்களை ஊனமுற்றவராக கருதுகிறீர்களா?”

படி6: உங்களுக்கு கண்ணாடிகள் வழங்கப்படவில்லை என்றால், நீங்கள் மூடக்கப்படுவீர்கள், ஏனென்றால் உங்களால் பார்க்க முடியாது. சமூகம் ஒருவரின் இயலாமையை போக்குவதில் பங்கு வகிக்கிறது. ஆகையால் தனிநபரின் குறைபாட்டை விட சமூக சூழ்நிலைகளே இயலாமைக்கு முக்கிய காரணமாக அமைகிறது.




(இந்த செயல்பாடு இயலாமையை வரையறுக்கிறது. இயலாமை என்பது ஒரு நபரின் குறைபாட்டுடன் தொடர்புடையது மட்டும் அல்ல என்றும் அது அவர்கள் சமூகத்தை சார்ந்தது என்பதை பங்கேற்பாளர்கள் புரிந்து கொள்ளச்செய்கிறது.)

**செயல்பாடு – 5**

பச்சாதாபமா? ஏள அனுதாபமா? பரிதாபமா? பங்கேற்பவர்களிடம் கேட்கவும்.

படி1: "மாற்றுத்திறனாளிகளைப்பார்க்கும் பொழுது உங்கள் உணர்வு என்ன?"

படி2: பிறர் பொது இடங்களில் மாற்றுத்திறனாளிகளைப்பார்க்கும் பொழுது அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

படி3: பங்கேற்பவர்களிடம் கேட்கவும் பச்சாதாபம் - அனுதாபம் - பரிதாபம் என்றால் என்ன?

1. பரிதாபம் என்பது ஒருவரின் நிலைமை அல்லது நிலைக்காக வருத்தப்படுவது.
2. அனுதாபம் என்பது யாரோ ஒருவருக்கு ஏதாவது கெட்டது நடக்கும் போது அக்கறை காட்டுவதாகும்.
3. பச்சாதாபம் என்பது உங்களை மற்றொருவரது இடத்தில் வைத்து பார்ப்பது (அவர்களது முன்னோக்குகளை முழுமையாக புரிந்து கொள்வது).

படி4: பின்வரும் படங்களை அவர்களுக்குக்காட்டுங்கள்.



படம்1: பரிதாபம்

யாரோ ஒருவருக்காக அவர்களை நினைத்து வருத்தப்படுகிறேன்.

படம்2: அனுதாபம்

மற்றொருவர் மீது அக்கறை காட்டுதல்




படம்3: பச்சாதாபம்

ஒருவரின் நிலைமையை அவர்கள் இடத்திலிருந்து பார்ப்பது.




படி4: இந்த படங்களில் எது பரிதாபம், எது அனுதாபம் எது பச்சாதாபம் என்று கேளுங்கள்.

படம்1 – பரிதாபம்

படம்2 – அனுதாபம்

படம்3 – பச்சாதாபம்

படி5: பார்வையாளர்களிடம் கேட்கவும். இந்த 3-ல் (பச்சாதாபம், அனுதாபம் மற்றும் பரிதாபம்) எது சிறந்தது?

பதில்: ‘‘பச்சாதாபம்’’

ஏனென்றால் நாம் ஒருவரின் நிலையிலிருந்து பார்க்கும் பொழுது தான் அவர்களின் முன்னோக்கைப் புரிந்து கொள்ள முடியும். அப்பொழுது தான் நீங்கள் அவர்களுக்கு உண்மையிலேயே உதவ முடியும்.


(இந்த செயல்பாடு அனுதாபம், பரிதாபம் மற்றும் பச்சாதாபம் ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டைக் கற்பிக்கிறது. மேலும் இந்த உணர்வுகள் மாற்றுத்திறனாளி நபருக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுவதற்கு எவ்வாறு வழிவகுக்கிறது என்பதையும் வலியுறுத்துகிறது.)

**செயல்பாடு – 6**

மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கையில் உள்ள சவால்கள்.

படி1: பங்கேற்பவர்களிடம் கேட்கவும்.

‘‘சமூகத்தில் குறைபாடுகள் உள்ளவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன’’?. பங்கேற்பாளர்கள் கூறுபவைகளை ஒரு பலகை அல்லது அட்டையில் எழுதவும்.




படி2: இதுவரை கூறப்படாத சில உதாரணங்களை கொடுங்கள்.

கேலி செய்தல் (உதாரணமாக ஒரு நபரை காது கேளாதவர் (செவிடு) அல்லது பார்வையற்றவர் (குருடு) என்று அழைப்பது அல்லது அவர்களிடம் உங்களை யார் இங்கு அழைத்தார் என்று பரிகாசம் செய்தல்.

- மாற்றுத்திறனாளிகளின் திறன்களைக் குறைத்து மதிப்பிடுதல் (உதாரணமாக, அறிவாற்றல் குறைபாடு உள்ள ஒருவர் சமுதாயத்தில் ஒரு ஆக்கபூர்வமான நபராக இருக்க முடியாது என்று கருதுவது).
- வகுப்பறைகளில் மாற்றுத்திறனாளி குழந்தைகளை அலட்சியப்படுத்துதல் மற்றும் அவர்களுக்கான வசதிகளை மறுத்தல்.
- மக்கள் ஊனமுற்ற நபரைப் பார்ப்பது ஒரு கெட்ட சகுனம் என்று நினைப்பது.
- சுற்றுப்புறச்சூழலில் உள்ள தடைகள் (அலுவலக நுழைவாயிலில் உள்ள படிகள், சக்கர நாற்காலி பயன்படுத்துமிடத்தில் சிறிய வாசல் உள்ள கதவுகள், பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கு பரெய்லி புத்தகங்கள் இல்லாமை, செவித்திறன் குறைபாடு உள்ளவர்க்கு சைகை கொண்ட குறிப்புகள் இல்லாமை.)
- திறன் இல்லாதவர் என்ற தவறான கருத்து காரணமாக வேலை வாய்ப்புகள் மறுக்கப்படுதல்.
- துன்புறுத்தல்கள் - உடல் ரீதியாக பாலியல் துன்புறுத்தல்கள் வார்த்தை மற்றும் உணர்ச்சி பூர்வமான துன்புறுத்தல்கள் குறைபாடுகள் உள்ளவர்கள் அதிகமாக சந்திக்கின்றனர்

படி3: பங்கேற்பவர்களிடம் கேட்க வேண்டியது.

“மாற்றுத்திறனாளி நபரைக்கொண்ட குடும்பங்கள் என்ன சவால்களை எதிர்கொள்கின்றன”? பங்கேற்பாளர்கள் கூறுபவைகளை ஒரு பலகை அல்லது அட்டைகளில் எழுதிக்கொள்ளலாம்.

படி4: சொல்லப்படாத சில உதாரணங்களைக் கொடுக்கலாம்.

- கொடுமைப்படுத்துதல் - வீட்டில் உள்ள மற்ற குடும்ப உறுப்பினர்கள் பெற்றோரை விமர்சிப்பது அல்லது மாற்றுத்திறனாளிகளை விமர்சிப்பது.
- மாற்றுத்திறனாளிகளை மெதுவாக நேரம் கழித்து கவனிப்பது.
- சமூகம் அவர்களை நிராகரிப்பது – குழந்தைகளை ஒன்றாக விளையாட அனுமதிக்க மறுப்பது.
- இயலாமைக்கு தாய் / குடும்ப உறுப்பினரைக் குற்றம் சாட்டுதல் (கர்ப்ப காலங்களில் உனது குடும்பம் உன்னை கவனிக்கவில்லை)
- அதிகமான செலவுகள் (மருத்துவ சிகிச்சை உதவி சாதனங்கள்)
- அரசாங்கத்திடம் பணம் பெறுவதாக / சலுகைகள் பெறுவதாக சமூகம் ஏளனம் செய்தல்.
- மக்கள் மாற்றுத்திறனாளிகள் நடிக்கிறார்கள் என்று கூறுவது.
- போக்குவரத்து:

பள்ளி/கல்லூரி, மருத்துவம், கடை வீதிகளுக்கு செய்தல், நண்பர்களை, சந்தித்தல், பொழுதுபோக்கு போன்ற காரணங்களுக்காக பல நேரங்களில் பயணம் இன்றியமையாததாகிறது. பொது போக்குவரத்து மிகவும் மலிவு. ஆதலால் நாம் பயன்படுத்த விரும்புகிறோம். மாற்றுத்திறனாளிகளுக்கும் இதே நிலைதான். மாற்றுத்திறனாளிகள் பொது போக்குவரத்தைப் பயன்படுத்தும் பொழுது பயணம் தாமதமாவதால், பெரும்பாலான மக்கள் அவர்கள் பொது போக்குவரத்தில் பயணம் செய்வதை விரும்புவதில்லை. பொதுபோக்குவரத்து சாதனங்களை அனுகல் தன்மையுடன் இல்லாததால் மாற்றுத்திறனாளிகள் ஏறி இறங்க கால தாமதமாகிறது.

- மாற்றுத்திறனாளிகளை கவனிப்பது கூடுதல் வேலையாக அமைகிறது. உதாரணமாக பெரும்பாலான தாய்மார்கள் மற்றும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை 2-3 வயது வரை தூக்கிச்செல்வார்கள். அதன் பிறகு தமது மேற்பார்வையில் குழந்தைகளை நடத்திச்செல்வார்கள். ஆனால் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்கள் அவர்கள் 15வயது அல்லது அதற்கு மேலும் மாற்றுத்திறனாளி குழந்தைகளை தூக்கிச்செல்ல வேண்டிய சூழ்நிலை நம் நாட்டில் இருக்கிறது. மாற்றுத்திறனாளி குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களில் விவாகரத்து மற்றும் பெற்றோர் பிரிந்து செல்லுதல் மிகவும் பொதுவானதாக உள்ளது.
- சமூகம் அல்லது மத நிறுவனங்களுக்கு செல்லுதல், (அதாவது கோயில்,மசூதி, தேவாலயம் போன்ற இடங்கள்) பொழுதுபோக்கு, மற்றும் சுற்றுலா (அதாவது திரைப்படங்கள், பூங்காக்கள் செயல்பாடுகள்) மிகவும் சவாலாக உள்ளது. இது போக்குவரத்து மற்றும் கட்டிடங்கள் அணுகல் தன்மையில்லாததாலோ அல்லது பெற்றோர்கள் இவர்களை களங்கமாக எண்ணுவதாலோ இருக்கலாம். (உதாரணமாக நடத்தை சிக்கல்கள் உள்ள குழந்தைகள் பொது இடங்களுக்கு வருவதை மற்றவர்கள் விரும்புவதில்லை அல்லது அனுமதிப்பதில்லை). மேற்கூறிய செயல்பாடுகள் மாற்றுத்திறனாளிகளுக்கு அவசியமில்லை என்று சமூகமும் நினைக்கலாம். இவ்வாறான செயல்பாடுகள் மற்றவர்களுக்குப்போலவே மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்ப நல்வாழ்விற்கு மிகவும் அவசியம் ஆதலால் இவ்வகை செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்காக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு அனைவருக்கும் பொதுவானது. மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் எவ்வாறு சிகிச்சையளிக்கப்படுகிறது என்று எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? பெரும்பாலும் சுகாதார சேவைகளை அணுகுவது மாற்றுத்திறனாளிகளுக்கு மிகவும் சவலாகவே உள்ளது.
- ஒவ்வொருவரின் வளர்ச்சிக்கும் கல்வி அவசியம். பெரும்பாலும் மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு கல்வி மறுக்கப்படுகிறது அல்லது சிறப்புப் பள்ளியில் படிக்கும்படி

வலியுறுத்தப்படுகிறார்கள். ஆகையால் மாற்றுத்திறனாளிகள் கீழ்க்கண்ட சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

- தவிர்ப்பு / தட்டிகழிப்பு
- பாகுபாடு
- தாழ்வு மனப்பான்மை
- பழமை எண்ணங்கள்
- குற்றம் சாட்டுதல்

இன்னொரு புறம் மாற்றுத்திறனாளிகள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் சமூகத்தில் அலட்சியமாக நடத்தப்படுவதாக கருதுகிறீர்களா?

படி5:

இந்த சவால்களினால் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்கள் குடும்பங்களில் ஏற்படும் விளைவுகள் என்ன?

- சிகிச்சை / கல்வி / வேலையைத்தொடர மாற்றுத்திறனாளிகள் விரும்புவதில்லை
- சமூகத்தில் பங்கேற்பதையும் அதனுடன் இணைவதையும் விரும்புவதில்லை
- மாற்றுத்திறனாளியான தங்கள் குழந்தையைப் பராமரிக்க விரும்புவதில்லை. எந்த சிகிச்சை தலையீடும் இல்லாமல விடுதல் / அவர்களை கைவிடுதல்.
- வறுமை, பாகுபாடு மனஅழுத்தம் மற்றும் மனநல பாதிப்பிற்கு உள்ளாகுதல்.
- தம்பதிகள் பிரிதல்
- மகிழ்ச்சியற்ற குடும்பங்கள்
- மாற்றுத்திறனாளியான குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் குடும்ப அமைப்பிலிருந்து வெளியேற்றப்படுதல்.
- மாற்றுத்திறனாளிகள் தங்களின் உண்மையான திறனை அடைய முடியாமல் போகுதல்.

மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் மக்கள் தொடர்பு படுத்தி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உடல் மற்றும் உணர்ச்சித்தேவைகளை உணர வைப்பதே இந்தச்செயல்பாட்டின் நோக்கமாகும்.

பணியாளர்களுக்கான கூடுதல் தகவல்:

**சமூகத்தில் ஒதுக்குதல்:**

மாற்றுத்திறனாளிகளை சமூக நடவடிக்கைகளில் இருந்து விலக்குதல் புலப்படக்கூடிய குறைபாடு உள்ள ஒருவருடன் நேருக்கு நேர் பார்ப்பதற்கு அல்லது உரையாடுவதற்கு மக்கள் தயங்குதல்.

**தவறான கருத்துக்களை கொண்டிருத்தல்:**

மாற்றுத்திறனாளிகள் உதவியற்றவராகவோ தங்களைக்கவனித்துக் கொள்ள முடியாதவராகவோ அல்லது தங்களால் சொந்த முடிவுகளை எடுக்க முடியாதவராகவோ கருதப்படுகின்றனர். ஒரு குறைபாடு உள்ள நபர் மற்ற சில குறைபாடும் உள்ளவர்களாக கருதப்படுகின்றனர். அதாவது பேசுவதில் குறைபாடுடையவர்கள் அறிவுசார் குறைபாடும் உடையவர்கள் என்பதை போன்று கருதப்படலாம்.

**பாகுபாடு**

மாற்றுத்திறனாளிகள் பற்றிய தவறான அனுமானங்கள் மற்றும் கண்ணோட்டங்களால் வேலைவாய்ப்புகள் மறுக்கப்படுதல், தங்குவதற்கு வீடு வாடகைக்கு கிடைக்காத நிலை மற்றும் இன்னபிற சமுகத்தில் இருந்து கிடைக்க வேண்டிய வாய்ப்புகள் மாற்றுத்திறனாளிகளுக்கு மறுக்கப்படுகிறது.

**தாழ்வு மனப்பான்மை, குறைத்து மதிப்பிடுதல்**

மாற்றுத்திறனாளிகள் ஏதுவும் செய்ய இயலாதவர்கள் என்று குறைத்து மதிப்பிடுவது மற்றும் எப்போதும் அவர்களை அதிகமாக பாதுகாத்தல்.

**குற்றம் சாட்டுதல்:**

மாற்றுத்திறனாளிகளின் இந்நிலைக்கு அவர்களே காரணம் என்றும் அவர்கள் தங்களது இல்லாமையை பயன்படுத்தி நியாயமற்ற வகையில் பலன்களை பெற்றுக்கொள்வதாக குற்றம் சாட்டுவது.

**தன்னைத்தானே நொந்து கொள்ளுதல்:**

மாற்றுத்திறனாளிகள் தங்களின் இயலாமை பற்றி மற்றவர்கள் கூறும் எதிர்மறையான நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்ளுதல், அதைப்பற்றி வெட்கப்படுதல் அல்லது சங்கடப்படுதல்.

(இந்த பகுதி மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக்காட்டுகிறது.)

**செயல்பாடு 7**

**(உத்வேகம்) ஊக்கமளிக்கின்ற கதைகள்**

படி 1:

மாற்றுத்திறனாளிக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின்றது என்று பங்கேற்பாளர்களிடம் கேளுங்கள். அவர்கள் கூறுவதை ஒரு பலகை அல்லது அட்டைகளில் எழுதிக்கொள்ளுங்கள்.

படி 2:

கீழ் உள்ளவற்றை விளக்கமாக பார்வையாளர்களுக்கு கூறுங்கள்

- தங்கள் சொந்த முடிவுகளை தாங்களே எடுத்தல்
- கல்வி பெறுதல்
- பல்கலைக்கழகம் உடல்கல்வி கற்றல்
- மருத்துவம் மற்றும் சுகாதார பாதுகாப்பு பெறுதல்
- வேலைவாய்ப்பு
- டாக்டராக, பொறியியலாளராக, தொழிலதிபராக, விஞ்ஞானியாக, ஆசிரியராக, சமையல்காரராக, துப்புரவுத்தொழிலாளியாக அல்லது வேறு ஏதாவது வேலை செய்பவராக இருத்தல்.
- தங்களது குடும்பநலத்துக்காக பணம் சம்பாதிப்பவராக இருத்தல்
- திருமணம் செய்து கொள்ளுதல்
- சொந்தமாக சொத்து கொண்டிருத்தல்
- சுயமாக வாழ்தல்
- சுதந்திரமாக (யார் உதவியும் எதிர்பாராமல்) இருத்தல்
- உடலுறவு கொள்ளுதல், குழந்தைகள் பெற்றுக்கொள்தல்
- கோவில், தேவாலயம், மசூதிக்கு செல்லுதல்
- ஒரு அமைப்பின் தலைவராக இருத்தல்
- நாட்டின் தலைவராக இருத்தல்

படி 3

நம் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலையில் மாற்றுத்திறனாளிகள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட விஷயங்களில் பங்கேற்கத்தேவையான பொருத்தமான வசதிகளை செய்து தருவது அவசியமா?

படி 4

ஆம், பங்கேற்கத் தேவையான பொருத்தமான வசதிகளைப்பெறுவது மாற்றுத்திறனாளிகளின் உரிமை ஆகும். சமுதாய மக்களுக்கு மாற்றுத்திறனாளிகள் பற்றிய புரிதல் இல்லாததாலும் அலட்சியமாக விட்டு விடுவதாலும் இந்த சட்டங்கள் மற்றும் கொள்கைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த இயலவில்லை. இதை நடைமுறைப்படுத்த நாம் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

படி 5

பங்கேற்பவரிடம் கேளுங்கள்

மேல் குறிப்பிட்ட உரிமைகளில் சிலவற்றை தங்கள் இயலாமையையும் பொருட்படுத்தாது

சாதித்து காட்டிய மாற்றுத்திறனாளிகள் யாரேனும் உங்களுக்குத்தெரியுமா?

படி 6

மாற்றுத்திறன் கொண்ட சாதித்த நபர்கள் கொண்ட மின்னட்டை அல்லது சுவரொட்டிகளைக் காண்பிக்கவும்.

## ஊக்கமளிக்கும் கதைகள்

பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமான மற்றும் மற்றவர்களைப்போல் சிறந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் மாற்றுத்திறனாளிகள் பலர் எடுத்துக்காட்டுகளாக வாழ்கின்றனர்.

குடும்பம், சமூகம் மற்றும் அவர்களின் பள்ளிகளிலிருந்து பெற்ற ஆதரவின் காரணமாக, பொருளாதார ரீதியாக ஆக்கம் கொண்டவராக, பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள மாற்றுத்திறனாளிகளின் கதைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சமூகத்தில் உள்ள சாதனை புரிந்த மாற்றுத்திறனாளிகளைப் பற்றிய சுவரொட்டிகளை பங்கேற்பாளர்களிடம் பகிரவும்.

எல்லா கதைகளையும் பற்றிய பேச நேரம் போதவில்லையென்றால் பார்வையாளர்களை கவரக்கூடிய கதைகளை ஆலோசிக்க நீங்கள் தேர்வு செய்யலாம்.

### மாற்றுத்திறனாளிகளின் சுயவிவரங்கள்

**திரு. பத்மஸ்ரீ ராமகிருஷ்ணன்**



கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூயில் இறுதியாண்டு படித்துக்கொண்டிருந்தேன். கடற்படை ஆட்சேர்ப்பு சோதனை பயிற்சியின் போது கீழே விழுந்து தண்டுவடத்தில் பல இடத்தில் காயங்கள் ஏற்பட்டன. இதன் விளைவாக கழுத்துக்குக் கீழே முழுவதும் உணர்ச்சி மற்றும் அசைவுகள் முழுமையாக பாதிக்கப்பட்டு விட்டது. ஆனால் நான் என் தைரியத்தையும் உற்சாகத்தையும் இழக்கவில்லை. தீவிர சுய மறுவாழ்வு பயிற்சிக்குப்பிறகு சமுதாயத்திற்கு நான் சேவை செய்ய விரும்பினேன் மற்றும் என் எஞ்சியிருக்கும் வாழ்வை அர்த்தமுள்ளதாக செலவிட விரும்பினேன். எனது பகுதியில் உள்ள சமூகத்தில் வசதியற்ற பிரிவினருக்கு உறுதியான மற்றும் உண்மையிலேயே பயனுள்ள ஒன்றைச்செய்ய நான் முடிவு செய்தேன்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் ஆண்டான 1981-ம் ஆண்டு எனது மருத்துவரான ஏர் மார்ஷல் டாக்டர் அமர்ஜித் சிங் சாஹாலின் பெயரில் அமர் சேவா சங்கத்தை தொடங்கினேன். இது தமிழ்நாடு சங்கம் பதிவுச்சட்டம் 1975-ல் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அமர் சேவா சங்கம் இதுவரை 1,50,000 க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை பூர்த்தி செய்திருக்கின்றது.

**திரு.சங்கர ராமன்**



நான் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு 12 வயதிலிருந்தே சக்கர நாற்காலியைப் பயன்படுத்துகிறேன். நடக்க முடியாத ஒருவரால் வகுப்புக்குச் செல்லவும், பள்ளியைச் சுற்றிவரவும் வசதிகள் இல்லை என்றும் பள்ளி நிர்வாகத்தால் பள்ளி படிப்பு எனக்கு மறுக்கப்பட்டது. இருப்பினும் எனது பெற்றோர் நான் பள்ளியில் கல்வி பயில நிறைய முயற்சித்தனர். ஆனாலும் பள்ளியில் சென்று கல்வி பெற இயலவில்லை. ஆனால் எனது பெற்றோரின் ஆதரவுடன் வீட்டிலேயே கல்வி பயின்று CA inter க்கான சிறப்பு உதவித்தொகையை வென்றேன். மற்றும் Chartered Accountant இறுதித்தேர்வில் தங்கப்பதக்கம் வென்று பட்டைய கணக்காளராக ஆனேன். எனது இயலாமையானது நான் விரும்பியதை அடைவதற்கு ஒருபோதும் தடையாக இருந்ததில்லை. என் வாழ்நாட்களில் எனது பெற்றோர்கள் குறிப்பாக எனது தந்தையின் ஆதரவும் ஊக்கமும் இருந்தது. அமர் சேவா சங்கத்தைச் சேர்ந்த திரு. எஸ் ராமகிருஷ்ணன் அவர்களைச் சந்தித்ததே எனது வாழ்வின் திருப்புமுனையாக அமைந்தது. கழுத்துக்கீழே முடங்கிய நிலையிலும் ஊனமுற்றோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான முன்னேற்றத்திற்காக அவர் கொண்ட ஊக்கத்தையும், தொலை நோக்கு பார்வையையும் கண்டு மெய்சிலிர்த்தேன். ஆரம்பத்தில் ஆய்க்குடியில் உள்ள அமர் சேவா சங்கத்தில் சில மாதங்கள் மட்டுமே தங்கி பதிவேடுகளைப் பராமரிப்பதற்கும், கணக்குப் பார்ப்பதற்கும் உதவ திட்டமிட்டிருந்தேன். ஆனால் வாழ்க்கையின் நல்விதி இன்றும் நான் அங்கு இருந்துகொண்டு 1,50,000 மாற்றுத்திறனாளிகளை சென்று அடையும் வண்ணம் உலகளவில் அங்கிகரிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பாக நிறுவனத்தை வழிநடத்துகின்றேன். நான் இங்கு பணிபுரிய தொடங்கும் பொழுது எனக்கு திருமணம் ஆகும் என்று நினைத்ததில்லை, விதியின் வசத்தால் ஒரு தொலைக்காட்சியில் எனது பேட்டியைக்கண்ட இளம் பெண் ஒருவர் என்மீது காதல் கொண்டார். புஷ்பா அவர்களை மகிழ்ச்சியாக நான் மணந்து கொண்டேன். இவர் அமர் சேவா சங்கத்தில் எனக்கும் எனது பணிக்கும் உறுதுணையாக இருக்கிறார்.

**தீபக்**



நான் மூளை முடக்குவாதம் கொண்டவர். சென்னையில் உள்ள வித்யாசாகர் என்ற சிறப்புப்பள்ளியின் முன்னாள் மாணவர். மேற்கு மாம்பலத்தில் உள்ள ஜெய்கோபால் க்ரோடியா இந்து வித்யாலயாவில் பள்ளிப்படிப்பை முடித்தேன். ஆசியன் காலேஜ் ஆ.ஃப் ஜர்னலிசத்தில் பட்டம் பெற்ற பின்பு லயோலா கல்லூரியில் ஆங்கிலத்தில் முதுகலைப்படிப்பை முடித்தேன். நான் தற்போது தி இந்து நாளிதழின் விளையாட்டு பக்கத்தின் மூத்த துணை ஆசிரியராகப் 2012 லிருந்து பணிபுரிகிறேன். என் மனதுக்கு பிடித்த வேலை செய்வது எனது பாக்கியம். இன்று நான் இவ்விடத்தில் இருப்பதற்கு, என்னை மாற்றியமைப்பதிற்கு சமூகத்துடன் ஒருங்கிணைந்த வாழ்வின் பங்கு மிகப்பெரியது. மேலும் அது எனது உரிமைகளைக் கேட்கக் கற்றுக்கொடுத்தது. இதனால் எனக்கு பல புதிய பாதைகளும், சாத்தியக்கூறுகளும் அமைந்தன. மேலும் நான் சமூகத்திற்கு பங்களிக்கக்கூடிய ஒரு உறுப்பினராக இருப்பதற்கான வாய்ப்பை பெற்றேன்.

**ஆறுமுகம்**



என் பெயர் ஆறுமுகம். பிறப்பால் குள்ளத்தன்மை கொண்டு பிறந்த நான் ஓரளவு பெரியவளாகும் வரை மற்றவர்களிடமிருந்து எந்த வித்தியாசத்தையும் உணர்ந்ததில்லை. அமர் சேவா சங்கத்தில் உள்ள ஒருங்கிணைந்த கல்வி பயிற்றுவிக்கும் சிவ சரஸ்வதி வித்யாலயாவில் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றேன். இந்த பள்ளியில் என்னை அனைவரும் ஆதரித்து மற்ற குழந்தைகளை நடத்துவது போன்றே என்னையும் நடத்தினர். எனது உயர்நிலை கல்விக்காக நான் ஓர் அரசுப்பள்ளியிக்குச் சென்றேன். அங்கு தான் நான் என்னை மற்ற குழந்தைகளிடமிருந்து மாறுபாடாக உணர்ந்தேன். ஏனெனிலில் பள்ளி வளாகத்தில் உள்ளவர்கள் என்னைப் போன்ற குறைபாடுகள் உள்ளவர்களை அதிகம் பார்த்ததில்லை. இதனால் மற்றவர்கள் என்னை கிண்டல் செய்வார்கள் அல்லது என் மீது அனுதாபம் காட்டுவார்கள். இவை இரண்டும் என்னை என் சமூகத்திலிருந்து விலகி இருப்பதாக உணர வைத்தது. இந்த சூழ்நிலையில் எனது சக மாணவர்கள் என்னை புரிந்து கொண்டனர். ஆனால் சிறு குழந்தைகளுக்கு என்னுடன் எப்படி பேசுவது என்று தெரிந்திருக்கவில்லை. அதனால் என்னை கேலி செய்தார்கள். இந்த சூழ்நிலையை சமாளிக்க சிரமமாக இருந்தது. பிறகு நான் சிறப்பு கல்வியில் டிப்ளமோ செய்ய முடிவெடுத்தேன். ஏனெனில் குறைபாடுள்ள குழந்தைகள் கற்பதற்கும்

மற்றும் வாழ்வில் முன்னேறவும் அதற்கும் மேலாக அந்த குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு வாழ்வை இலகுவாக மாற்றலாம் என்ற நம்பிக்கையை தர என்னால் இயலும். கடந்த 10 ஆண்டுகளாக நான் சிறப்பு கல்வியாளராகப் பணிபுரிந்து வருகிறேன். மேலும் தினமும் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தியே பயணம் செய்கிறேன். தற்போது நான் தென்காசி அரசு மருத்துவமனையில் அரசு மற்றும் அமர் சேவா சங்கம் இணைந்து நடத்தும் மாவட்ட ஆரம்பகால பயிற்சி மையத்தில் பணியாற்றி வருகிறேன்.

கடந்த ஆண்டுகளில் நான் எதிர்கொள்ளும் ஒரு பொதுவான தடையாக பொது உள்கட்டமைப்பு உள்ளது. எனது வேலையின் தன்மையானது நான் அதிகம் பயணம் செய்ய வேண்டியிருக்கும். அதற்காக நான் பொது போக்குவரத்தை தினசரி பயன்படுத்த வேண்டியுள்ளது. பேருந்துகளிலுள்ள படிகள் மிகவும் உயரமாக உள்ளன. பேருந்தில் ஏறும் பொழுதும் இறங்கும் பொழுதும் நான் சிரமம் கொள்கிறேன். இந்த வகையான தடை எனது உடல்நலம் மற்றும் எனது தொழில் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. இந்த தடைகளுக்கு மத்தியிலும், நான் சிறப்பு கல்வியாளராக பணியாற்றுவதன் மூலம் பல குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்த என்னால் இயன்றுள்ளது.

**அவனி லெக்ரா**



பாராலிம்பிக் போட்டியில் துப்பாக்கிச்சுடுதல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்தியப்பெண்மணி என்ற பெருமையை அவனி லெகரா பெற்றுள்ளார். லெக்ராவின் 11வது வயதில் நடந்த கார் விபத்து அவரது வாழ்வினை மாற்றியமைத்தது. ஆறு வருடத்திற்கு முன்பு, அவரது தந்தை லெக்ராவை ஒரு துப்பாக்கிச்சுடும் பயிற்சியை மேற்கொள்ளும் இடத்திற்கு கூட்டிச்சென்றார். அங்குதான் முதன் முதலில் இவர் சுடத்தொடங்கினார். “2015 கோடை விடுமுறையில் என் அப்பா என்னை துப்பாக்கி சுடும் பயிற்சி மைதானத்திற்கு அழைத்துச்சென்றார். நான் சில முறை சுட்டேன். அவை நன்றாக அமைந்தன. இதை ஒரு பொழுது போக்காகவே ஆரம்பித்தேன். இன்று இந்நிலையை அடைந்துள்ளேன்.” என்று லெக்ரா கூறினாள். இந்திய ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடுதல் சாம்பியனான அபினப் பிந்த்ராவின் புத்தகத்தை படித்து, பிந்த்ராவின் சாதனைகளை சமன் செய்யும் எண்ணம் கொண்டே இந்த விளையாட்டின் மீது ஆர்வம் கொண்டேன். இந்த வெற்றியின் மூலம், விளையாட்டு துறையில் ஈடுபட நினைக்கும் குறைபாடு கொண்ட மற்றும் குறைபாடில்லாத நபர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக லெக்ரா செயல்படுகிறாள். “நீங்கள் ஒரு பாரா தடைகள வீரராக இருந்தால், மக்களை உங்களை

மதிப்பிடத் தொடங்குவார்கள். ஆனால் ''ஊனத்துடன் வாழ்வதே ஒரு வெற்றி'' என்று பாரா ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னதாக லெக்ரா கூறியிருந்தார்.

**அருனிமா சின்ஹா**



அருனிமா சின்ஹா ஒரு தேசிய கூடைப்பந்து வீராங்கனை. அவர் துணை ராணுவப்படையில் சேர விரும்பினார். CISFல் இருந்து அவருக்கு அழைப்புக்கடிதம் வந்தது. இதற்காக டெல்லி பயணம் மேற்கொள்ளும் பொழுது அவரது வாழ்க்கையை மாற்றி போட்ட ஓர் விபத்தினைச் சந்தித்தார். கொள்ளையர்கள் அவரது பையை பறித்துக்கொண்டு ஓடும் ரயிலில் இருந்து அவரை வெளியே தள்ளிவிட்டனர். அவர் தண்டவாளத்தில் விழுந்தார். மிகுந்த காயங்களின் காரணமாக அவரால் நகர இயலவில்லை. எதிர்புறத்தில் இருந்து வந்த ஒரு ரயில் அவரது முழங்காலிற்கு கீழ் ஏறிச் சென்றது. அக்கம் பக்கத்தினர் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். அவரது கால் துண்டிக்கப்பட்டது. அவருக்கு செயற்கைக்கால் வழங்கப்பட்டு மறுவாழ்வு பயிற்சி அளிக்கப்பட்டது.

ஒவ்வொரு கண்டத்தின் உயரமான சிகரங்களில் ஏறி இந்தியாவின் தேசியக்கொடியை ஏற்றி வைப்பது அவரது குறிக்கோளாக இருந்தது. ஆசியாவின் எவரெஸ்ட், ஆப்பிரிக்காவின் கிளிமஞ்சாரோ, ஐரோப்பாவின் எல்ப்ரஸ், ஆஸ்திரேலியாவின் கோஸ்கியுள்கோ, அர்ஜென்டினாவின் அகோன்காகுவா மற்றும் இந்தோனேசியாவின் கார்ஸ்டனின் பிரமிடு ஆகிய ஏழு சிகரங்களை 2014ல் ஏறியுள்ளார். ஜனவரி 1 2019 அன்று அண்டார்டிகாவிலுள்ள வின்சன் சிகரத்தினை அடைந்து தனது இறுதி சிகரத்தை நிறைவு செய்தார்.

படி 7:

பங்கேற்பவர்களிடம் கேளுங்கள - குறைபாடுள்ளவர்கள் தங்கள் முழுமையான திறனை அடைவதற்கும் குடும்பம் மற்றும் சமுதாயத்திற்கு பங்கு அளிப்பவராக ஆவதற்கு எது உதவுகிறது?

படி8:

பங்கேற்பவர்கள் கூறும் பதிலுடன் கூடுதலாக பின்வரும் உதாரணங்களையும் நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம்.

- வளர்ச்சி தாமதம் மற்றும் குறைபாடுகளை ஆரம்பகாலத்திலேயே கண்டறிதல்

- ஆரம்பகால சிகிச்சை தலையீடு
- ஆதரவு மற்றும் ஒருங்கிணைந்த கல்வி
- குடும்பம், அண்டை வீட்டார் மற்றும் சமூகத்தின் ஊக்கமும் ஆதரவும்
- பொருத்தமான தகவமைப்பு (Reasonable Accomodation)
- பணியிடத்தில் மாற்றுத்திறனாளிகளின் திறன்களை அங்கீகரித்தல்.

படி9:



**செயல்பாட்டினை நிறைவு செய்வதற்கான விளக்க உரை:**

குறைபாடுள்ள நபர்கள் சமூகத்தில் நிறைய சவால்களை எதிர்கொள்கின்றனர். அவர்களில் சிலரால் மட்டுமே நிலைத்து நிற்கவும் வெற்றியை அடையவும் முடிகிறது.

ஆயினும் மாற்றுத்திறனாளிகளுக்கு சமூகம் சரியான ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கும் போது அவர்களால் பல வெற்றிகளை பெற இயலும்.

**குறிப்பு:**

(இப்பகுதி மாற்றுத்திறனாளிகளின் திறனை நிஜ வாழ்க்கை கதைகள் மூலம் எடுத்துக்காட்டுகிறது. மேலும் இவர்கள் சாதிக்க தேவையான காரணிகளை முன்னிலைப்படுத்துகிறது. பங்கேற்பாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களிடத்தில் பதியக்கூடிய கதைகளை அவர்களுக்கு வழங்குவதற்காகவும் இப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.)

**செயல்பாடு 8:**

**உதவி உபகரணங்கள் மற்றும் தகவவைப்பு சூழல்**




படி 1: பங்கேற்பாளர்களிடம் கேளுங்கள். உதவி உபகரணம் என்றால் என்ன?

படி 2: மாற்றுத்திறனுள்ளவர்களுக்கான கற்றல், வேலை மற்றும் தினசரி வாழ்க்கையை மேம்படுத்த உதவும் எந்த ஒரு பொருள்கள், கருவிகள் மற்றும் அமைப்புகள் ஆகியவை உதவி உபகரணம் ஆகும் என்ற பதிலை அளியுங்கள்.

படி 3: பங்கேற்பவர்களிடம் அவர்கள் பார்த்திருக்கிற சில உதவி உபகரணங்களை பட்டியிட சொல்லவும்.

படி 4: பிறகு நீங்கள் உதாரணங்களை அளிக்கவும். சக்கரநாற்காலிகள், பிரெய்லி புத்தகங்கள், நடைவண்டிகள் காது கேட்க உதவும் கருவி

படி 5: பங்கேற்பவர்களிடம் கேளுங்கள். "பொருத்தமான சூழல் என்றால் என்ன"?

படி 6: மாற்றுத்திறனாளிகளும் அனுகக்கூடிய வகையில் கட்டிடங்கள் மற்றும் இதர அமைப்புகளில் பொருத்தமான மாற்றங்கள் அல்லது அமைப்புகளை ஏற்படுத்துவது பொருத்தமான சூழல் ஆகும் என்ற பதிலை அளியுங்கள்.

எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு: சரிவான பாதை கைப்பிடிகள், அகன்ற கதவுகள் அணுகக்கூடிய வகுப்பறைகள், ரயில் நிலையம் போன்ற என்ற பதிலை அளியுங்கள்.


படி 7: பங்கேற்பவர்களிடம் கேளுங்கள்

"நீங்கள் ஒரு நடக்க இயலாத குழந்தைக்கு சக்கர நாற்காலியைக்கொடுத்தால் அது அவர்கள் வாழ்நாள் முழுவதும் சக்கர நாற்காலியை சார்ந்திருக்கச் செய்யுமா? அல்லது அது அவர்களுக்கு அதிக சுதந்திரத்தையும், தன்னிச்சையாக இயங்கும் தன்மையையும் அளிக்குமா மற்றும் அவர்கள் மேம்பட்டு வளர உதவுமா?

படி 8: உதவி உபகரணங்கள் மாற்றுத்திறனாளிகளை மிகவும் சுதந்திரமானவர்களாகவும் பிறரை அதிகம் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமலும் ஆக்குகின்றன.

**உதவி உபகரணங்கள் மற்றும் பொருத்தமான தகவமைப்பு பற்றிய உதாரணங்கள் அளிக்கவும்:**

பள்ளி அல்லது அலுவலகங்களில் சாய்வு தளங்கள் அமைத்தல் மற்றும் சக்கர நாற்காலி வழங்குதல் குழந்தைகளை வகுப்பறையில் கல்வி கற்கவும், பெரியவர்கள் சம்பாதிக்கும் பொருட்டு பணியிடங்களுக்குச்செல்லவும் அனுமதிக்கின்றன.




பிரெய்லி புத்தகங்கள் பார்வையற்ற குழந்தைகள் 'படிக்க' மற்றும் கல்வி பெற உதவுகின்றது. நடைவண்டி ஒருவர் தன்னிச்சையாக சுதந்திரமாகச் செல்ல உதவுகிறது.

**(குறிப்பு:** இந்த பகுதி உதவி உபகரணங்கள் மற்றும் தகவமைப்பு சூழ்நிலைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.)

**செயல்பாடு 9**

**உள்ளடக்குதலை ஊக்குவித்தல்**



படி 1: பங்கேற்பவர்களிடம் கேளுங்கள்- குறைபாடுள்ள குழந்தைகள் மற்ற குழந்தைகளுடன் பொதுவான பள்ளியில் படிக்க வேண்டுமா?

படி 2: பலதரப்பட்ட சூழ்நிலைகளில் "மாற்றுத்திறனாளி" மாணவர்களை உள்ளடக்கி ஒருங்கிணைத்து அவர்களின் திறனை அடைய வைப்பதற்கான சிறந்த அணுகுமுறை ஒருங்கிணைந்த கல்வி முறையாகும்.

மற்ற மாணவர்கள் குறைபாடுள்ளவர்களோடு படிப்பதால் அவர்களிடத்து பச்சாதாபம் கொள்ளுதல் அவர்களுக்கு உதவியாக எப்படி இருத்தல் என்பதனையும் மாற்றுத்திறனுடைய குழந்தைகளிடமிருந்து மற்ற பலவிஷயங்களையும் கற்றுக்கொள்ள முடியும்.

சில சூழ்நலைகளில் மாற்றுத்திறனாளி குழந்தைகளால் ஒருங்கிணைந்தப்பள்ளி சூழ்நிலையை எதிர்கொள்ள முடியாவிட்டால் சிறப்புப்பள்ளியில் சேர்க்கலாம்.

படி 3: பங்கேற்பவர்களிடம் கேளுங்கள் -"மாற்றுத்திறனாளிகளை சமுகத்தில் உள்ளடக்குதலை ஊக்குவிக்க என்ன செய்யலாம்?"

படி 4: பின்வரும் பதில்களை வழங்கலாம்.

- வளர்ச்சி தாமதம் மற்றும் குறைபாடுகளை ஆரம்பகாலத்திலேயே கண்டறிதல்
- ஆரம்பகால பயிற்சி
- பயிற்சிகள் மூலம் செயல்பாட்டை மேம்படுத்துதல் மற்றம் பராமரித்தல்
- உதவி உபகரணங்களைப் பயன்படுத்துதல்
- ஒருகிணைந்த மற்றும் தகவமைக்கப்பட்ட கல்வி (அதாவது பார்வை குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு உருப்பெருக்கி கண்ணாடியைப் பயன்படுத்துதல் அல்லது ஆட்டிசம் குழந்தைகளுக்கான சிறப்பு கற்பித்தல் முறைகள்)
- சுற்றுச்சூழல் மாற்றங்கள்(அதாவது சாய் தளங்கள் கைப்பிடிகள் போன்றவை)

படி 5: குறைபாடுகள் உள்ளவர்களை சமுகத்தில் ஒருங்கிணைத்தலை ஊக்குவிப்பதற்கு நீங்கள் என்ன செய்யலாம்?

படி 6: பங்கேற்பவர்கள் கூறும் பதில்களுடன் கூடுதலாக பின்வருவனவற்றைச் சேர்க்கலாம்.

- பயிற்சி மற்றும் இதர சேவைகளை அணுக மாற்றுத்திறனாளி குடும்பங்களை ஊக்குவித்தல்.
- உதவி உபகரணங்களை பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல்.
- மாற்றுத்திறனாளிகள் எங்கு கொடுமைப்படுத்தப்பட்டாலும் இழிவு படுத்தப்பட்டாலும் அவர்களுக்காக குரல் கொடுத்தல்.

- சூழ்நிலைகள் அனுமதிக்கும் பொழுது குறைபாடுள்ளவர்களுடன் உரையாடலில் ஈடுபடுவதன் மூலம் அவர்களை அறிந்து கொள்ளுதல்.
- ஊனமுற்றவர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினரை ஒருபோதும் பரிதாபமாக பார்க்காமல் அவர்களை பச்சாதபத்துடன் நடத்துதல்.
- உங்கள் பிள்ளைகளை குறைபாடு உள்ள குழந்தைகளுடன் விளையாடவும் பேசவும் அனுமதித்தல். ஏனெனில் இது உங்கள் பிள்ளைகளிடம் பச்சாதாபத்தையும், புரிதலையும் ஏற்படுத்துகிறது. அதே நேரத்தில் குறைபாடுள்ள குழந்தைகளுக்ககு நமது சமூகத்தில் பழகுவதற்கு அதிக வாய்ப்புகளும் அளிக்கின்றது.
- உங்கள் குழந்தை படிக்கும் பள்ளியில் மாற்றுத்திறனாளி குழந்தையின் சேர்க்கையை மறுத்தால், இந்த பிரச்சனையை பள்ளியின் பெற்றோர் சங்கத்திற்கு எடுத்து செல்லுங்கள்.
- உங்கள் குழந்தைப் படிக்கும் பள்ளியில் மற்ற பெற்றோர்கள் மாற்றுத்திறனாளி குழந்தைகளைச் சேர்ப்பதில் தயக்கம் காட்டினால் அவர்களுடன் உடையாடி ஒருங்கிணைந்த கல்வியினைப்பற்றி அவர்கள் அறிந்து கொள்ளும்படியாக எடுத்துரைக்கவும்.
- மாற்றுத்திறனாளி குழந்தைகளை வளர்ப்பதில் அவர்களின் பெற்றோர்களின் அர்ப்பணிப்பு மற்றும் உறுதியை பாராட்டுங்கள்.
- குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் உரிமைகளை செயல்படுத்த ஒத்துழைப்பு அளியுங்கள்.
- குறைபாடுள்ள குழந்தைகளின் குடும்பங்கள் எடுக்கும் முயற்சிகளை மதிக்க வேண்டும். குழந்தைகளை வளர்ப்பது பெற்றோர்களின் பொறுப்பு என்றாலும், அது சமுதாயத்தின் கூட்டு முயற்சியும் ஆகும்.

**செயல்பாடு 10:**

**குழந்தைகளுக்கான ஆரம்பகால பயிற்சிகள் மற்றும் மறுவாழ்வு பயிற்சிகள்**

படி 1: இதற்கான விளக்கத்துடன் இந்த அமர்வை முடித்து கொள்ளவும். ஆரம்பகால தலையீடு மற்றும் குழந்தை பெரியவர் மறுவாழ்வு என்றால் என்ன?

பதில்: குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான வளர்ச்சி மற்றும் செயல்பாட்டை மேம்படுத்த அவர்களுக்கு குறைபாடுள்ள பகுதிகளில் (பேச்சு பயிற்சி, பிசியோதெரபி ஆக்குபேஷனல் தெரபி, சிறப்புக்கல்வி) சிகிச்சை அளித்து அவர்களின் செயல்பாடுகள் மற்றும் சமூகத்தில் பங்கேற்றலை ஊக்குவிப்பதற்கு வழங்கப்படும் ஆதரவே மறுவாழ்வு பயிற்சிகள் ஆகும்.

படி 2: மறுவாழ்வு சேவைகளை வழங்குவதற்கும், மாற்றுத்திறனாளிகள் சமுகத்தில் ஒருங்கிணைந்து வாழ்வதை ஊக்குவிப்பதற்கும் நம்முடைய நிறுவனம் சமூகத்தில் என்னவெல்லாம் செய்கிறது என்பதைப்பற்றி பேசுங்கள்.



(எடுத்துக்காட்டாக)

அமர் சேவா சங்கத்தில் எவ்வாறு செய்கின்றோம்?

அ) சமூக மறுவாழ்வு பணியாளர்கள் வாரத்திற்கு ஒருமுறை குழந்தைகளை அவர்களது வீடுகளிலோ அல்லது பள்ளியிலோ சென்று ஆரம்பகால பயிற்சி மற்றும் குழந்தை மறுவாழ்வு சிகிச்சையை வழங்குகிறோம். மாதம் ஒருமுறை மறுவாழ்வு நிபுணர்கள் (சிறப்புக் கல்வியாளர்கள் மற்றும் பிஸியோதெரபிஸ்ட்டுகள்) குழந்தைகளின் வீடுகளுக்கு சென்று சமூக மறுவாழ்வு பணியாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

ஆ) எங்களிடம் சிறப்பு APP ஒன்றுள்ளது. சமூக மறுவாழ்வு பணியாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு உதவுகின்ற EI பயன்பாடு பற்றி விளக்கவும்.

இ) பெற்றோர்களை மேம்படுத்துவதிலும், அவர்களுக்கு பயிற்சி அளிப்பதிலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். ஆதனால் அவர்கள் தங்கள் குழந்தைகளை அதிகபட்சமாக ஆதரிக்க முடியும்.

ஈ) அனைத்து முயற்சிகளையும் ஒருங்கிணைக்கும் பொருட்டு தமிழ்நாடு மற்றும் உள்ளுர் மாவட்ட அரசாங்கத்துடன் இணைந்து நாங்கள் பணியாற்றுகிறோம்.

உ) ஆய்க்குடியில் எங்களின் நிறுவனம் உள்ளது அங்கு குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான மறுவாழ்வு பிரிவு, ஒருங்கிணைந்த கல்வி மற்றும் சிறப்புக்கல்வி அளிக்கும் பள்ளிகள் உள்ளன.

ஊ) குறைபாடுள்ள நபர்களுக்கான சுய உதவிக்குழுக்களை ஒருக்கிணைத்து நடத்தி வருகிறோம்.

எ) மாற்றுத்திறனாளிகளுக்கு நாங்கள் தொழில்பயிற்சி அளிப்பதுடன் வாழ்வாதாரத்திற்காகவும் உதவிகள் அளிக்கின்றோம்.

ஏ) உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள் எவரேனும் உங்களுக்குத் தெரிந்தால், நீங்கள் அவர்களை அமர் சேவா சங்கத்தை பரிந்துரைக்கலாம்.

☆☆☆☆☆

## 6. மகளிர் விழிப்புணர்வு நிகழ்ச்சி:

பெண்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தும்போது, விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு முந்தைய மற்றும் பிந்தைய கேள்வி கேட்பதன் மூலம் நிகழ்ச்சி எவ்வளவு தூரம் மக்களை சென்றடைந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

EI App-I பயன்படுத்தினால் உங்கள் பங்கேற்பாளர்களின் அறிவு மற்றும் அணுகுமுறைகளில் ஏற்படும் மாற்றத்தைக் கண்காணித்து அந்த முடிவுகளைப் பதிவு செய்யலாம். மாதிரி கேள்விகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1) எல்லா சமூகங்கள் மற்றும் குடும்பங்களில் ஊனம் பொதுவானதா?
   - A) ஆம், அனைத்து சமூகம் மற்றும் குடும்பங்கள் மத்தியின் பொதுவானது (சரியான பதில்)
   - B) இல்லை, மிகவும் அரிதானது மற்றும் சில சமூகம் மற்றும் குடும்பங்களில் மட்டுமே காணப்படும்.
2) பின்வருவனவற்றுள்ள எது இயலாமைக்கான காரணம் இல்லை?
   - A. விபத்துக்கள்
   - B. விஷங்கள் / மருந்துகள் / ஆல்கஹால்
   - C. சாபம் (சரியான பதில்)
   - D. நோய்கள்

3) குறைபாடுள்ள நபர்கள் அல்லது குறைபாடுள்ள குழந்தைகளின் குடும்பங்களுக்கான சிறந்த அணுகுமுறை எது?

a. பச்சாதாபம் (சரியான பதில்)

b. அனுதாபம்

c. பரிதாபம்

4) மாற்றுத்திறனாளிகளுக்கு குறைபாடு ஏற்பட என்ன காரணம்?

A. ஒரு நபரின் உடல் மற்றும் மனநிலை குறைபாடு.

B. சமூகத்தின் அணுகல் தன்மை இல்லாதது.

C. உடல் மற்றும் மனநிலை குறைபாடு மற்றும் அணுகல் தன்மையற்ற சமுதாய சூழ்களே ஆகிய அனைத்துமே குறைபாட்டிற்கு வழிவகுக்கிறது (சரியான பதில்)

5) மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உரிமை உள்ளதா?

A. இல்லை, பெரும்பாலான குறைபாடுகள் உள்ளவர்கள் கல்வி மற்றும் வேலை வாய்ப்பை பெற இயலாது.

B. இது இந்தியாவின் சட்டங்களில் இல்லை, ஆனால் அதை அடைய நாம் அவர்களை ஆதரிக்க முயற்சி செய்யலாம்.

C. ஆம், இது இந்திய சட்டங்களில் உள்ளது. அதை அடைய நாம் அவர்களை ஆதரிக்க வேண்டும். (சரியான பதில்)

D. ஆம், ஆனால் அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டியது அரசாங்கம் மட்டுமே

6) மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்ற குழந்தைகளுடன் வழக்கமான பள்ளியில் படிக்க வேண்டுமா?

A. ஆம், பெரும்பாலான சூழ்நிலைகளில் இதுவே சிறந்த அணுகுமுறை (சரியான பதில்)

B. ஆம். ஆனால் மற்ற மாணவர்களுக்கு நல்லதல்ல

C. இல்லை, அவர்கள் அனைவரும் சிறப்புப்பள்ளியில் படிக்க வேண்டும்.

D. இல்லை, அவர்கள் பள்ளிக்குச்செல்ல தேவையில்லை

7) மாற்றுத்திறனாளி பெண்கள் திருமணம் செய்து கொள்ளலாமா?

A. இல்லை, அவர்களுக்கு திருமணம் செய்து கொள்ளும் தகுதி இல்லை.

B. ஆம். அனைத்து மாற்றுத்திறனாளி பெண்களும் திருமணம் செய்து கொள்ளலாம்.

C. பல்வேறு சூழ்நிலைகளில் இதற்கு சாத்தியம் உள்ளது மற்றும் இவை சமூகத்தால் ஆதரிக்கப்படவேண்டும். (சரியான பதில்)

D. இதை அனுமதிக்கக்கூடாது.

8) குறைபாடுள்ள பெண்களிடம் சமூகத்தின் பங்கு என்ன?

A. அவர்கள் வீட்டிலேயே இருப்பது நல்லது.

B. அவர்களுக்கு ஆதரவாக ஒரு குடும்ப உறுப்பினர் இருப்பது நல்லது.

C. சமூகம் அவர்களை ஆதரிக்க வேண்டும். (சரியான பதில்)

9) நடக்க இயலாத ஒரு குழந்தைக்கு சக்கர நாற்காலியைக் கொடுத்தல், அது

A. வாழ்நாள் முழுவதும் அவரை சக்கர நாற்காலியை சார்ந்திருக்கச் செய்யும்.

B. அவரை தன்னிச்சையாக இயங்கவும், செயல்பாடுகள் மேம்படவும் செய்கிறது. (சரியான பதில்)

10) மாற்றுத்திறனாளிகள் தங்கள் திறனை அடைவதற்கு ஆதரவாக இருப்பவை எவை?

a. தாமதம் மற்றும் குறைபாடுகளை ஆரம்பகாலத்திலேயே கண்டறிதல்.

b. பயிற்சிகள்

c. கல்வி

d. குடும்பம் மற்றும் அண்டை வீட்டாரின் ஊக்கம்

e. பொருத்தமான தகவமைப்பு

f. பணியிடத்திலும், சமூகத்திலும் மாற்றுத்திறனாளிகளின் திறன்களை அங்கீகரித்தல்

g. மேலே உள்ள அனைத்தும் (சரியான பதில்)

இலக்கு பார்வையாளர்கள் பெண்கள்

**அறிமுகம்:**

மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்து கொள்வதற்கும், ஒருங்கிணைத்த மற்றும் ஆதரவளிக்கும் சட்டங்களைப்பற்றி தெரிந்து கொள்வதற்கும் சமூகத்தை தயார் படுத்த வேண்டும். (இயலாமை மற்றும் பெண்மை ஆகிய இரு காரணங்களினால் ஒருவரை ஒதுக்கி வைப்பதற்கான சாத்திய கூறுகள் அதிகம் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இரு விஷயங்களைப்பற்றி ஒருமித்து பேசுவது சமூகத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம். குறைபாடில்லாத பெண்களை விட குறைபாடுள்ள பெண்கள் 2 முதல் 4 மடங்கு குடும்பம் மற்றும் பாலியல் வன்முறைக்கு ஆளாகிறார்கள் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. (Dunkley et al 2018) (டன்க்லி மற்றும் பலர் 2018) கோவிட்-19 காரணமாக வீட்டினுள் முடங்கி இருந்ததால் பெண்கள் அதிக அளவு வன்முறைக்கு ஆளாக நேர்ந்துள்ளது.(MOSIP 2016). இத்தகைய சூழலில் 11.8 மில்லியன் குறைபாடுள்ள பெண்களின் நிலைமை என்னவென்று முழுமையாக அறியப்படவில்லை.


**நோக்கம்:**

1. வளர்ச்சி தாமதம், இயலாமை, குறைபாடுகள்ள பெண்களின் நிலமையை விளக்குதல்,
2. சமூகத்தில் ஊனமுற்ற குழந்தைகளின் தாய்மார்கள் எதிர்கொள்ளும் சவால்கள், களங்கங்களை விளக்குதல்.
3. பொதுவாழ்வில் குறைபாடுள்ள நபர்களை ஒருங்கிணைத்தல் ஆகியவை பற்றி ஆண்களும், பெண்களும் புரிந்து கொள்ள செய்தல்.

   (பெண்களுக்கான விழிப்புணர்வுத் திட்டங்களுக்கு, சமூக விழிப்புணர்வுத்திட்டங்களின் அதே செயல்பாடுகளைப் பயன்படுத்தலாம். மேலும் நாங்கள் அந்த செயல்பாடுகளோடு சிலவற்றை சேர்த்துள்ளோம் மற்றும் சிறிய மாற்றங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளோம்.)

**செயல்பாடு 1**

குறைபாடு உள்ளவர்கள் யார்?




சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் செயல்பாடு-1-ல் அறிமுகப்படுத்தப்பட்ட அதே கேள்விகள் மற்றும் அறிவுறுத்தல்களை நீங்கள் பயன்படுத்தலாம். பெண்கள் குழுவில் நீங்கள் பேசும் பொழுது பயன்படுத்தக்கூடிய கூடுதல் தகவல்கள்.

பங்கேற்பவர்களிடம் பின்வரும் கேள்விகளை கேட்கவும் மற்றும் அவர்கள் பதிலுக்காக காத்திருக்கவும், அவர்கள் கூறும் பதிலை ஒரு அட்டையில் குறித்துக்கொள்ளவும்.

- இங்குள்ளவர்களில் எத்தனை பேர் பெண்கள் சுய உதவிக்குழு உறுப்பினராக உள்ளீர்கள்? உங்கள் கைகளை உயர்த்துங்கள். அந்த குழுவில் குறைபாடுள்ள பெண்கள் எவரேனும் உள்ளனரா?

- குறைபாடுள்ள நபர் எவரேனும் உங்கள் வீட்டிற்கு வருகை புரிந்துள்ளனரா? அப்படி வந்திருந்தால், அவர்கள் உங்கள் வீட்டிற்கு வருகை புரிந்த பொழுது அல்லது வருகை புரியும் பொழுது நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?
- குறைபாடுள்ள குழந்தை உங்கள் குழந்தை படிக்கும் வகுப்பில் படித்தால் அல்லது சக்கர நாற்காலி பயன்படுத்தும் ஒரு குழந்தை உங்கள் குழந்தையின் நண்பனாக இருந்தால் நீங்கள் எப்படி உணர்வீர்கள். (இந்த செயல்பாட்டின் மூலம் குறைபாடுள்ள நபர் சமூகத்தின் ஒரு அங்கமாக இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் சமுதாயத்தின் அன்மை பெறவும், மரியாதை மற்றம் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் என உணர வைக்கலாம்.

**செயல்பாடு-2**

கண்ணுக்கு புலப்படக்கூடிய மற்றும் கண்ணுக்கு தெரியாத ஊனம்.




சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் செயல்பாடு 2 ல் அறிமுகப்படுத்தப்பட்ட அதே கேள்விகள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தலாம். ஒரு மாற்றாக அல்லது கூடுதலாக, விவாத்தின் போது மகப்பேறிற்கு பிறகு ஏற்படும் மனச்சோர்வைப் பற்றி பேசலாம், இது பிரசவத்திற்குப்பிறகு ஹார்மோன் மாற்றங்களால் ஒரு தாய் அனுபவிக்கும் மனச்சோர்வு உளவியல் ரீதியாக தாய்மையை ஏற்றுக்கொள்ளுதல், உடல் ரீதியான சோர்வு ஆகியவை அடங்கும் பெரும்பாலும் இவை கண்ணுக்கு புலப்படாத இயலாமை மற்றும் களங்கத்திற்கு வழிவகுக்கிறது. இவற்றினை கண்ணுக்கு புலப்படாத இயலாமையாக கருதி இந்த சூழ்நிலையில் பெண்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

**செயல்பாடு-3**

இயலாமைக்கான காரணங்கள்




சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்திய 3-ம் செயல்பாட்டினில் உள்ள அதே கேள்விகளையும் அறிவுறுத்தல்களையும் உபயோகிக்கலாம். ஒரு குழந்தையின் இயலாமை நிலைக்கு அந்த குழந்தையின் தாயின் தவறு என்ற கட்டுக்கதையை அகற்றுவதில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம்.

**செயல்பாடு-4**

ஊனம் என்றால் என்ன?

சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பயன்படுத்திய 4வது செயல்பாட்டின் அதே கேள்விகள் மற்றும் அறிவுறுத்தல்களை உபயோகித்துக்கொள்ளலாம்.

**செயல்பாடு-5**

பச்சாதாபம் Vs அனுதாபம் Vs பரிதாபம்

சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் 5-ம் செயல்பாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அதே கேள்விகள் மற்றும் அறிவுறுத்தல்களை நீங்கள் பயன்படுத்தலாம்.

**செயல்பாடு-6**

ஊனமுற்ற நபர் மற்றும் அவரது குடும்பங்களின் வாழ்க்கையில் ஏற்படும் சவால்கள்.

சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் செயல்பாடு-6ல் அறிமுகப்படுத்தப்பட்ட அதே கேள்விகள் அறிவுறுத்தல்களை நீங்கள் பயன்படுத்தலாம். படி3ல் பங்கேற்பாளர்களிடம் வீட்டில் குறைபாடுள்ள நபர் இருப்பதனால் உங்கள் குடும்பம் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற கேள்வியில் தாய்மார்கள் எதிர்கொள்ளும் சவால்களில் கவனம் செலுத்தலாம்.





குறைபாடுள்ள பெண் குழந்தை மற்றும் பெண்களால் வெளிப்படுத்தமுடியாத வீட்டில் எதிர்கொள்ளும் வன்முறைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் பற்றி சுட்டிகாட்டலாம். மற்ற பெண்களை விட குறைபாடுகள்ள பெண்கள் இரண்டு முதல் நான்கு மடங்கு அதிகமாக குடும்ப மற்றும் பாலியல் வன்முறைக்கு ஆளாவதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன (டன்க்லி மற்றும் பலர் 2018)

**செயல்பாடு-7**

**உத்வேகம் தரும் கதைகள்:**

சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் 7ம் செயல்பாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அதே உள்ளடக்கங்களை நீங்கள் பயன்படுத்தலாம். இருப்பினும் மாற்றுத்திறனாளி பெண்களின் கதைகளை நீங்கள் இங்கே முன்னிலைப் படுத்தலாம்.

**மானசி ஜோஷி**




நான் எந்த வளர்ச்சி தாமதமும் இல்லாமல் பிறந்தேன். எனக்கு தேவையான அனைத்து கல்வியும் கிடைத்தது. ஆனால் 2011ம் ஆண்டு மும்பையில் நான் விபத்துக்குள்ளான போது வாழ்க்கையே மாறியது. அந்த விபத்தில் எனது கால் துண்டிக்கப்பட்டது. இந்த பெரிய சம்பவத்திற்குப்பிறகு நான் தியானம் செய்ய ஆரம்பித்தேன். மற்றும் என் உடல் உறுதியாக இருக்க பூப்பந்து விளையாட ஆரம்பித்தோன். பூப்பந்து விளையாட்டை மறுவாழ்வு பயிற்சியாக ஆரம்பித்த நான் 5 வருட காலங்களில் அதுவே எனது வாழ்க்கையாக மாறியது. 2015ல் உலக பாரா

பூப்பந்து சாம்பியன் இரட்டையர் பிரிவில் வெள்ளி பதக்கம் வென்றேன். இதற்கு பிறகு எனது இயலாமையிலும் விளையாட்டு எனது தொழிலாக மாறிவிட்டது. எனக்கு விபத்திற்குப்பிறகு மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்காக நான் குரல் கொடுத்து வருகிறேன்.

**பிரீதி சீனிவாசன்**



நான் எனது சிறுவயது கல்வியை அமெரிக்காவில் பெற்றேன் மற்றும் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் எனது பட்டப்படிப்பைத் தொடங்கினே. நான் 19 வயதுக்குட்பட்ட தமிழ்நாடு பெண்கள் கிரிக்கெட் அணியின் கேப்டனாக இருந்தேன். 1997-ம் ஆண்டு எனது 17வது வயதில் மாநில அணியை தேசிய சாம்பியன் ஷிப்பிற்காக வழிநடத்திச் சென்றேன். அதன்பிறகு நான் சந்தித்த விபத்தினால் முதுகு தண்டுவடத்தில் பாதிப்பு ஏற்பட்டு கழுத்திற்கு கீழ் செயலிழந்தேன். நான் சென்னை பல்கலைக்கழகத்தில் மருத்துவ சமூகவியலில் பட்டப்படிப்பை பயின்றேன். விபத்தில் இருந்து பிழைத்து வாழும் நான் “சோல் ப்ரீ” என்ற அறக்கட்டளையின் இணை நிறுவனர் ஆணேன். இது முதுகுத்தண்டுவட காயங்களால் பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுப்பது, மறுவாழ்வு அளிப்பது மற்றும் தண்டுவட காயங்களால் பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் குடும்பம் மற்றும் சமுகத்தின் ஒருங்கிணைக்கச் செய்வது மற்றும் இந்திய இளைஞர்களிடையே அதைத்தடுப்பது குறித்த விழிப்புணர்வை பரப்பும் ஒரு அறக்கட்டளையாகும்.

**ஜோதி ஆம்கே**



ஜோதி கிசாங்கே ஆம்கே, இந்திய நடிகை ஆவார். கின்னஸ் உலக சாதனைகளின் படி உலகின் மிகக்குட்டையாக வாழும் பெண்மணி ஆவார். எனது உயரம் 62.8 CM (2அடி .6 அங்குலம்) ப்ரிமார்டியல் ட்வார்∴பிசம் எனப்படும். மரபணுக்கோளாரால் நான் மிகவும் குட்டையாக இருக்கிறேன். நான் சினிமாவில் இருப்பதற்கு இது ஒரு தடையல்ல. மாற்றுத்திறனாளி பெண்கள் திருமணம் செய்து கொள்வதில் பெரும் களங்கம் உள்ளது.

இங்கே நீங்கள் இன்னும் பலவற்றைப்பற்றி விவாதிக்கலாம் மற்றும் எத்தனை குறைபாடுகள் உள்ள பெண்கள் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள் என்பதைப் பற்றியும் விவாதிக்கலம்.


**யார் யார் திருமணம் செய்து கொள்ள இயலும்:**

யார் யாருக்கெல்லாம் திருமணம் செய்து கொள்ள உரிமைப்பெற்றுள்ளனர் என்பதைப்பற்றிப் பேசலாம்.

கண்டிப்பாக மாற்றுத்திறனாளி பெண்களுக்கு திருமணத்திற்கு சம்மதிக்கும் மன தைரியம் இல்லாத சூழ்நிலைகள் உள்ளன மற்றும் திருமணத்திற்கு பிறகு துன்புறுத்தப்பட வாய்ப்புகள் உள்ளன. இதனைப்பற்றியும் இங்கு விவாதிக்கலாம்.

**செயல்பாடு-8**

உதவி உபகரணங்கள் மற்றும் தகவமைந்த சூழல்:




சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் செயல்பாடு 8ல் அறிமுகப்படுத்தப்பட்ட அதே கேள்விகள் மற்றும் அறிவுறுத்தல்களை நீங்கள் பயன்படுத்தலாம்.

**செயல்பாடு 9:** ஒருங்கிணைத்தலை ஊக்குவித்தல்



சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் செயல்பாடு 9ல் அறிமுகப்படுத்தப்பட்ட அதே கேள்விகள் மற்றும் அறிவுறுத்தல்களை நீங்கள் பயன்படுத்தலாம்.

**செயல்பாடு 10**

ஆரம்பகால பயிற்சி மற்றும் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான மறுவாழ்வு என்றால் என்ன?

சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் செயல்பாடு9ல் அறிமுகப்படுத்தப்பட்ட அதே கேள்விகள் மற்றும் அறிவுறுத்தல்களை நீங்கள் பயன்படுத்தலாம்.

☆☆☆☆☆

# 7. பள்ளி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

**UNESCO (2013) அங்கீகரிப்பது என்னவென்றால்**

“ஒருங்கிணைந்த கல்வி என்பது மாற்றத்தைக்கொண்ட ஒரு செயல்முறையாகும். இதன் மூலம் கல்வி முறை மற்றும் பள்ளிகள், பள்ளி மேலாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், அனைத்து குழந்தைகளின் கல்வி தேவைகளை அறிந்து பாரபட்சமின்றி தேவையை நீவர்த்தி செய்வதாகும்.

ஒரு குழந்தை சக குழந்தைகளுடன் இணைந்து ஈடுபாட்டுடன் இருப்பது பள்ளி சூழலில் தான் பள்ளி பெரும்பாலும் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு நட்பான சூழலாக அமைவதில்லை. மாற்றுத்திறனாளி குழந்தைகளின் தேவைகளை புரிந்து கொள்ள முடியாத ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பள்ளி நிர்வாகத்தை உள்ளடக்கிய நமது பள்ளிக்கல்வி முறையின் இயல்பான தன்மையே இதற்கு காரணம்.

பொதுவாக பள்ளிக் கல்விச்சூழல் என்பது குழந்தைகள் கற்றுக்கொள்ளவும், விளையாடவும் வளர்ச்சியடையவும், ஈடுபாட்டுடன் இருக்கவும், அவர்களின் வளர்ச்சியினை மேம்படுத்திக்கொள்ளவும் மற்றும் அவர்கள் பிற்காலத்தில் சமுதாயத்திற்கு பங்களிப்பதற்கு ஏற்ற வாய்ப்பையும் நல்க வேண்டும் நடைமுறையில் துரதிர்ஷ்டமாக பள்ளிக்கல்வி முறை உட்பட நமது ஒட்டுமொத்த சமுதாயமும் போட்டித்தன்மை கொண்ட பாதையை நோக்கிச்செல்கிறது.

கூட்டுக்கற்றலினால் ஒவ்வாருவரும் மேம்படுவதற்கு பதிலாக தனித்தனியாக தனி நபர் மேம்பாட்டை கொண்டு செயல்படுகிறது. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி நிர்வாகம் உட்பட அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கி நமது சமூகத்திலுள்ள பள்ளிகளுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு அளிப்பதன் மூலம் நமது கல்விமுறையில் உள்ள இந்த மாறுபட்ட தன்மையினை மாற்றியமைக்க நாங்கள் விரும்புகிறோம்.

குழந்தைகள் இயல்பாகவே கற்க ஆர்வமாக இருப்பதாலும், வளர்ந்து நாளை அவர்கள் பெரியவர்களாகிறார்கள் என்பதாலும் குறைபாடுள்ள நபர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சிரமங்களைப் புரிந்து கொண்டு அவர்கள் குழந்தைப்பருவத்திலிருந்தே ஒருங்கிணைந்த கல்வியின் ஓர் அங்கமாக இருந்தால், வகுப்பறை மற்றும் சகாக்களின் பன்முகத்தன்மையை தழுவி வாழ கற்றுக்கொண்டால் எதிர்காலத்தில் பச்சாதாபமுள்ள குடிமக்களாக உருவாக இயலும்.

நாங்கள் பள்ளி விழிப்புணர்வின் உள்ளடக்கம் மற்றும் அணுகுமுறையை மூன்று பிரிவுகளாக பிரிக்கின்றோம். ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பள்ளி மேலாண்மை ஆகிய மூன்று பங்குதாரர்களும் வெவ்வெறு நிலைகளில் ஒருங்கிணைந்த கல்வியை மேம்படுத்துவதில் முக்கியப்பங்கு வகிக்கின்றனர்.

முதல் பகுதியில், குறைபாடுகள் தொடர்பாக வரும் பாகுபாடு மற்றும் சிரமம் பற்றி குழந்தைகளுக்கு எளிய முறை கொண்டு கற்பிப்பது மேலும் சமூகம் மற்றும் இயற்கையின் அங்கமாக உள்ள பன்முகத்தன்மை கொண்ட மக்களை எவ்வாறு ஆதரிப்பது என்று பார்ப்போம்.

இரண்டாம் பகுதி ஆசிரியர்களை மையமாகக்கொண்டது. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு சிறந்த ஆற்றல் உள்ளது என்பதை ஆசிரியர்களுக்கு உணாத்தி அந்த குழந்தைகளை ஈடுபடுத்தி கல்வி புகட்டி ஒருகிணைந்த வகுப்பறை சூழலை மேம்படுவத்துவது அவர்களின் பொறுப்பை உணரச்செய்வதை பற்றி பார்ப்போம்.

மேலும் இந்த பிரிவு இந்தியாவிலுள்ள சட்டப்பிண்ணனியை வலியுறுத்தி குறைபாடுள்ள குழந்தைகளிடத்து அவர்களுக்குள்ள கடமையை வலியுறுத்துகிறது.

மூன்றாவது பகுதி பள்ளி நிர்வாகத்திற்கானது. அவர்களுக்கு ஒருகிணைந்த கல்வியை மேம்படுத்துவதை வலியுறுத்தும் சட்டங்கள் மற்றும் செயல்படுத்தும் உத்தியை வழங்குவதற்கும் அணைத்து குழந்தைகளுக்கும் மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பின்தங்கிய சமூகங்களைச்சார்ந்த குழந்தைகளுக்கும் சமமான கல்வி வாய்ப்புகள் வழங்க தன்னம்பிக்கையையும் பொறுப்புணர்ச்சியையும் நிர்வாகத்திற்கு அளிக்கின்றது.

## 7.1 உடன் படிக்கும் சக மாணவர்களின் ஆதரவை மேம்படுத்துவதற்கான மாணவர்களின் விழிப்புணர்வு.

இந்த நிகழ்ச்சியின் நோக்கமானது குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு ஆதரவாகவும், அவர்களை புரிந்து கொண்டுள்ள ஊக்கமிக்க சகநண்பர்களோடு கற்கவும், வளரவும் உதவுவதே ஆகும்.

பள்ளியில் படிக்கும் குழந்தைகள் 6-16 வயதுடையவர்கள் அவர்கள் புரிதல் நிலை வேறுபட்டிருக்கும், அவர்களின் புரிதல் நிலை வயதுக்கேற்ப மாறுபடும் என்பதால் அவர்களின் திறனுக்கேற்ப விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு இவர்களை தொடக்க கல்வி முதன்மை மற்றும் நடுநிலைக்கல்வியில் உள்ளவர்கள் என்றும் இரண்டு குழுக்களாகப் பிரித்து இருக்கிறோம்.

### 7.1.1 தொடக்க பள்ளி விழிப்புணர்வு நிகழ்ச்சி

இது எழுத்துக்கள், எண்கள், சிறிய வாக்கியங்கள் பற்றிய சிறிய – மதிப்பு சார்ந்த கதைகள் கற்றுக்கொண்ட 6 முதல் 10 வயது வரையிலான குழந்தைகளுக்கேற்றவாறு இருக்கும்.

எனவே அவர்களுக்கான கருத்துக்கள் எளிமையாகவும், காட்சிகள் மூலம் மற்றும் செயல்பாட்டு வடிவில் இருந்தால் மட்டுமே அவர்களை கருப்பொருளில் ஈடுபட வைக்க முடியும்.

**செயல்பாடு 1:**

விநியோகம்:




- குழந்தைகளுக்கு மிட்டாய் விநியோகிக்கவும், சிலரை அவர்கள் நிறம்/உயரம்/பாலினம் அடிப்படையில் மிட்டாய் வழங்காமல் பிரித்து வைக்கவும்.

- அதற்குப்பிறகு அவர்களுக்கு மிட்டாய் வழங்கப்படாதது பற்றி அவர்கள் எப்படி உணருகிறார்கள் என்று ஒதுக்கப்பட்ட குழந்தைகளிடம் கேட்கவும்.

இந்தச் செயல்பாட்டின் மூலம் ஒதுக்கப்படும் பொழுது அல்லது புறக்கணிக்கப்படும் பொழுது எவ்வாறு உணர்வார்கள் என்பதை கற்பிக்கிறோம்.

அவர்களிடம், இன்று நாம் இங்கு மாற்றுத்திறனாளி குழந்தைகள் பற்றி பேசுவதற்கு வந்துள்ளோம் மற்றும் அவர்கள் ஒருபோதும் புறக்கணிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்து, முடிந்த வரை அவர்களை சேர்த்துக்கொள்ள வைப்பதே எங்கள் குறிக்கோள் என்றுரைக்கவும்.

எல்லோரும் ஏன் ஒரே மாதிரியான வாய்ப்புகளை அனுபவிக்க வேண்டும் என்பதையும் கூறுங்கள்.

**செயல்பாடு 2**

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் 5 குழந்தைகளை தோராயமாக தேர்ந்தெடுக்கவும்

ஒரு துணியைப் பயன்படுத்தி அவர்கள் கண்களை கட்டவும் பின்னர் அவர்களை அவர்களது இருக்கைகள் / முதல்வரின் அலுவலகம் / ஆசிரியர்கள் அறைக்கு நடக்கச் சொல்லுங்கள்.

அவர்களின் கண்களை அவிழ்த்து விடுங்கள் பின்பு மீண்டுமொரு முறை கண்களை கட்டுவதற்கு முன்பாக இரண்டு குழந்தைகளிடம் மட்டும் அவர்களது அனுபவத்தை ஔவரிக்க வாய்ப்பளிக்கவும்.

5 குழந்தைகளுக்கும் மீண்டும் துணிகொண்டு கண்களை மூடவும் ஒவ்வொருவருடனும் ஒரு மாணவரை அவர்களுடன் அவர்கள் அடைய விரும்பும் இலக்கிற்கு வழிகாட்டச்செய்யவும். பின்பு அவர்களின் அனுபவத்தை விவரிக்கச்சொல்லவும்.

இந்தச்செயல்பாட்டின் மூலம் பார்வை குறைபாடு பற்றி குழந்தைகளுக்கு அறிமுகம் செய்கிறோம். மேலும் செயல்பாட்டினை விவரிக்கச்சொல்வதன் மூலம் பார்வை குறைபாடு உள்ள குழந்தைகள் எங்ஙனம் உணர்கிறார்கள் என்ற புரிதலை வழங்குகிறோம்.

**செயல்பாடு 3**

ஊமை வேடங்கள்: இரண்டு குழந்தைகளை தோராயமாக தேர்ந்தெடுக்கவும் ஒரு குழந்தையிடம் ஒரு வாக்கியம் எழுதப்பட்ட ஒரு தாளை கொடுத்து அதில் எழுதியிருப்பதை மற்றொரு குழந்தையிடம் ஒரு வார்த்தை கூட கூறாமல் கை அசைவுகளாலாலோ வேறு எம்முறையிலாவது கூற சொல்லவும். மற்றொரு குழந்தையிடம் சைகை மொழியானால் கூறப்பட்டது என்ன என்பதை கண்டுபிடிக்கச் சொல்லவும். இரண்டு குழந்தைகளிடமும் அவர்களது அனுபவத்தை விளக்கச்சொல்லவும்.

குழந்தைகளுக்கும் அதன் பிறகு எல்லா அடிப்படை சைகை மொழியைக் கற்றுக் கொடுக்கவும்.

இந்த செயல்பாடு பேச்சு இல்லாமல் அல்லது அதற்கு மாற்று ஏதுமில்லாமல் தொடர்பு கொள்வதில் உள்ள சிரமத்தை விளக்குகிறது.

**செயல்பாடு 4**

காட்சிப்படுத்தல்:

சக்கர நாற்காலி அல்லது வாக்கர் பயன்படுத்தும் நபரின் படங்களை குழந்தைகளுக்கு காட்டி அவர்கள் படத்தைப் பார்த்த பிறகு சக்கரநாற்காலி பயன்படுத்துபவர்களை பார்த்திருக்கிறீர்களா? என்று கேளுங்கள். யாராவது ஆம் என்று சொன்னால், அந்த குழந்தையிடம் அந்த நபரை எங்கு? எப்பொழுது சந்தித்தீர்கள்? அப்பொழுது அவர்களுடன் யார் இருந்தனர்? அந்த நபரைப்பற்றி கூட இருந்தவர் என்ன சொன்னார்கள்? அந்த நபரிடம் நீங்கள் பேசினீர்களா? ஆம் எனில் நீங்கள் எதைப்பற்றி பேசினீர்கள்? இல்லை என்றால் ஏன் பேசவில்லை? என்று வினவுங்கள்

இந்த செயல்பாட்டின் நோக்கம், இயக்கத்தினால் இயலாமை என்ற கருத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதும் இயக்க குறைபாடு உள்ளவர்களிடம் எப்படி அணுகுவது என்பதையும் கற்றுக்கொடுக்கவும் ஆகும். சக்கர நாற்காலி பயன்படுத்துபவர்களை ஒரு வேடிக்கை பொருளாக பார்க்க / முறைத்துப்பார்க்க வேண்டாம் என்று குழந்தைகளிடம் கூறலாம். மாறாக சக்கரநாற்காலியில் இருப்பவரிடம் அனுமதி கேட்டு அவர்களிடம் பேசவும் மற்றும் அவர்களுடன் நட்பாக பரிமாறவும் சொல்லுங்கள்.

இந்தச்செயல்பாட்டின் மூலம், குழந்தைகளுக்கு மாற்றுத்திறனாளிகளை சமூகத்திலிருந்து ஒதுக்கவோ / புறக்கணிக்கவோ கூடாது என்பதை கற்பிக்கவும்.

**செயல்பாடு 5**

3 தன்னார்வலர்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு தன்னார்வலருக்கும், ஒரு ஜோடி காலுறைகளை கொடுத்து அவர்கள் கையில் அணிந்து கொள்ளச்சொல்லுங்கள். கையினால் செய்யக்கூடிய ஏதாவது நுணுக்கமான வேலையை செய்யச்சொல்லுங்கள். மூவரிடமும் அவர்களது அனுபவத்தைப்பற்றி கேட்டு அதை குழுவுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். கை தசையினால் செயல்பாடு குறைந்திருப்பவர்கள் ஒவ்வொரு நாளும் இதையே அனுபவிக்கிறார்கள். இந்த செயல்பாடுகளைச்செய்ய பயன்படும் கருவி அல்லது பொருட்களுக்கு ஏதேனும் மாற்றங்களுடன் பயன்படுத்த சொல்லிக்கொடுக்கவும் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களது வேலையை எவ்வாறு செய்து கொள்கிறார்கள் என்பதை மாணவர்களுக்கு விளக்கவும்.

**செயல்பாடு 6**

படி 1: இவ்வளவு நேரம் நாம் இயலாமைப்பற்றி கலந்துரையாடிக்கொண்டிருக்கிறோம் குறைபாடு என்றால் என்ன?

படி 2: அதின் வரையறையானது “ஒரு நபரின் இயக்கம், உணர்வு அல்லது செயல்பாட்டினை கட்டுப்படுத்தும் உடல் அல்லது மனநிலை” குறைபாட்டுடன் அணுகல் தன்மையற்ற சூழல்கள், அமைப்புகள் மற்றும் பொருள்களால் அந்த நபரின் செயல்பாடுகள் மற்றும் பங்கேற்றல் பாதிக்கப்படும் நிலையே இயலாமை ஆகும்.

படி 3: இந்த ஒரு நிலையினால் ஒருவர் இயலாமை உடையவர் என்றாகிவிடுமா? அல்லது சமூக கட்டமைப்பு ஒருவரை இயலாதவராக்குகிறதா? சமூகம் எப்படி ஒருவரை இயலாதவர் ஆக்குகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு தரவும்.

படி 4: எடுத்துக்காட்டு- சக்கரநாற்காலியைப் பயன்படுத்தும் ஒரு நபரால் படிகட்டுகள் உள்ள கட்டிடத்திற்கு நுழையவோ அல்லது உயரமாக அமைந்திருக்கும் மேஜையை பயன்படுத்தவோ இயலாது. இவை அவர்களை இயலாதவர்களாக்குகிறது. இதற்கு மாறாக சாய்வு தளங்கள் மற்றும் உயரம் குறைந்த மேஜைகளை அவரால் பயன்படுத்த இயலும். அவர் இயலாதவராக ஆவதில்லை

படி 5: நீங்கள் கண் கண்ணாடி உபயோகிபபவராயிருந்தால் கைகளை உயர்த்தவும். கைகளை உயர்த்தியுள்ள நீங்கள் உங்களை இயலாதவராக கருதுகிறீர்களா?

படி 6: உங்களுக்கு கண்ணாடி இல்லாத பட்சத்தில் உங்களால் பார்க்க இயலாது, நீங்கள் இயலாதவராகிறீர்கள். குறைபாடுடைய ஒரு நபர் இயலாதவர் அல்லது ஊனமுற்றவராக ஆவதற்கு சமூகத்தில் உள்ள தடைகள் மிகபெரிய பங்கு வகுக்கின்றது.

(இந்த செயல்பாடு இயலாமை என்ன என்பதை வரையறுக்கிறது. ஆயினும் இயலாமை என்பது ஒரு நபரின் குறைபாட்டுடன் மட்டும் தொடர்புடையது அல்ல அவர்கள் சமூகம் அமைக்கப்பட்டிருக்கும் நிலையையும் சார்ந்திருக்கிறது என்பதை பங்கேற்பாளர்களால் புரிந்து கொள்ள பங்களிக்கிறது.)

**செயல்பாடு 7:**

படி 1: மாற்றுத்திறனாளிகள் பள்ளியிலும் வாழ்க்கையிலும் என்ன செய்ய முடியும் மற்றும் அவர்களது உரிமைகள் என்ன என்று அவர்கள் நம்புகிறார்கள் என்று குழந்தைகளிடம் கேளுங்கள்.

படி 2: அவர்கள் கூறுவதை குறித்து / எழுதிக்கொள்ளுங்கள், அதனுடன் பின்வருவனவற்றையும் இணைத்துக்கொள்ளவும்.

- சுதந்திரமாக இருக்க முடியும்

- பள்ளியில் நிறைய கற்க முடியும்
- நல்ல மதிப்பெண் பெற முடியும்
- அவர்கள் முடிவை அவர்களே எடுக்க முடியும்
- நல்ல கல்வியைப் பெற முடியும்
- பல்கலைக்கழகம் சென்று படிக்க முடியும்
- சுகாதாரமான கவனிப்பு பெற முடியும்
- வேலைவாய்ப்பு பெற முடியும்
- டாக்டராக பொறியாளராக, தொழிலாளியாக, விஞ்ஞானியாக, ஆசிரியராக, சமையல்காரராக, துப்புறவு தொழிலாளியாக அல்லது வேறு ஏதேனும் வேலை செய்பவராக இருக்க முடியும்.
- குடும்பத்தின் பொறுப்பை தாங்குபவராக
- திருமணம் ஆனவராக
- சொத்து உள்ளவராக
- சுயமாக வாழ்க்கை நடத்துபவராக
- குழந்தை பேறு உடையவராக
- கோவில், தேவாலயம், மசுதி செல்பவராக
- ஒரு நிறுவனத்தின் தலைவராக
- நாட்டின் தலைவராக இருக்க முடியும்

மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு உத்வேகம் தரும் சில கதைகளை குழந்தைகளுக்கு எடுத்துக்காட்டாக கூறவும்.

(சமூகம் மற்றும் பெண்கள் விழிப்புணர்வு பகுதியில் இருக்கும் கதைகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.)

<u>செயல்பாடு 8:</u>

மாற்றுத்திறனாளியான நமது நண்பர்கள் அல்லது வகுப்பு தோழர்களுக்கு நாம் எவ்வாறு உதவலாம் / ஆதரவு தரலாம்?

1. மாற்றுத்திறனாளி குழந்தைகள் / பெரியவர்கள் யாரையும் கிண்டல் செய்யாதீர்கள். எவரேனும் கிண்டல் செய்தால் அவர்களை தடுத்து நிறுத்தவும். (பொருத்தமான படத்தைச் சேர்க்கவும்)



2. மாற்றுத்திறனாளியான உங்கள் நண்பருக்கு கழிப்பறைக்குச் செல்ல, நோட்டு / பேனா பையில் இருந்து எடுக்க, வீட்டிற்குச்செல்ல ஏதாவது உதவி தேவையா என்று கேளுங்கள். பல குழந்தைகள் அவர்களுடன் பள்ளிக்குச் செல்ல துணையாக யாரும் இல்லாத காரணத்தினால் பள்ளிக்கு வருவதில்லை. அவர்களுக்கு உதவும் பொழுது அவர்களால் செய்ய முடிந்ததை அவர்களை செய்ய அனுமதியுங்கள்.
3. பார்வை குறைபாடுள்ள மாணவர் இருந்தால் முதல் வரிசையில் அமர அனுமதியுங்கள். தேவையற்ற இரைச்சலைத் தவிர்த்து அவர்கள் வகுப்புகளைக் கவனிப்பதற்கு உதவுங்கள். பாதைகளை தடைகள் இல்லாமல் வைத்திருக்க வேண்டும். அதாவது பாதைகளில் தடைகள் ஏதாவது இருந்தால் நீக்கவும்.
4. செவித்திறன் குறைபாடுள்ள மாணவர் இருந்தால் அவர்களின் முகத்திற்கு நேராக பேசுங்கள். உங்கள் உதடு அசைவுகளைப் பார்த்து புரிந்துகொள்ளும் வகையில் மெதுவாகப் பேசுங்கள்.
5. ஒரு மாணவர் அங்குமிங்கும் ஓடிக் கொண்டு வழக்கத்திற்கு மாறாக ஒலிகளை எழுப்பினால், அமைதியாக இருங்கள். அவரைப்பார்த்து சிரிக்காதீர்கள். அந்த குழந்தை / நபருக்கு உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் இருக்கலாம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.
6. பல்வேறு குறைபாடுள்ளவர்கள் பங்கு கொள்ளும்படி உங்கள் விளையாட்டை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள். நிகழ்ச்சி நடத்துபவர் குழந்தைகளிடம் ஓய்வு நேரங்களில் (மதிய உணவு வேலை / விளையாட்டு வகுப்புகள்) என்ன விளையாட்டு விளையாடுகிறார்கள் என்று கேளுங்கள் மற்றும் பங்கேற்கும் குழந்தையுடன் இணைந்து ஒருங்கிணைந்த விளையாட்டுகள் சிலவற்றை எடுத்துக் கூறலாம். குறைபாடுள்ள குழந்தைகள் சில நேரங்களில் வேறு வகைகளில் கற்றுக்கொள்வார்கள். அதைப்புரிந்து கொள்ளுங்கள் மற்றும் அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள நிறைய உள்ளது என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

### 7.1.2 நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி விழிப்புணர்வு நிகழ்ச்சி

நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் உயர் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு உடல், அறிவு மற்றும் இதர வகை குறைபாடுகளைப் புரிந்து கொள்ளும் திறன் உள்ளது.

பொதுவாக குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே மாற்றுத்திறனாளி மற்றும் இதர வகை பன்முகத்தன்மைக் கொண்ட மனிதர்கள் பற்றி கற்றுக்கொடுப்பது இல்லை. மேலும் மாற்றுத்திறனாளிகளைப் பற்றிய தவறான நம்பிக்கைகள் மற்றும் கருத்துக்களை பெரியவர்கள் குழந்தைகளுக்கு கூறுகிறார்கள். இதுவே மாற்றுத்திறனாளிகளை கேலி செய்வதற்கும் மற்றும் அவர்களை சமுகத்தில் ஒருங்கிணைக்க முயற்சிற்காததற்கும் காரணமாக அமைகிறது.

மாற்றுத்திறனாளி குழந்தைகளை ஏற்றுக்கொள்வதற்கும் அவர்களுடன் ஈடுபாடுடன் இணைந்திருப்பதற்கும் கற்பிக்காதது, அறியாமை ஆகியவை அவர்கள் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்காத தன்மைக்கும் கிண்டல் செய்வதற்கும் வழிவகுக்கிறது.

கிண்டலடிப்பதற்கு நமது பள்ளிக்கல்வி முறையில் கலாச்சார மாற்றத்தை கொண்டு வருவதன் மூலம் மட்டுமே தீர்வுகான முடியும். இது நீண்ட கால மற்றும் அதிக நேரத்தை எடுத்துக்ககொள்ளும் ஒரு செயல்முறையாகும்.

(எங்கள் சமூக மறுவாழ்வு பணியாளர்கள் (CRW) மற்றும் மறுவாழ்வு பயிற்சியாளர்கள் குறைபாடுடைய குழந்தைகளுடன் பணிபுரிவதோடு மட்டும் அல்லாமல் பள்ளிகளுக்கு சென்று அங்கு மாற்றுத்திறனாளிகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்துகிறார்கள். இதனால் காலப்போக்கில் பள்ளிகளில் மாற்றுத்திறனாளி குழந்தைகளை சமமாக நடத்தும் கலச்சார மாற்றம் ஏற்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.)

**செயல்பாடு-1**

பெயரிடும் முறைகள்:

மாணவர்கள் தங்களுக்குள் மற்ற மாணவர்களை ஏதும் புனைப்பெயர் / குறி கொண்டு கிண்டல் செய்கிறார்களா என்று அவர்களிடம் கேளுங்கள். யாராவது கையை உயர்த்தினால் அவர்களிடம்

என்ன புனைப்பெயர் உங்களுக்கு? உங்கள் புனைப்பெயர் வைத்தது யார்? அந்த பெயரைப்பயன் படுத்தி யார் யார் அழைக்கிறார்கள்? ஏன் அந்தப் பெயர் இட்டார்கள்? அவர்கள் சொந்தப் பெயரில்லாத அந்தப் பெயரை வைத்து அழைத்தால் எங்ஙனம் உணர்கிறீர்கள் என்று வினவுங்கள்.

அவர்கள் விவரித்தப்பிறகு, படங்களைக்காட்டி துன்புறுத்தலுக்கு ஆளான, குறைபாடுள்ள குழந்தைகளின் கதைகளையும் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களைப் பற்றியும் விவரிக்கவும்.




தென்காசி ரெட்டியார்பெட்டியைச் சேர்ந்த திரு.முருகன் தனது 2வயதிலேயே போலியோவால் பாதிக்கப்பட்டு நடக்க இயலாமல் சக்கர நாற்காலியை பயன்படுத்தி வருகிறார். அவர் தனது சிறுவயதுக் கல்வியை அரசுப் பள்ளிகளில் தொடர்ந்தார். அங்கு அவரது இயலாமை காரணமாக அவருக்கு ஆரம்பத்தில் அனுமதி மறுக்கப்பட்டது. கிராமத்தலைவர்களின் சிபாரிசுக்குப்பிறகு அவர் பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஆனால் அவரது மாறுபட்ட இயக்கம் காரணமாக 10 வயது வரை அவரது சக மாணவர்கள்ால் தொடர்ந்து கொடுமைப்படுத்தப்பட்டு கிண்டல் செய்யப்பட்டார். பிறகு இடைநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளி நாட்களில் மற்ற மாணவர்களும் நண்பர்களும் ஆதரவாக இருந்தனர். ஆனால் பள்ளி உள்கட்டமைப்பு ஏதுவாக இல்லாத காரணத்தால் மற்ற மாணவர்கள் போல வழக்கமான நடவடிக்கைளில் ஈடுபட இயலவில்லை. பள்ளியிலுள்ள கழிவறை வகுப்பறையில் இருந்து 1 கி.மீ தொலைவில் இருந்ததால் அவருக்கு பள்ளி கல்வி கடினமானதாக இருந்தது. பின்னர் பள்ளிகளில் விளையாட்டு நேரம் நல்ல திடத்துடன் இருப்பவர்களுக்கு மட்டுமே ஊக்குவிப்பதாக அமைந்தது. எப்போதும் விளையாடும் வாய்ப்பு இவருக்கு மறுக்கப்பட்டது.

இந்த செயல்பாட்டின் மூலம் ஒரு தனிநபரை புனைப்பெயரிடும் கலாச்சாரத்தினால் ஏற்படும் தாக்கத்தை டீன் ஏஜ் மாணவர்களுக்கு புரிய வைக்க முயற்சிக்கிறோம். குறைபாடுள்ளவர்களின் கதைகளை விவரிப்பதன் மூலம் மற்ற மாணவர்கள் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் குரலை கேட்க வழிவகுக்கலாம்.

**செயல்பாடு-2**

பிரதிபிம்பங்கள் மூலம் வேடிக்கை



கண்ணாடியின் பிம்பமாக ஒரு வாக்கியத்தை எழுதுங்கள். ஒரு மாணவரை வாசிக்கச்சொல்லுங்கள். அவர் யாருடைய உதவியையும் நாடவில்லை என்றால் அதன் பிறகு ஒரு

கண்ணாடியை பலகைக்கு அருகில் வைத்து கண்ணாடியில் உள்ள வாக்கியத்தின் பிரதிபலிப்பைப் படிக்கச் சொல்லுங்கள்.

(இந்த செயல்பாட்டின் மூலம் கற்றலில் குறைபாடு பற்றி குழந்தைகளுக்கு கற்பிக்கிறோம். சக தோழர்களுக்கு ஏற்படக்கூடிய கற்றல் குறைபாடு பற்றி குழந்தைகளுக்கு முதல் கட்டமாக அறிமுகப்படுத்துகிறோம்.)

இந்த கருத்தை விளக்கிய பிறகு யாரேனும் இந்தச் குறைபாடு உடையவர்களை கண்டுள்ளார்களா என்று அவர்களிடம் கேளுங்கள். அந்த நபருடன் இவர்கள் எவ்வாறு தொடர்பு கொண்டார்கள் அல்லது நடந்து கொண்டார்கள் என்று கேளுங்கள்.

**செயல்பாடு-3**

விரல்களுடன் விளையாடுதல்:

பங்கேற்பாளர்களிடமிருந்து 3 தன்னார்வலர்களைத் தேர்தெடுக்கவும். அவர்களிடம் விரல்களுக்கிடையில் 2 பேனாக்களை கிடைமட்டமாக பிடித்து எழுதச் சொல்லுங்கள் அவர்களின் அனுபவத்தை அவர்கள் அணியுடன் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.

(இந்தச் செயல்பாடு மூலம் மாணவர்கள் விரல்களால் செய்யும் செயல்களைப் புரிந்துகொள்ளவும், இயக்க தாமத வளர்ச்சி உள்ள குழந்தைகளுக்கு ஏற்படும் சிரமங்களைப் பற்றி தெரிந்துக்கொள்ளவும் மற்றும் விரல் இயக்க குறைபாடுகளால் அவர்கள் எதிர்கொள்ளக் கூடிய பிரச்சனைகளை உணரவும் முடியும்.)

**செயல்பாடு-4**

கண்ணாடி மூலம் பார்ப்பது- 2 தன்னார்வலர்களை தேர்ந்தெடுத்து அவர்களிடம் அவர்கள் பார்வையினை மறைக்கக்கூடிய 2 கண்ணாடியினை அளித்து அவர்கள் வளாகத்தின் ஒரு பகுதிக்கு போகச்சொல்லவும்.

அங்கிருந்து வந்தவுடன் அவர்களது அனுபவத்தை அனைவரிடத்திலும் பகிரச்சொல்லவும், மேலும் அவர்களிடம் உங்களுக்கு என்ன மாதிரி உதவி கிடைத்திருந்தால் வளாகத்தை சுற்றி வருவது இலகுவாக இருந்திருக்கும் என்று கேட்கவும்.

இந்த செயல்பாடு பார்வை குறைபாடு ஒருவர் எதிர்கொள்ளும் சவால்களைப்பற்றி தெரிந்து கொள்ளவும். அவர்களுக்கு உலகம் எவ்வாறு இருக்கும் என்றும் சமூகத்தில் அவர்களுக்கு என்ன வகையான உதவி / ஆதரவு அளிக்கலாம் என்றும் தெரிவிக்கிறது.

செயல்பாடு-5



பரபரப்பான கடைத்தெருவின் படத்தைக்காட்டி, மாணவர்களிடம் அங்கே என்னென்ன செயல்கள் நடந்து கொண்டிருக்கிறது என கேளுங்கள். அந்த கடைத்தெருவில் இருக்கும் ஒருவர் என்னென்ன உணர்வுகளை பெறுவார் என கேளுங்கள். அதை அட்டையில் எழுதுங்கள்.

இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மாணவர்கள் என்னென்ன உணர்வுகளை உணர்கிறார்கள் என கேளுங்கள். அவர்கள் கூறுவதை அட்டைகளில் எழுதிக்கொள்ளுங்கள்.

**உணர்வு ஒருங்கிணைப்பு**

சந்தைக்குச் செல்லும் பொழுது, அனைத்து உணர்வுகளையும் நாம் உணர்ந்தாலும் சந்தைக்கு நாம் சென்ற நோக்கத்தினில் மட்டும் கவனம் செலுத்தி தேவையான பொருட்களை வாங்கி வர இயலும். மேலும் அனைத்து புலன்களையும் நம்மால் ஒருங்கிணைக்க முடிகிறது. ஆனால் இந்த உணர்வுகள் ஒருங்கிணையாமல் தனித்தனியாக இருக்கும்பொழுது நமது நோக்கத்தில் கவனம் செலுத்துவது கடினமாக இருக்கும். மேலும் ஆட்டிசம் உள்ளவர்களுக்கு உணர்வுகளை ஒருங்கிணைப்பதில் பிரச்சனை இருப்பதால் அதை சமன் படுத்துவதற்காக, அவர்கள் வித்யாசமான செயல்பாடுகளை செய்கிறார்கள் அல்லது செய்ய வேண்டியிருக்கிறது.

செயல்பாடு-6

பச்சாதாபம் Vs அனுதாபம் Vs பரிதாபம்

சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் செயல்பாடு 5ல் அறிமுகப்படுத்தப்பட்ட அதே கேள்விகள் மற்றும் அறிவுறுத்தல்களை நீங்கள் இங்கே பயன்படுத்தலாம். இந்த செயல்பாடு அனுதாபம், பரிதாபம் மற்றும் பச்சாதாபம் ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டைக் கற்பிக்கிறது. மேலும்

சமுதாயத்தின் சரியான புரிதல் இல்லாததால், குறைபாடுள்ளவர்களுக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுவதற்கு எப்படி வழிவகுக்கிறது என்பதையும் வலியுறுத்துகிறது.

**செயல்பாடு -7**

படி1: குறைபாடுள்ள குழந்தைகள் பள்ளியில் மற்றும் வாழ்வில் என்ன பெறமுடியும் என்று நினைக்கிறீர்கள்? என்று கேளுங்கள்

படி2 மாற்றுத்திறனாளிகள் பள்ளியிலும் வாழ்க்கையிலும் என்ன செய்ய முடியும் மற்றும் அவர்களது உரிமைகள் என்ன என்று அவர்கள் நம்புகிறார்கள் என்று குழந்தைகளிடம் கேளுங்கள்.

படி 2: அவர்கள் கூறுவதை குறித்து / எழுதிக்கொள்ளுங்கள், அதனுடன் பின்வருவனவற்றையும் இணைத்துக்கொள்ளவும்.

- சுதந்திரமாக இருக்க முடியும்
- பள்ளியில் நிறைய கற்க முடியும்
- நல்ல மதிப்பெண் பெற முடியும்
- அவர்கள் முடிவை அவர்களே எடுக்க முடியும்
- நல்ல கல்வியைப் பெற முடியும்
- பல்கலைக்கழகம் சென்று படிக்க முடியும்
- சுகாதாரமான கவனிப்பு பெற முடியும்
- வேலைவாய்ப்பு பெற முடியும்
- டாக்டராக பொறியாளராக, தொழிலாளியாக, விஞ்ஞானியாக, ஆசிரியராக, சமையல்காரராக, துப்புறவு தொழிலாளியாக அல்லது வேறு ஏதேனும் வேலை செய்பவராக இருக்க முடியும்.
- குடும்பத்தின் பொறுப்பை தாங்குபவராக
- திருமணம் ஆனவராக
- சொத்து உள்ளவராக
- சுயமாக வாழ்க்கை நடத்துபவராக
- குழந்தை பேறு உடையவராக
- கோவில், தேவாலயம், மசூதி செல்பவராக
- ஒரு நிறுவனத்தின் தலைவராக
- நாட்டின் தலைவராக இருக்க முடியும்

**ஒருங்கிணைத்தல் என்பது பன்முகதன்மை கொண்ட ஒரு வண்ண மாலை:**

மனிதர்கள் அனைவரும் ஒரே மாதிரி இல்லை. நமக்குள் பல்வேறு வித்யாசங்கள் உள்ளன - இனம், மொழி, நிறம், பாலினம், திறன்கள், உயரம் போன்றவற்றை பார்க்கும் போது நாம் வேறுபட்டே இருக்கிறோம். ஆனாலும் நாம் மனிதர்கள் என்ற ஒரு அடையாளத்துடன் சமமாக மதிக்கப்படுகிறோம். மனிதர்களில் சிலர் அதிக திறன்களுடனும், சிலர் குறைபாட்டுடன் இருப்பதும் இந்த வேறுபாடுகளின் ஒரு அங்கமே.

குறைபாடுள்ளவர்களும் சமூகத்தில் உள்ளடங்கி இருத்தல் என்பது மனித இனத்தின் பன்முகத்தன்மையை மதித்து ஏற்றுக்கொள்வதாகும்.

ஒருங்கிணைந்த கல்வியை மேம்படுத்த நாம் என்ன சொல்லலாம் ?

1. குறைபாடுள்ள குழந்தைகள் பள்ளிக்கு வராததற்கு முக்கிய காரணம் கேலி செய்யப்படுதல். நீங்கள் விளையாட்டாக மாற்றுத்திறனாளி குழந்தைகளை கேலி செய்யலாம். ஆனால் அது அந்த நபரை புண்படுத்துவதோடு அவரின் தன்னம்பிக்கையையும் குறைப்பதால் அவர் பள்ளிச்செல்வதை வெறுக்கலாம். இவ்வாறாக நீங்கள் ஒருவரின் கல்வி கற்கும் வாய்ப்பை மறைமுகமாக தடுக்கிறீர்கள்.

2. குறைபாடுள்ள குழந்தைகள் / பெரியவர்களை மற்றும் பரிகாசம் செய்யாதீர்கள். யாரேனும் கேலி செய்தால் அவர்களை நிறுத்துங்கள். நீங்கள் விளையாட்டாக கேலி செய்யலாம். ஆனால் அது ஒருவரின் கல்வி கற்கும் வாய்ப்பை குறைக்கிறது. (பொருத்தமான படத்ததைச் சேர்க்கவும்

மாற்றுத்திறனாளியான நமது நண்பர்கள் அல்லது வகுப்பு தோழர்களுக்கு நாம் எவ்வாறு உதவலாம் / ஆதரவு தரலாம்?

1. மாற்றுத்திறனாளி குழந்தைகள் / பெரியவர்கள் யாரையும் கிண்டல் செய்யாதீர்கள். எவரேனும் கிண்டல் செய்தால் அவர்களை தடுத்து நிறுத்தவும். (பொருத்தமான படத்தைச் சேர்க்கவும்)
2. மாற்றுத்திறனாளியான உங்கள் நண்பருக்கு கழிப்பறைக்குச் செல்ல, நோட்டு / பேனா பையில் இருந்து எடுக்க, வீட்டிற்குச்செல்ல ஏதாவது உதவி தேவையா என்று கேளுங்கள். பல குழந்தைகள் அவர்களுடன் பள்ளிக்குச் செல்ல துணையாக யாரும் இல்லாத காரணத்தினால் பள்ளிக்கு வருவதில்லை. அவர்களுக்கு உதவும் பொழுது அவர்களால் செய்ய முடிந்ததை அவர்களை செய்ய அனுமதியுங்கள்.
3. பார்வை குறைபாடுள்ள மாணவர் இருந்தால் முதல் வரிசையில் அமர அனுமதியுங்கள். தேவையற்ற இரைச்சலைத் தவிர்த்து அவர்கள் வகுப்புகளைக் கவனிப்பதற்கு உதவுங்கள். பாதைகளை தடைகள் இல்லாமல் வைத்திருக்க வேண்டும். அதாவது பாதைகளில் தடைகள் ஏதாவது இருந்தால் நீக்கவும்.

4. செவித்திறன் குறைபாடுள்ள மாணவர் இருந்தால் அவர்களின் முகத்திற்கு நேராக பேசுங்கள். உங்கள் உதடு அசைவுகளைப் பார்த்து புரிந்துகொள்ளும் வகையில் மெதுவாகப் பேசுங்கள்.
5. ஒரு மாணவர் அங்குமிங்கும் ஓடிக் கொண்டு வழக்கத்திற்கு மாறாக ஒலிகளை எழுப்பினால், அமைதியாக இருங்கள். அவரைப்பார்த்து சிரிக்காதீர்கள். அந்த குழந்தை / நபருக்கு உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் இருக்கலாம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.
6. பல்வேறு குறைபாடுள்ளவர்கள் பங்கு கொள்ளும்படி உங்கள் விளையாட்டை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள். நிகழ்ச்சி நடத்துபவர் குழந்தைகளிடம் ஓய்வு நேரங்களில் (மதிய உணவு வேலை / விளையாட்டு வகுப்புகள்) என்ன விளையாட்டு விளையாடுகிறார்கள் என்று கேளுங்கள் மற்றும் பங்கேற்கும் குழந்தையுடன் இணைந்து ஒருங்கிணைந்த விளையாட்டுகள் சிலவற்றை எடுத்துக் கூறலாம். குறைபாடுள்ள குழந்தைகள் சில நேரங்களில் வேறு வகைகளில் கற்றுக்கொள்வார்கள். அதைப்புரிந்து கொள்ளுங்கள் மற்றும் அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள நிறைய உள்ளது என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.
7. . மாற்றுத்திறனாளி மாணவர்களிடம் அவர்களுக்கு என்ன உதவி தேவைப்படும் என கேட்டு அதை மட்டும் செய்யுங்கள். உதவிகிறேன் என்ற கணக்கில், மாற்றுத்திறனாளிகள் தானாக செய்கிற / செய்ய விரும்புகிற விஷயங்களை நாம் செய்யக் கூடாது. ஊதாராணம்: ஒரு மாற்றுத்திறனாளி தானாக சக்கர நாற்காலியில் மற்ற இடங்களுக்கு சென்று வர விரும்புகிறார். ஆனால் அவருக்கு கொஞ்சம் மேடான பகுதியில் செல்வதற்கு மட்டும் உதவி தேவைப்படுகின்றதென்றால் அதை மட்டும் செய்யவும்.
8. குறைபாடுள்ள மாணவர்கள் உங்களுடன் படிப்பதை பற்றி உங்கள் பெற்றோர் கவலைப்பட்டால் உங்கள் பெற்றோரிடம் பேசுங்கள் உங்கள் வகுப்பு எவ்வளவு மாறுபட்டது, உங்கள் வகுப்பில் மாற்றுத்திறனாளி ஒருவர் இருப்பது பன்முகத்தன்மையை அதிகரிக்கிறது மற்றும் உங்கள் கல்வியை மேம்படுத்துகிறது என்பதைப்பற்றி சொல்லுங்கள்.

## 7. 2 ஒருங்கிணைந்த வகுப்பறையை மேம்படுத்த ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு.

ஒரு குழந்தையின் வாழ்க்கையில் ஆசிரியர்கள் முக்கிய பங்குதாரர்கள் ஆவர். பள்ளிகளில் மாற்றுத்திறனாளி குழந்தைகளைச் சேர்ப்பது மட்டுமல்லாமல் கற்றல் செயல்பாட்டில் சேர்ப்பதும் ஒருங்கிணைந்த கல்வி என்ற எண்ணத்தில ஆசிரியர்கள் இருப்பது முக்கியம் ஒவ்வொரு குழந்தையின் வாழ்க்கையிலும் ஊக்குவிப்பவர் மற்றும் முன்மாதிரியாக செயல்படும் ஆசிரியர்களின் ஆதரவு இல்லாமல் ஒருங்கிணைந்த கல்வியின் முழு யோசனையும் தோல்வியடையும். ஸ்கரர்கள் மாஸ்ட்ரோபியரி மற்றும் லியன்ஸ் (2011) குழு அமெரிக்கா, இத்தாலி, செர்பியா, கிரீஸ் மற்றும் தென்கொரியா நாடுகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் மனப்பான்மையை முறையாக மதிப்பாய்வு செய்தது அதில் 40% பங்கேற்பாளர்கள் மட்டுமே

குறைபாடுள்ள குழந்தைகள் பொதுக் கல்வி வகுப்பில் படிக்க வேண்டும் என்று ஒப்புக் கொண்டனர். ஆசிரியர்களின் இந்த எண்ணங்களை மாற்றி ஒருங்கிணைந்த கல்வியின் முக்கியத்துவம் பற்றி புரியவைப்பதே எங்களின் நோக்கமாகும். இதற்காக நாம் ஆசிரியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

ஷீல்மான் (2004) அவர்களின் கூற்றுப்படி ஆசிரியர் கல்வி என்பது ‘‘மூன்று பயிற்சிகள்’’ என்று அழைக்கப்படும். மூன்று முக்கிய கூறுகளுடன் ஆசிரியர்களை தயார்படுத்த வேண்டும் இவை இதயம், தலை மற்றும் கை.

வகுப்பறை அணுகுமுறை:

**இதயம் :** மனப்பான்மையில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும். இது கேட்பதற்கு எளிமையாக இலகுவாக இருப்பதைப்போல் தோன்றினாலும் அதிக காலம் எடுத்துக்கொள்ளும் பணிகளில் ஒன்றாகும். குறைபாட்டின் காரணமாக விலக்குவதை ஆதரிக்கும் நமது நாட்டில் இது மிகவும் கடினமான ஒன்றாகும்.

**தலை:** ஒருங்கிணைந்த கல்வியினை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான உத்திகள், யோசனைகள் மற்றும் திட்டங்களை வழங்குதல். நம் நாட்டில் ஆசிரியர் பயிற்சிகளில் ஒவ்வொரு வகுப்பு மற்றும் பாடத்தில் ஒருங்கிணைந்த கல்வியை எவ்வாறு நடத்த வேண்டும் என்ற பாடத்திட்டங்கள் இல்லை. மேலும் நம் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் ஒருங்கிணைந்த பள்ளிக்குச் சென்று பயிற்சி எடுத்திருக்கவில்லை. எனவே ஒருந்கிணைந்த வகுப்பறையைக் கையாளும் திறன் பொதுவாக அவர்களிடம் இல்லை. காலப்போக்கில் அனைத்து கற்பித்தல் திட்டங்களிலும் சிறப்புக் கல்வியை ஒரு முக்கிய பாடமாக நாம் பரிந்துரைக்க வேண்டும். தற்போதைக்கு ஒருங்கிணைந்த கல்வியின் தத்துவம் மற்றும் நடைமுறை அறிவைக் கொண்ட எங்கள் சிறப்புக் கல்வியாளர்களை கொண்டு நம் சமூகத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

**கை:** ஒருங்கிணைந்த வகுப்பறையை வழிநடத்த தேவையான திறன்களை வழங்குதல்; ஒருங்கிணைந்த வகுப்பறையில் அதாவது குறைபாடுள்ள/குறைபாடற்ற மற்றும் இன்னபிற சமூக பொருளாதார வேறுபாடுகள் உள்ள சமூகத்தில் இருந்து வரும் அனைத்துக் குழந்தைகளையும் கையாள தேவையான திறன்களை வழங்குவதும். பாடத்திட்டம் மற்றும் மதிப்பீடு ஒவ்வொரு குழந்தையின் திறனைப் பொறுத்து தனித்தனியாக வடிவமைக்க தேவையான பயிற்சிகளை ஆசிரியர்கள் பெற்றியிருக்க வேண்டும்.

**ஆசிரியர்களின் விழிப்புணர்வுக்கான செயல்பாடுகள்:**

**செயல்பாடு-1 (15 நிமிடம்)**

உங்கள் வகுப்பிலோ அல்லது ஆசிரியர் பயிற்சியின் போதோ நீங்கள் சந்தித்த ஒரு மாற்றுத்திறனாளி குழந்தை பற்றி விவரியுங்கள்-என்ன குறைபாடு என்னென்ன செயல்களில் அந்த குழந்தை ஈடுபட்டது, எவ்வாறு கற்றது மேலும் அந்த குழந்தை கற்றலை ஊக்குவிக்க என்ன மாதிரியான பொருத்தமான தகவமைப்புகள் செய்யப்பட்டது. விவாதத்திற்குப் பிறகு, அவர்கள் விவாதித்ததை பெரிய குழுவிற்கு சில குழுக்கள் மூலம் வழங்கச் சொல்லுங்கள்.

செயல்பாடு- 2

**ஒருங்கிணைந்த கல்வியை பற்றி விளக்குங்கள்:**

குறைபாடுள்ள குழந்தைக்கு கற்பித்த அனுபவம் உங்களில் பெரும்பாலானவர்களுக்கு இருக்கும். குறைபாடுள்ள குழந்தைகள் ஏன் வழக்கமான பள்ளியில் படிக்க வேண்டும்.?

ஒருங்கிணைந்த கல்வி என்றால் என்ன?

எல்லா குழந்தைகளுக்கும் பள்ளியில் கற்க சம வாய்ப்புகள் வழங்கி, ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான ஆதரவை வழங்கி அவர்களுக்கு ஏற்றப்படி கற்பித்தால், ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய அதிகபட்ச திறன்களை அடைய முடியும் என்ற அடிப்படையில் அமைந்ததே ஒருங்கிணைந்த கல்வி ஆகும்.

## ஒருங்கிணைந்த கல்வியின் முக்கிய கருத்து மற்றும் விளக்கங்கள்

| **கருத்து** | **விளக்கம்** |
|---|---|
| ஒவ்வொரு குழந்தையும் உடல் திறன் மற்றும் மனதிறன் அடிப்படையில் தனித்துவம் பெற்றவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கற்கிறார்கள். மற்றும் ஒவ்வொரு மனிதனும் தங்களுடைய பாணியில், அவர்களது அனுபவதிற்கு மற்றும் சூழலுக்கு ஏற்ப செயல்படுவார்கள். | இனம், மொழி, நிறம், பாலினம், வயது சமூக நிலை, உடல்திறன், அறிவுத்திறன், விருப்பங்கள், மத நம்பிக்கைகள் ஆகியவற்றில் வேறுபட்டு இருப்பதே மனித இனத்தின் பன்முகத் தன்மை ஆகும். ஒருங்கிணைந்த கல்வியின் நோக்கமே. இவ்வாறு பன்முகத்தன்மை கொண்ட குழந்தைகளை ஒருங்கிணைத்து கற்பிப்பதே ஒருங்கிணைந்த கல்வி.  (பன்முகத் தன்மையையும் தனித்தன்மையையும் கொண்டாடுவோம். |
| நியாயமாக ஒரு குழந்தை குறைந்த கட்டுப்பாடுகள் மற்றும் அவர்களின் தேவைக்கு ஏற்ற உகந்த சூழலில் கல்வி கற்க வேண்டும். | ஒருங்கிணைந்த கல்வி கற்கும் போது குழந்தைகளுக்கு தன்நம்பிக்கை அதிகரிக்கும். மேலும் மற்றவர்களுடன் பங்கேற்றல் மற்றும் பகிர்ந்து கொள்தல் போன்ற உயரிய பண்புகளை வளர்க்கும். ஒருங்கிணைந்த கல்வி என்பது ஒவ்வொரு குழந்தையின் உரிமையே தவிர எந்த குழந்தைக்கும் அளிக்கப்படும் சலுகை அல்ல. |
| சமத்துவம் என்பது சமமாக இருப்பது என்று அர்த்தமன்று. ஒரு இலக்கை அடைவதற்கு ஒவ்வொருவருடைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தேவையான வாய்ப்புகள் மற்றும் வளங்களை | கற்றல் சூழல்களில் உள்ள பன்முகத் தன்மையின் தேவையை சுட்டி காட்டி அனைவருக்கும் திறனுள்ள மற்றும் பயனுள்ள கற்றல் அனுபவங்களை கொடுத்தலே ஒருங்கிணைத்தலின் அடிப்படைத் தத்துவம் ஆகும். |

| | |
|---|---|
| வழங்குவதாகும். சமமான வாய்ப்புகளைக் கொடுப்பதற்கு தேவைப்படுபவர்களுக்கு அவர்களின் பாதகமான சூழ்நிலையை கணக்கில் கொண்டு தேவையான ஆதரவை வழங்குவதே நியாயம் ஆகும். (Equity)   | |
| அனைத்து ஆசிரியர்களும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களாக இருக்க வேண்டும். | குறைபாடுகளை விட திறன்களில் கவனம் செலுத்துங்கள். |
| அனைத்து மாணவர்களின் தேவைகளையும் சமமாக மதிக்கவும். | பன்முகத் தன்மை மற்றும் தனித்துவத்தை கொண்டாடுங்கள். |

## செயல்பாடு:3

பங்கேற்பாளர்களை மூன்று குழுக்களாக பிரித்துக் கொள்ளவும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு குறைபாடு எழுதப்பட்ட அட்டை கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் குறைபாடுடைய குழந்தையை ஒருங்கிணைந்த கல்வி கற்பதில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களைப்பற்றி விவாதித்து பட்டியலிடவும். மேலும் அதை அனைவரும் இணைந்த குழுவில் விவரிக்கவும்.

1. குறைபாடான உடல் திறன் உடைய குழந்தை
    - தானாக உட்கார இயலாமை
    - நிற்கவும் நடக்கவும் இயலாமை.
2. குறைபாடான அறிவாற்றல் திறன்கள்
    - வாய்வழி கட்டளைகள்/சமூக விதிகளை பின்பற்ற இயலாமை
    - ஓர் இடத்தில் உட்கார முடியவில்லை/வகுப்பினுள் இருந்து ஓடுதல்
    - கழிப்பறை தேவைகளை குறிப்பிட இயலாத தன்மை
    - கற்றலிலில் தாமதம்.
    - குறிப்பிட்ட கற்றல் குறைபாடுகள்.
3. குறைபாடான உணர்வு திறன்கள்
    - காது கேளாமை,
    - சைகைகளை புரிந்து கொள்ளுதல்
4. குறைபாடான உணர்வு திறன்கள்
    ய. பார்வை கோளாறு
5. குறைபாடான உணர்வு திறன்கள்
    ய. ஒலி, ஒளி அதிக உணர்திறன்

விவாதத்திற்குப் பிறகு சிறிய குழுக்களை தங்கள் விவாதத்தை பெரிய குழுவிற்கு விளக்கச் சொல்லுங்கள்.

செயல்பாடு 4 :

ஒருங்கிணைந்த கல்விக்கான சாத்திய கூறுகளை ஒன்றாக ஆராயுங்கள். பங்கேற்பாளர்களை 5 குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழவிற்கும் கீழே உள்ள காட்சிகளில் ஒன்றைக் கொடுக்கவும். பின்வரும் நிபந்தனைகளைச் கொண்ட குழந்தைகளை அவர்களின் பள்ளிகளில் சேர்ப்பதில் உள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகள் மேலும் இந்தக் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு வசதியாக வகுப்பறை மற்றும் அவர்களின் பாடத்திட்ட விநியோகத்தில் அவர்களுக்கு என்ன மாற்றங்கள் தேவை என்பதை பற்றி சிந்திக்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

1. முடக்குமூளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட 7 வயது சோபியவால் தானாக உட்கார முடியும் குறுகிய தூரத்திற்கு ஊர்ந்து செல்ல முடியும். உட்கார்ந்த நிலையில் கீழ் ஆடையை அகற்ற முடியும், ஆனால் அதை செய்வதற்கு குறைந்தது 10 நிமிடங்கள் ஆகும். அவள் வாய்மொழி கட்டளைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு சைகைகளில் மற்றும் மெதுவாக ஓரிரு வார்த்தைகளால் பதிலளிக்கிறாள்.
2. முடக்குமூளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட 12 வயது இசக்கிமுத்துவால் தானாக உட்கார முடியாது. கை மற்றும் கால்களில் அனிச்சையான அசைவுகள் இருக்கும். பேசும் வார்த்தைகளை புரிந்து கொண்டு சைகைகளால், தான் கூற வருவதை வெளிப்படுத்துவார். அவர் வாயில் உமிழ் நீர் வழிந்து கொண்டிருக்கும்.
3. ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட 8 வயது சரவணன், சில சமயங்களில் அலட்சியமாக சத்தம் போடுவார், தானாக சாப்பிடவும், உடைமாற்றவும், கழிப்பிடம் செல்லவும் தெரியும். ஆனால் சமூக விதிகளை பின்பற்றுவதில்லை. மேலும் சொல்வதை கவனக்காத்து போல் நடந்து கொள்வார் அறிவுறுத்தல்களை கேட்பதில்லை.
4. செவித்திறன் குறைபாடுள்ள 8 வயது கோகுலால் புத்தகம் மற்றும் கரும்பலகையில் உள்ளவற்றை அப்படியே எழுதுவார், சைகைகளைப் புரிந்து கொள்வார்.
5. பார்வைக் குறைபாடுள்ள 11 வயது இசைகுமாரி பழக்கமான இடங்களில் தானாக செல்ல முடியும்.

ஆசிரியர்கள் அவர்களின் குழு விவாதத்தை அனைவருடனும் பகிர்ந்து கொள்ளும் போது குழந்தைகளுக்கு மேலும் தேவையான உதவி உபகரணங்கள், சுற்று சூழலில் இட மாற்றங்கள், சிறப்பு கற்பித்தல், கற்றல் பொருள்கள், அவர்களுக்கான சிறப்புக் கல்வி பயிற்சி மற்றும் ஆதரவாளர்/ உதவியாளர் போன்ற ஒருங்கிணைந்த ஊக்குவிக்க தேவைப்படுபவைகளைப் பற்றி குறிப்பிடலாம். இதன் மூலம் பள்ளி நிர்வாகம் மற்றும் உயர் அதிகாரிகளிடமிருந்து இந்த ஆதரவைக் கோர ஆசிரியர்களை ஊக்குவிக்க வேண்டும் மற்றும் அவர்களின் வகுப்பறைகளில் இந்த மாற்றங்களில் சிலவற்றை அவர்களாகவே நடைமுறைப்படுத்த ஊக்கிவிக்க வேண்டும்.

**உதாரணமாக:** ஒரு குழந்தைக்கு பராமரிப்பாளர் தேவைப்பட்டால் குழந்தையுடன் இருக்கும்படி பெற்றோரை நாம் கேட்டுக் கொள்கிறோம். தேவையான விஷயங்களை நாம் கோரிக்கையாக உயர் நிலைக்கு நாம் கொண்டு செல்வதில்லை, கல்வி அமைப்பில் கோரிக்கைகளை நாம் உருவாக்குவதில்லை. அதற்கு பதிலாக சிலர் குழந்தையை பள்ளியில் சேர்ப்பதற்கோ, வகுப்பறைக்கு வருவதற்கோ தடுக்ககிறார்கள். ஒருங்கிணைந்த கல்வியை நடத்த பள்ளிக்கு தேவைப்படும் வசதிகளை நாம் கோரிக்கையாக வைக்காவிட்டால், கல்வி நிர்வாகம் பள்ளிகளுக்குத் தேவையான வளங்களை வழங்க முடியாது. சுருங்கச்சொன்னால் தேவையான வளங்களை கேட்டால் தான் பெற முடியும்.

**செயல்பாடு**

ஒருங்கிணைந்த கல்வி கற்பிக்கும் வகுப்பு அமர்வுகளின் வீடியோக்களை காட்டவும். ஒரு சில பாடத் திட்டங்களின் உதாரணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் சிலவற்றை நீங்கள் ஆசிரியர் குழுவுடன கலந்துரையாடலாம்.

**எடுத்துக்காட்டு. 1**

தமிழ்நாடு மாநில வாரிய பாடநூல்

பொருள்: 5ம் வகுப்பு ஆங்கிலம் https://www.tntextbooks.in/p/5th-books.html பாடம் - அலகு 2 கதை 2 (பக்கம் எண். 119-120) கதையின் தலைப்பு: பயிற்சி ஒரு மனிதனை முழுமைப்படுத்துகிறது.

**அறிமுகம்:**

அ) . உரை பற்றி

ஐந்தாம் வகுப்பு தமிழ்நாடு மாநில பாடத்திட்ட பாடப்புத்தகத்திலிருந்து இந்த உரை எடுக்கப்பட்டுள்ளது. பயிற்சியின் மூலம் எவரும் ஒரு திறமையைப் பெறலாம் என்பதே கதையின் கரு. இரண்டு விளக்கப்படங்கள் மட்டுமே பாடப்புத்தகத்தில் உள்ளன. எல்லாக் குழந்தைகளும் கதையைப் புரிந்து கொள்ள இது போதுமானதாக இருக்காது. இந்த கதையை புரிந்து ஈர்க்கக் கூடியதாகவும் ஊடாடக்கூடியதாகவும் மாற்றுவதற்கும், மாற்றுத் திறனாளிகள் உட்பட பல்வேறு திறன்களைக் கொண்ட அனைத்து குழந்தைகளையும் ஈடுபடுத்துவதற்கும் ஆசிரியர்களால் செய்ய முடியும். குழந்தைகள் தாங்களாகவே வாசித்து கொள்ளக் கூடிய வகையில் இது மிகச் சிறிய கதையாகும். இதை முழு வகுப்பிற்கும் ஆசிரியர் உரக்க வாசிக்கலாம்.

**ஆ) மாணவர்கள்:**

பின்வரும் சூழ்நிலையில் நீங்கள் ஒரு வகுப்பறையில் இருப்பதாக கற்பனை செய்து பாருங்கள். சென்னை மாநகராட்சி பள்ளியின் ஐந்தாம் வகுப்பில் 32 குழந்தைகள் உள்ளனர். பள்ளி நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது மற்றும் பெரும்பாலான குழந்தைகள் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இறுகிய நாக்கிற்கு அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெண், ஆண் என இரு குழந்தைகள் உள்ளன. இருவராலும் தெளிவாக பேச முடியவில்லை. மேலும் சிறுமிக்கு கால் விரல்கள் வளைந்துள்ளன. நடப்பதற்கு அவளுக்கு ஆதரவு தேவைப்படுகிறது. பார்வை குறைபாடுள்ள ஒரு சிறுவன் இருக்கிறான். மற்றொரு சிறுவன் மருத்துவக் கோளாறு காரணமாக பள்ளிப் படிப்பை தொடர முடியாமல் 4-ம் வகுப்பு படிக்காமலேயே 5ம் வகுப்பில் சேர்ந்தான். மற்றொரு பெண் குழந்தை ஊட்ட சத்து குறைபாடு உள்ளதால் வகுப்பில் அவள் பங்கேற்பது எப்போதும் குறைவாகவே இருந்துள்ளது. மேலும் ஒரு குழந்தை தன் குடும்பத்துடன் சமீபத்தில் நகரத்திற்கு இடம் பெயர்ந்துள்ளது. அவள் தமிழ் (உள்ளூர்) அல்லது ஆங்கிலத்தை புரிந்து கொள்ள முடியாத தெலுங்கு மொழி பேசுபவள். வகுப்பறையில் இருந்த இரண்டு குழந்தைகளுக்கு ADHD இருப்பது கண்டறியப்பட்டது. வகுப்பில் சுமார் 20 சதவீதம் பேர் மட்டுமே அந்த வகுப்பின் பாட உரையைப் படித்து புரிந்து கொள்ள முடியும். இந்த கதையை விளக்கி அனைத்து குழந்தைகளையும் சிறப்பாக ஈடுபடுத்த ஆசிரியர்களுக்கு பின்வரும் வழிகாட்டுதல் உதவும்.

**குறிக்கோள்/ நோக்கம்:**

மாணவர்களை கதையிலுள்ள பாத்திரங்களின் செயல்களை விவரிக்க வைத்தல்.

**உரையை படித்தல்:**

அ) உரையாடலை ஆரம்பித்து வைத்தல் : 5 நிமிடங்கள் கதையின் தலைப்பை பார்த்து மாணவர்கள் தங்கள் எண்ணங்களை அருகிலுள்ளவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். சில வழிகாட்டும் கேள்விகள்.

இந்த வாக்கியத்தை நீங்கள் இதற்கு முன் எப்போதாவது கேள்விபட்டிருக்கீறீர்களா? படித்திருக்கிறீர்களா? அப்படியானால் எப்போது ? இதன் அர்த்தம் என்ன?

அதன் பிறகு இரண்டு மாணவர்களை அழைத்து அவர்களின் கலந்துரையாடலை அனைத்து வகுப்பு மாணவருடனும் பகிர்ந்து கொள்ள சொல்லுங்கள்.

ஆ) பின்னனி அறிவை உருவாக்குதல்: 10 நிமிடங்கள்.

வில்வித்தை மற்றும் சுரைக்காய் போன்ற திறவுச் சொற்கள் கதையைப் புரிந்து கொள்ள மிகவும் முக்கியமான வார்த்தைகள் ஆகும். இந்த வார்த்தைகளை பொருள்களின் தொகுப்புகளைப் பயன்படுத்தி முழு வகுப்பிற்கும் விளக்க வேண்டும். வில்வித்தை விளையாட்டை மற்றும் சுரைக்காயின் பாடங்களை இரண்டு வில்வித்தை பொம்மை தொகுப்புகள் மற்றும் சுரைக்காய் ஓடுகளை பயன்படுத்தி விளக்கலாம். வகுப்பு மாணவர்களை 5-7 நபர்களைக் கொண்ட ஆறு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். அவர்களை ஒரு வட்டமாக உட்காரச் சொல்லவும். வில்வித்தை மற்றும் சுரைக்காய் படங்கள் A4 தாளில் அச்சடிக்கப்பட்டு பலகையில் ஒட்டப்பட வேண்டும். வில்வித்தை பொம்மை தொகுப்பை ஒரு குழுவிற்கு வழங்க வேண்டும். இன்னொரு குழுவிற்கு காய்ந்த சுரைக்காய் ஒடு வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் முதலில் 5 நிமிடத்திற்கு அவற்றை பார்க்கலாம். அதன் பிறகு அவர்களுக்கு கொடுத்தவற்றை வேறு குழுவிடம் மாற்றிக் கொள்ள வேண்டும். பொம்மை கிடைக்காவிட்டால் ஆசிரியர் ஒரு குச்சி மற்றும் நூலைப் பயன்படுத்தி வில் மற்றும் அம்புகளைத் தயார் செய்ய வேண்டும். அதே போல் வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன் சுரைக்காயை தயார் செய்து வைக்க வேண்டும்.

**குழு வேலை: வினாடி வினா –5 நிமிடங்கள்.**

ஒரு சிறிய வினாடி வினா நடத்தலாம். ஒவ்வொரு குழுவிற்கும் சொற்களின் தொகுப்பு வழங்கப்படும் மற்றும் ஒவ்வொரு வாய்ப்பு வழங்கப்படும். முந்தைய செயல்பாட்டின் உதவியுடன் வார்த்தை அல்லது அதன் அர்த்தத்தை யூகிக்கலாம். வகுப்பில் மற்றவர்களுக்கு அந்த வார்த்தைகளின் அர்த்தத்தை குழு தெளிவுபடுத்தினால் பங்கேற்பாளருக்கு புள்ளிகள் வழங்கப்படும். வில்வித்தை, இலக்கு, வில், அம்பு, வில்லாளி மற்றும் எண்ணெய் சுரக்காய் போன்றவையே அந்த வார்த்தைகளாகும்.

முந்தைய செயல்பாட்டில் பார்த்ததை அவர்களால் விளக்க முடியும் என்பதால் இது மாணவர்களுக்கு எளிதானதாக இருக்கும். ஆசிரியர் வினாடி வினா முடிவில் பதில்களை சுருக்கமாக கூறலாம்.

**சொற்களஞ்சியம்: (விளக்கப்பட வேண்டிய சொற்கள்)**

வாசிக்கும் போது சொற்களஞ்சிய வார்த்தைகளை அதன் அர்த்தங்களுடன் குழந்தைகள் பார்க்கும் வகையில் பலகையில் காட்ட வேண்டும்.

இந்த பயிற்சியானது கேள்விகளைக் கேட்பது, அர்த்தத்தை கணிக்க சூழ்நிலைகளை வழங்குவது, வார்ததைகளைப் புரிந்து கொள்ள எடுத்துக்காட்டுகள் கொடுப்பது போன்ற விவாதங்களின் அமைப்பில் அதிகமாக இருக்க வேண்டும். சில சூழ்நிலைகளை விவரிக்கும் போது பொருத்தமான

சைகைகள் மற்றும் மெதுவாக பேசுதல் ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும். கரும்பலகையில் எழுதுவதற்கும், கை சைகைகளுக்கும் ஒரு சமநிலை இருக்க வேண்டும். சத்தமாக வாசிக்கும் பொழுது கீழே எழுதப்பட்ட திட்டத்தின்படி வார்த்தைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

1. உவகையுடன் பார்த்தல் ரசித்தல் - மரியாதையை உணர்வு

நீங்கள் யாரைப் உவகையுடன் / மதிப்பு உணர்ச்சியுடன் பார்க்கிறீர்கள் ஏன்?

ஆசிரியர் இதற்கு முதலில் பதிலளித்து பின்னர் ஒருவரைக் குறிப்பிடுவார். இது போல இவை 4-5 நபர்களிடம் அனுப்பப்படும். இதன் மூலம் குழந்தைகள் "ரசித்தல்" என்ற வார்த்தையின் அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியும். இதே கேள்வி பலகையிலும் எழுதப்பட வேண்டும்.

2. தாடி- ஆண்களுக்கு கன்னங்கள் மற்றும் தாடையில் வளரும் முடி

   கன்னத்தில் பஞ்சு ஒட்டப்பட்ட பொம்மையை சுவரில் தொங்கவிடவும் தாடி என்றால் என்ன என்பதை மாணவர்கள் தொட்டு உணர முடியும்.

3. எரிச்சல் கலக்கமாக எண்ணுதல் மற்றும் கோபம் கொள்ளுதல்.

   இந்த சொல்லை புரிய வைப்பதற்கான சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும். (எ.கா) நீங்கள் டிவி பார்த்துக் கொண்டிருக்கும் போது உங்கள் சகோதரர் அடிக்கடி சேனல் மாற்றிக் கொண்டே இருத்தல்.

4. ஆர்வம் - தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம்:

   ஆசிரியர் சில உதாரண வாக்கியங்களைக் கூறுவார் அதிலிருந்து வார்த்தையின் அர்த்தத்தை குழந்தைகள் யூகிக்க வேண்டும்.

5. குழப்பமில்லாமல் கவலையோ, ஆச்சரியமோ இல்லாமல் இருப்பது

இந்தச் சொல்லை பயன்படுத்தப்படும் கதையிலிருந்து வாக்கியத்தை படித்து மாணவர்கள் அதன் அர்த்தத்தை கணிப்பார்கள்.

C) தொடர்ந்த கலந்துரையாடல் :

இந்த கதையை சத்தமாக 20 நிமிடங்கள் வாசிக்க வேண்டும். ஆசிரியர் கதையின் போக்கிற்கேற்ப ஏற்ற இறக்கத்துடனும், உணர்ச்சி ததும்பவும் வாசிக்க வேண்டும். இதன் மூலம் குழந்தைகள் கதையை காட்சிப்படுத்த இயலும். சத்தமாக வாசிக்கும் பொழுது ஆசிரியர் இடைநிறுத்தி கேள்விகள் கேட்க வேண்டும. கேள்வி கேட்கும் பொழுது குழந்தைகள் அவர்களுக்கு சௌகர்யமான வழிகளில் எழுதுதல்/வரைதல் செயல்கள் அல்லது ஏதாவது மொழியில் பேசுவதன் மூலம் பதில் அளிக்க எதிர்ப்பார்க்கப்படுகிறது. பின்னர் மாணவர்கள் அளித்த பதிலை ஆசிரியர் மீண்டும் வெளிப்படுத்துவார். இதனால் இது முழு வகுப்பிற்கும் தெளிவுபடுத்தப்படும் மேலும் ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு அல்லது மூன்று பதில்கள் பெற வேண்டும்.

**இணைந்து வாசித்தல்:**

முதல் பத்தி: உத்தமனைப் பார்க்க ஏன் கூட்டம் கூடுகிறது?

இது போன்ற தெருகூத்துகளை நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா?

இரண்டாம் பத்தி : எண்ணெய் விற்பவர் ஏன் வில்லாளனுக்கு கைதட்டவில்லை.

மூன்றாம் பத்தி : எண்ணெய் விற்பவர் நமக்கு என்ன காட்டப் போகிறார்?

நான்காம் பத்தி: கூட்டம் எப்படி எதிர் வினைபுரிகிறது?

ஐந்தாம் பத்தி: இறுதியில் அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது என்ன?

**படித்த பிறகு உள்ள விவாதம்: 15 நிமிடங்கள்**

சிறிய குழுக்களாக பிரிந்து மாணவர்கள் பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் இந்த வினாக்கள் அச்சிடப்பட்ட தாள் வழங்கப்படும். இந்த செயல்பாட்டிற்கு ஒவ்வொரு குழுவிற்கும் 5 நிமிடங்கள் வழங்கப்பட வேண்டும். முன்பு கூறியது போல குழந்தைகளின் பதில் வரைதல்/ எழுத்து விளக்கம் அல்லது செயல் வடிவில் இருக்கலாம். அனைத்து குழந்தைகளும் இந்த குழு செயல்பாட்டில் கலந்து கொள்ள வேண்டும்.

1. இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன? கதை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? இல்லையா?
2. வில்வித்தை என்பது வெறும் பயிற்சியினால் அடைவது என்ற கூற்றினை ஒப்புக்கொள்கிறீர்களா?
3. நீங்கள் வெகு காலமாக பயிற்சி செய்த திறன் ஏதேனும் உள்ளதா? அதைப் பற்றி பகிர்ந்து கொள்ள முடியுமா?
4. ஒருவர் ஒரு திறனில் எவ்வாறு தேர்ச்சி பெற முடியும் என்று நினைக்கிறீர்கள்?

சிறிய குழு விவாதத்திற்குப் பிறகு முழு வகுப்பிற்கு பகிர வேண்டும். ஒவ்வொரு குழுவும் ஏதேனும் ஒரு கேள்விக்கு முன்வந்து பதிளலிக்கலாம். பதில்களின் அடிப்படையில் சில விவாதங்கள் நடக்கும்.

## செயல்படுத்தும் போது எற்படக்கூடிய சிரமங்கள்

1. பேச்சு , உரை, மற்றும் சைகைகள் அனைத்தையும் நிலைப்படுத்தி கொண்டு செல்வது மிகவும் சவாலானதாக இருக்கும். காலப்போக்கில் ஆசிரியர் அதில் நிபுணத்துவம் பெறலாம். திட்டத்தை செயல்படுத்த நேர மேலாண்மை மிகவும் முக்கியமானது. இது குழு வேலை மற்றும் முழு வகுப்பு செயல்பாடுகளையும் கொண்டுள்ளது. நேரத்தை கண்காணிப்பது மிகவும் முக்கியமானது.

2. வெவ்வேறு வெளிப்பாடு முறைகள் (வரைதல்/எழுதுதல்/செயல்கள்) ஊக்குவிக்கப்பட்டாலும் அனைத்து மாணவர்களையும் அதில் ஈடுபடுத்துவது அதிக நேரம் பிடிக்கும். நேரம் செலவழித்தாலும், அனைத்து குழந்தைகளும் வகுப்பின் ஒரு பகுதியாக உணர ஆசிரியர் இதைச் செய்ய வேண்டும். இந்த செயல்பாட்டை முடிப்பதற்கு திட்டமிடப்பட்டதை விட அதிக நேரம் ஆகலாம்.

3. வகுப்பறை கலாச்சாரம் மாணவர்களின் வேறுபாடுகளைக் களைந்து அவர்கள் பங்கேற்க உதவும். மாணவர்களிடையே இயல்பான தொடர்பு என்பது ஆசிரியர் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் போது மட்டுமே சாத்தியமாகும்.

f) மதிப்பீடு/கண்காணிப்பு:

முதலில் தனித்தனியாக மதிப்பீடு செய்ய வேண்டும். பார்வைக் குறைபாடுள்ள குழந்தைகளுடன் ஆசிரியர் தனிப்பட்ட முறையில் பணியாற்றலாம். இரண்டாவது மதிப்பீட்டிற்கு அனைத்து மாணவர்களும் அதைப் பற்றி சிந்திக்க/விவாதிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். குழந்தைகள் தாங்கள் கொடுக்க விரும்பும் முடிவைப் பற்றி ஆசிரியரிடம் வாய்மொழியாக சொல்லாம்.

I. வாக்கியங்களை கதையின் படி வரிசைப் படுத்தவும்.

a) உத்தமன் அவர் மீது கோபம் கொண்டார்
b) வில்வீரன் தன் திறமையை கூட்டத்தினரிடம் காட்டிக் கொண்டிருந்தான்.
c) அவர் எல்லோர் முன்னிலையிலும் தனது திறமையை வெளிப்படுத்தினார்.
d) பயிற்சி ஒரு மனிதனை முழுமையடையச் செய்கிறது. என்பதை வில்லாளர் கற்றுக்கொண்டார்.
e) ஒரு முதியவர் முன் வந்து, இது எல்லாம் பயிற்சியால் ஆனது என்றார்.
f) அவர் எண்ணெய் வியாபாரம் செய்பவர் அவர் எண்ணெய் ஊற்றுவதில் தேர்ச்சி பெற்றவர்.
g) அவன் திறமையைக் கண்டு அனைவரும் அதிர்ச்சியில் வாயடைத்துப் போனார்கள்.

**மாற்று முறை:**

கதையின் முக்கிய நிகழ்வுகளின் படங்களை வழங்குவதன் மூலமும் படங்களை கதையின் படி வரிசைப்படுத்த சொல்வதன் மூலமும் இந்த செயல்பாட்டைச் செய்யலாம்.

II. கதைக்கு வித்தியாசமான முடிவை கொடுக்கலாம் என்ற வாய்ப்பைக் கொடுத்திருந்தால் அது எப்படி இருக்கும்? மாணவர்கள் படங்கள் வரையலாம். அவர்களே சொந்தமாக கதையை உருவாக்க புதிய கதாபாத்திரம் அல்லது கதையில் ஏதேனும் மாற்றங்களைச் செய்யலாம்.

III. எடுத்துக்காட்டு :2

பொருள் : 5ம் வகுப்பு அறிவியல்

https://www.tntextbooks.in/p/5th-books.html

பாடம்: 2ம் பருவம்

அலகு-2 (பக்கம் எண்: 71-74)

பாடத்தின் தலைப்பு : தண்ணீர்

**உரைபற்றி:**

இந்த பாடம் ஐந்தாம் வகுப்பு தமிழ்நாடு மாநில வாரிய பாடத்திட்ட பாடபுத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. பாடம் தண்ணீர் பற்றியது. பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள உப தலைப்புகள் படங்களுடன் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு எளிதில் புரியம் வகையில் ஆசிரியைகள் விளக்கமாக பாடம் சொல்லிக் கொடுக்கும் வாய்ப்பு உள்ளது. வகுப்பில் வாசிக்கும் திறன் குறைவாக இருப்பதைக் கருத்தல் கொண்டு ஆசிரியர் சத்தமாக வாசிக்க முடிவு செய்து முழு வகுப்பிற்கு ஒரே நேரத்தில் விளக்குகிறார்.

குறிக்கோள் / நோக்கம்: நீர் மற்றும் நீர் சுழற்சியின் ஆதாரங்களை மாணவர்கள் புரிந்து கொள்தல்.

**அறிமுகம்:**

- நீரின் பயன்கள் என்ன?
- தினமும் காலை முதல் மாலை வரை தண்ணீரை பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்துகிறோம். உங்களில் யாரேனும் இரண்டு பேர் நாம் என்னென்ன செயல்பாடுகளுக்காக தண்ணீரைப் பயன்படுத்துகிறோம் என்று கூற முடியுமா?
- தண்ணீர் நம் வாழ்வில் ஒரு முக்கிய அங்கம். எங்கிருந்து நமக்கு தண்ணீர் கிடைக்கிறது?

- தினசரி தேவைகளுக்கு தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது என்பதை பற்றி மாணவர்களிடம் கேளுங்கள். அன்றாட பயன்பாட்டிற்கு நாம் பெறும் நீர் ஆதாரங்கள் எவை?

ஒவ்வொரு நீர் ஆதாரத்தையும் படங்களுடன் விளக்கவும். பிறகு மாணவர்களிடம் கேட்கவும்.

1. நீர் ஆதாரங்களைப் பார்த்திருக்கிறீர்களா?

ஆம் எனில் எங்கே பார்த்திருக்கிறீர்கள் என்றும் அந்த நீராதாரத்தின் அளவு, நீரின் சுவை மற்றும் நீரின் மற்ற குணங்கள் உட்பட அவர்களது அனுபவத்தை விவரிக்கச் சொல்லுங்கள்.

**நீர் சுழற்சி:**

நீர் சுழற்சி ஆவியாதல் போன்ற முக்கிய வார்த்தைகள் புரிந்து கொள்வது மிகவும் கடினம் இவற்றை /அட்டைகளில் எழுதி விளக்கலாம்.

அ) படங்களின் மூலம் நீர் சுழற்சியை விளக்கலாம்.

ஆ) பயிற்சி விளக்கம் மூலம் விளக்கலாம்.

இ) ஒளி, ஒலி உபகரணங்கள் மூலம் விளக்கலாம்.

**பின் தொடர வேண்டிய செயல்பாடுகள்:**

வகுப்பை நான்கு குழுக்களாகப் பிரித்து, நீர் சுழற்சியின் ஒவ்வொரு படியையும் குழந்தைகளைத் தாங்களே செய்ய வைப்பதன் மூலம் நடைமுறையில் கற்பிக்க முடியும். எல்லா குழந்தையும் செயலில் பங்கேற்க வேண்டும். குழந்தைகள் அதை வரையலாம் அல்லது நடிக்கலாம். மனிதர்கள் எளிதாக கற்கும் வகையில் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளைச் செய்ய ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டி உதவ வேண்டும்.

**குழு வேலை: (5 நிமிடம்)**

நீர் ஆதாரங்கள் பற்றிய வினாடி வினாவை படங்கள் மற்றும் வார்த்தைகளால் நடத்துதல். நீர் மற்றும் நீர் சுழற்சியின் ஆதாரங்களை வரைதல்/கலைகள் மூலம் வெளிப்படுத்துதல்.

**சொல்லகராதி**

படிக்கும் போது குழந்தைகள் பார்க்கும் வகையில் பாடத்தின் கருத்துக்கள் படங்களாக பலகையில் காட்சி படுத்தப்பட வேண்டும். இந்த பயிற்சியானது கேள்விகளைக் கேட்பதன் மூலமும் தண்ணீரைப் பற்றி அறிந்து கொள்வதற்கான சூழ்நிலைகளை வழங்குவதன் மூலமும் அமையும் கலந்துரையாடலாக இருக்க வேண்டும். சில சூழ்நிலைகளை பொருத்தமான சைகைகளாகவும் மற்றும் மெதுவாக பேசவும் செய்து விவரிக்க வேண்டும், கரும்பலகையில் எழுதுவதும் கை சைகைகளுக்குப் பொறுத்தமானதாக இருத்தல் வேண்டும். சத்தமாக வாசிக்கும் போது, படத்தைக் காட்டி வார்த்தைகள் அறிமுகப்படுத்தப்படும்.

**எடுத்துக்காட்டு:**

கடல் நீர்- கடலின் படத்தைக் காட்டி கடலைப் பற்றி விளக்குவது.

நீர் சுழற்சி- படம் மூலம் நீர் சுழற்சியின் படிகள் பற்றி விளக்குவது.

**செயல்படுத்தும் போது ஏற்படக்கூடிய சிரமங்கள்**

1. பேசுவது எழுதுவது மற்றும் சைகைகளை ஒரே நேரத்தில் இணைத்து செய்வது சவலானாதாக இருக்கலாம் காலப்போக்கில் ஆசிரியர் அதில் சோர்ந்து விடலாம். திட்டத்தை செயல்படுத்த நேர மேலான்மை மிகவும் முக்கியமானது. இது குழு மற்றும் முழு வகுப்பு செயல்பாடுகளை கொண்டுள்ளது. நேரத்தின் மீது கண்ணும் கருத்துமாக இருப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.
2. வெவ்வேரு வெளிப்பாடு முறைகள் (வரைதல்/எழுதுதல்/ செயல்கள்) ஊக்குவிக்கப்பட்டாலும் அவை அனைத்தையும் பெற்று முழு வகுப்பினருக்கும் அதை மீண்டும் வலியுறுத்தும் போது அதிக நேரம் எடுத்துக்கொள்ளும். ஆயினும் குழந்தைகளுக்கு வகுப்பின் ஒரு பகுதியாக அனைத்து மாணவர்களும் உணர ஆசிரியர் அதைச் செய்ய வேண்டும். செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டதை விட அதிக நேரம் ஆகலாம்.
3. வகுப்பறை கலாச்சாரம்: மாணவர்கள் தங்களது வேறுபாடுகளை பொருட்படுத்தாமல் பங்கேற்கும் போது மாணவர்களிடையே தற்செயலான தொடர்பை ஏற்படுத்த ஆசிரியர் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**மதிப்பீடு/ மதிப்பாய்வு**

தனிப்பட்ட மதிப்பீட்டு முறைகளான வார்த்தைகளுடன் படங்களைப் பொருத்துதல் வார்த்தைகளோடு வார்த்தை பொருத்துதல், விளக்கமாக எழுதுதல் போன்றவை குழந்தைகளின் கற்றலை மதிப்பிடுவதற்குத் தயார் செய்து பயன்படுத்தப்பட வேண்டும்.

**எடுத்துக்காட்டு :3**

5 ம் வகுப்பு

பாடம் : கணிதம்

https://www.tntextbooks.in/p/5th-books.html

பாடம் : முதல் பருவம் அலகு 1 ( பக்கம் எண் : 1 முதல் 7 வரை)

பாடத்தின் தலைப்பு : வடிவியல்

**அறிமுகம்:**

கீழ்க்கண்டவற்றை விவாதிக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

- 2D மற்றும் 3D வடிவங்கள்
- 2D மற்றும் 3D வடிவத்தின் சுழற்சி

இந்த பாடம் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் பின்வரும் முறைகளைப் பயன்படுத்தலாம்.

**தயார்படுதல்:**

பிளாஷ் கார்டுகளில் புதிய சொற்களை பட்டியலிடுதல்.

- 2D
- 3D

- கன சதுரம்
- முகங்கள்
- செங்குத்து
- கன செவ்வகம்
- உருளை
- அடிதளம்
- உயரம்
- சாய்வான உயரம்
- ½ சுழற்சி
- 1/4 சுழற்சி
- 1/3 சுழற்சி
- 1/6 சுழற்சி

பொருட்கள் தயாரித்தல் (அறிமுகப்படுத்த)

- 2D வடிவம் கொண்ட கையேடு ஸிலேடு, வெட்டிய வடிவங்கள் (பிளாஷ்கார்டில்)
- 3D பொருள்களுக்கு பல்வேறு வடிவங்கள் (சதுரம், கனச் செவ்வகம், உருளை மற்றும் கூம்பு) அட்டைப்பெட்டி, பிளாஸ்டிக் அல்லது மரக் கூம்பு, புனல், குடுவை அல்லது உருளை வடிவம் கொண்ட தண்ணீர் பாட்டில், டம்ளர் எடுத்துக் கொள்ளலாம்
- சதுரம் அல்லது செவ்வக வடிவில் வெட்டப்பட்ட அட்டைகள்.
- வட்டவடிவில் வெட்டப்பட்ட அட்டை மற்றும் 4 துண்டுகளாக வெட்டப்பட்ட வட்டம் மற்றும் 6 துண்டுகளாக வெட்டப்பட்ட மற்றொரு வட்டம் (இது 1/2, 1/4, 1/3, 1/6,) பற்றி ஆய்வு செய்ய)
- புதிய வார்த்தைகளான 1/2, 1/4, 1/3, 1/6 என்று குறிக்கப்பட்ட வட்டவடிவில் வெட்டப்பட்ட அட்டைகள்.

**செயல்பாடுகள்:**

அ) ஆசிரியர் மாணவர்களுடன் ஒரு வட்டத்தில் அமர்ந்து அவர்களுக்கு 2D மற்றும் 3D போன்ற புதிய வார்த்தைகளும் அவற்றின் வடிவம் கொண்ட பொருள்களின் எடுத்துக்காட்டுகளும் அடங்கிய அட்டைகள் மூலம் அறிமுகப்படுத்த வேண்டும். பிறகு குழந்தைகளை பொருட்களை தொட்டு உணரச் செய்ய வேண்டும்.

ஆ) மாணவர்களின் ஆர்வத்தைப் பொறுத்து 3D வடிவம் கொண்ட பெட்டியை வரையவோ அல்லது செய்து காட்டவோ செய்யுங்கள்.

இ) கனச்சதுரம், கனச் செவ்வகம் போன்றவற்றை அட்டைப் பெட்டிகள் கொண்டு அவர்களுக்கு அறிமுகப்படுத்தி முகங்கள், செங்குத்துகள் போன்றவற்றினை பற்றி விளக்க வேண்டும். கனசதுரம்/ கனச் செவ்வகம் வடிவம் கொண்ட பொருட்களை காண்பித்து இரண்டையும் வேறுபடுத்தி பார்க்கச் சொல்லுங்கள். கனச்சதுரம், கனச்செவ்வகம் வடிவம் கொண்ட பொருட்களின் படங்களை மாணவர்களிடம் காண்பித்து அவற்றினை வேறுபடுத்தச் சொல்லுங்கள்.

**உதாரணமாக :** டயரின் படங்கள், பிஸ்கட் பாக்கெட், சதுரம் மற்றும் செவ்வக பெட்டிகள். அவர்களிடம் இவ்வடிவங்களை கொண்ட வேறு பொருட்களை ஞாபகப்படுத்தி சொல்லச் சொல்லவும்.

ஈ) காகிதத்தால் செய்யப்பட்ட கூம்பு மற்றும் உருளை வடிவங்கள் கொண்டு உருளை மற்றும் கூம்பினை அறிமுகப்படுத்தவும்.

அடிப்படை வார்த்தைகளான பரப்பு, உயரம், சாய்வு மற்றும் கூம்பு வடிவிலான பொருட்களின் படங்களை மாணவர்களிடம் காண்பித்து அவற்றினை அடையாளம் காட்டச் சொல்லவும். பல்வேறு வடிவிலான கூம்பு மற்றும் உருளை வடிவம் கொண்ட பொருட்களை அளித்து அவற்றின் உயரம் மற்றும் பரப்பினை அளக்க சொல்லவும்.

உ) ஒவ்வொருவரையும் சேகரிப்புப் பெட்டியிலிருந்து ஒரு பொருளை எடுத்து, அது கனசதுரம் கனச் செவ்வகம் கூம்பு அல்லது உருளை, இவற்றில் எது என்று அந்த பொருளின் வடிவத்தினை கூறச் சொல்லவும்.

ஊ) மாணவர்களிடம் வெட்டப்பட்ட வட்டத்தில் 1/2, 1/4, 1/3, 1/6 ஆகியவற்றை மதிப்பாய்வு செய்யவும். 1/2, ¼ சுழற்சியை அறிமுகப்படுத்துங்கள். ஒவ்வொரு மாணவருக்கும் 2 பொட்களைக் கொடுத்து ½ மற்றும் ¼ என அவற்றினைச் சுழற்றி மற்றவர்களிடம் காட்டச் சொல்லுங்கள்.

எ) ½ மற்றும் ¼ சுழற்றப்பட்ட பொருட்களின் படங்களைப் பொருத்தவும். மேலும் ஆங்கில எழுத்துகளின் ½ சுழற்சி மற்றும் ¼ சுழற்சியினை அடையாளம் காணச் சொல்லவும்.

**மதிப்பீடு / மதிப்பாய்வு.**

தனிப்பட்ட மதிப்பீட்டு முறைகளான வார்த்தைகளுடன் படங்களைப் பொருத்துதல், வார்த்தைகளோடு வார்த்தைகள் பொருத்துதல், விளக்கமாக எழுதுதல் போன்றவற்றை குழந்தைகளின் கற்றலை மதிப்பிடுவதற்கு தயாரித்து பயன்படுத்த வேண்டும்.

## 7-2-2 ஆசிரியரின் முழுமையான பங்கேற்புக்கான சட்டங்கள் மற்றும் கொள்கைகள்.புதிய கல்விக் கொள்கை 2020 (NEP 2020)

- பொருத்தமான கற்பித்தல் நடவடிக்கைகள்
- பாடத்திட்டம் மற்றும் தேர்வு முறைகளில் பொருத்தமான மாற்றங்கள்.
- எழுத்தாளர் - தேர்வில் கேள்விகளுக்கு தேர்வாளர் பதில்களை கூற எழுதுபவர்.
- இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியிலிருந்து விலக்கு
- மாற்றுவழி தொடர்பு முறைகள்

**ஆசிரியர்களுக்கான பயிற்சி:**

- ஆசிரியர்கள் மாற்றுத்திறனாளி ஆசிரியர்களை பணியமர்த்துதல், சைகை மொழி மற்றும் பிரெய்லியில் தகுதி பெற்று ஆசிரியர்கள் மற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் பணியமர்த்துதல்.
- சிறப்புக் கல்வியாளர்கள், கல்வித் தேவைகள், பெற்றோர்/ பாதுகாவலர்களுக்கு உதவுதல் மறுவாழ்வுத் தேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வள மையங்களை நிறுவுதல்.
- தொடர்பு கொள்வதற்கு துணையாக அல்லது ஈடு செய்யக் கூடிய வழிமுறைகள்
- புத்தகங்கள் மற்றும் கற்றல் பொருள்கள் அணுகல் தன்மையுடன் அமைத்தல்

## 7-2-3 கல்வி உரிமைச் சட்டம் (RTE)

இலவச மற்றும் கட்டாய கல்விக்கான குழந்தைகளின் உரிமை (RTE) சட்டம் 2009 இலவச மற்றும் தொடக்க கல்வி,பள்ளி செல்லுதல் மற்றும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் அணுகக்கூடிய தடைகளற்ற சூழலிற்கான உரிமைகளை அளிக்கிறது.

**குறிகோள்:**

- பள்ளிகளில் மாற்றுத்திறனாளி குழந்தைகளை அடையாளம் காணுதல் மற்றும் அவர்களது கல்வித் தேவைகளை கண்டறிதல்.
- சிறப்பு தேவைகள் உடைய குழந்தைகளை அவர்களது தேவைக்கேற்ப அவர்களுக்கான தகுந்த கற்றல் பொருட்கள், மருத்தவ வசதிகள் தொழிற் பயிற்சிக்கான ஆதரவு, வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் அவர்களுடைய தேவைகளுக்கேற்ப மற்ற அதற்கான துறைகளுடன் இணைந்து சிறப்பு தேவைகளுடைய குழந்தைகளுக்கான பயிற்சிகள் வழங்குதல்.
- பொதுப் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு பொது வகுப்பறையில் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுக்குக் கற்பிக்கவும் அவர்களை வகுப்பறையில் ஈடுபடுத்தவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- தற்போதுள்ள சிறப்புக் கல்வியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்படும் சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகள் (CWSN) தங்களுக்கான சேவைகளை சிறப்புக் கல்வியாளர்கள், வள மையங்களைள், தொழிற்கல்வி, சிகிச்சைக்கான சேவைகள் மற்றும் ஆலோசனைகள் பெற வழிவகை செய்தல்.

**கல்வி உரிமை சட்டத்தால் வழிமுறைபடுத்தப்பட்ட முழுமையான கல்வித்திட்டம் (சமக்ர சிக்ஷா)**


# 7.3 - ஒருங்கிணைந்த கல்வியை மேம்படுத்துதல் பள்ளி மேலாண்மைக்கான விழிப்புணர்வு.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்ற மற்ற அனைத்து பங்குதாரர்களின் ஈடுபாடு இருந்தாலும் பள்ளி நிர்வாகத்தின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் ஒருங்கிணைந்த கல்வி என்ற இலக்கை நோக்கி முன்னேற இயலாது.

மாற்றுத் திறனாளி குழந்தைகளை தங்கள் பள்ளியில் சேர்க்காததற்கும் பள்ளியில் தினசரி வருவதை ஊக்குவிக்காதற்கும் பள்ளி நிர்வாகம் உறுதியான காரணங்களை வழற்குகிறது. இந்த போக்கு எங்கும் பரவியிருக்கும் காரத்தினாலேயே, எங்கள் விழிப்பணர்வு பிரச்சாரத்தின் செயல்பாட்டில் பள்ளி நிர்வாகத்தையும் சேர்க்க முடிவு செய்தோம்.
மாற்றுத்திறனாளி குழந்தைகளை அனுமதிக்காததற்கு நிர்வாகத்தால் முன் வைக்கப்படும் பொதுவான காரணங்கள் என்னவென்றால் அவர்களால் அந்த பள்ளிச் சூழலில் வாழ முடியாது. பிற குழந்தைகளால் கொடுமைப்படுத்துதல் அல்லது கிண்டல் செய்யப்படுதல் மற்றும் அவர்களுக்கு ஆதரவு/உதவி செய்வதற்கான மனித மற்றும் உள்கட்டமைப்பு வளங்களின் பற்றாக்குறையே காரணம் ஆகும்.
இந்த மனப்பான்மையை உடைத்து பள்ளி நிர்வாகம் அவர்களின் முதன்மைக் கடமைகளில் ஒன்றான ஒருங்கிணைந்த கல்வி சூழலையும் கலாச்சாரத்தையும் அதற்கான வளங்களை

பெறுவதற்கு ஊக்குவிப்பதும் அவர்களின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். இந்தியாவின் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகையை கணக்கில் கொண்டு வரையப்பட்ட "இந்தியாவில் ஊனமுற்ற குழந்தைகளின் கல்விநிலை அறிக்கை 2019"-ன் படி 78,64,636 மாற்றுத்திறனாளி குழந்தைகள் உள்ளனர். இது மொத்த குழந்தை மக்கள் தொகையில் 1.7 சதவிகிதம் ஆகும்.
ஊனமுற்ற குழந்தைகளின் சேர்க்கை

2016 -2017 (படம்)




**ஒருங்கிணைந்த வழங்க பள்ளி நிர்வாகத்திற்கான தேசிய கல்விக் கொள்கையின் NEP 2020**

**வழிகாட்டுதல்கள்.**

- சமமான கல்வி வாய்ப்புகள்
- விளையாட்டு மற்றும் பொழுது போக்கிற்கான சம வாய்ப்புகள்
- அணுகக்கூடிய உள் கட்டமைப்பு
- பொருத்தமான தகவமைப்பு
- தனிப்பட்ட உதவி
- துணைச் சேவைகள்
- அணுகக்கூடிய் தொடர்பு வழிறைகள்
- பொருத்தமான கற்றல் முறைகள்
- பாடத்திட்டம் மற்றும் தேர்வு முறைகளில் பொருத்தமான மாற்றங்கள்
- தேர்வாளர் தேர்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலைக் கூற எழுதுபவர் - எழுதுவதற்கு உதவியாளர்
- இரண்டாம் மூன்றாம் மொழியிலிருந்து விலக்கு.
- போக்குவரத்து வசதிகள் செய்தல், பள்ளி நிகழ்ச்சிகளில் பங்கேற்றலை கண்காணித்தல்.
- ஆசிரியர்கள், மாற்றுத் திறனாளி ஆசிரியர்களுக்கு சைகை மொழி மற்றும் பிரெய்லியில் தகுதி பெற்ற ஆசிரியர்கள் கொண்டு பயிற்சி அளித்தல் மற்றும் அவர்களை பணியமர்த்துதல்.
- கல்வித் தேவைகள் பெற்றோர்/பாதுகாவலர்களுக்கு உதவுதல், மறுவாழ்வு தேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வள மையங்களை நிறுவுதல்.
- தொடர்பு கொள்வதற்கு துணையான அல்லது ஈடு செய்யக் கூடிய வழிமுறைகள் மற்றும் அதற்கான புத்தகங்கள்.
- அணுகக்கூடிய வழிகளில் கற்றல் பொருட்கள்

- உதவி உபகரணங்கள்
- கற்றலை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியை ஊக்குவிக்க உதவித் தொகை வழங்குதல்.
- 40% அதிகமான குறைபாடுகள் உள்ள குழந்தைகள் பொதுப்பள்ளி/சிறப்புப்பள்ளி அல்லது வீட்டுக் கல்வியில் கற்பதை பெற்றோர்கள் தேர்வு செய்தல்.
- வீட்டில் கல்வி கற்கும் குழந்தைகள் பொது பள்ளியில் கற்கும் மற்ற குழந்தைகளுக்கு சமமாக கருத்தப்படுவார்கள்.

**பள்ளிக்கலப்பு வளாகம் - கருத்து**

- பலவகையான சிறப்பு ஆசிரியர் இருப்பு.
- பொருத்தமான தகவமைப்பு (Reasonable accommodation)
- பொருத்தமான கற்றல் வாசித்தல் பொருட்கள் (பெரிய அச்சில் அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்கள், பிரெய்லி புத்தகங்கள்) மற்றும் சைகை மொழி புத்தகங்கள்.
- சைகை மொழி வசதிகள்
- வள மையம் வசதி.
- முழு பங்கேற்பை உறுதி செய்ய தேவையான அமைப்புகள் மற்றும் மாற்றங்கள்
- உதவி உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகள்.

தேசிய கல்விக்கொள்கை 2020 RPWD சட்டம் 2016-ன் கொள்கையுடன் முழுமையாக ஒத்துப்போகிறது மற்றும் பள்ளிக் கல்விக்கான அதன் அனைத்து வசதிகளையும் இந்தக் கொள்கை அங்கிகரிக்கிறது.

**NEP 2020-ன் நோக்கம்.**

பள்ளிக் கல்வியில் மனித மாண்புகளை கற்பிப்பதற்கான பாடத்திட்டங்களை சேர்த்தல், - பன்முகத்தன்மைக்கான மரியாதையை உணர்ந்து அவற்றை மேம்படுத்த எல்லோரிடத்தும் மரியாதை கொண்டிருத்தல் பச்சாதாபம், சகிப்புத்தன்மை, மனித உரிமைகள், பாலின சமத்துவம், அகிம்சை, உலக குடிமகன் என்ற உணர்வு குடியுரிமை, ஒருங்கிணைந்த சமுதாயம் மற்றும் சமத்துவம். மேலும் பன்முகத்தன்மையை புரிந்து மதிக்க ஏதுவாக பல்வேறு கலாச்சாரங்கள், மதங்கள், மொழிகள், பாலின அடையாளங்கள் பற்றிய விரிவான அறிவை வளர்த்தல் ஆகியவை அடங்கும்.

**கல்வி உரிமைச்சட்டம் - 2009**

குழந்தைகளுக்கு இலவச கல்வி மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமை (RTE) சட்டம் 2009, குறைபாடுள்ள மற்றும் அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய தொடக்க கல்வி, பள்ளி செல்வதற்கான தடைகளற்ற சூழல் போன்ற உரிமையை உறுதிப்படுத்துகிறது.

**நோக்கங்கள்:**

- பள்ளி நிலையில் உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளை கண்டறிந்து அவர்கள் கல்வி தேவையை மதிப்பிடுதல்
- சிறப்புத் தேவையுடைய குழந்தைகளின் தேவைக்கேற்ப அவர்களுக்கு உதவிகள் மற்றும் உதவி உபகரணங்கள் வழங்க ஏற்பாடு செய்தல். பள்ளி கட்டிடங்களில் உள்ள தடைகளை நீக்குவதன் மூலம் மாற்றுத் திறனாளி குழந்தைகள் அந்த பள்ளியிலுள்ள வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள். விளையாட்டு/ பொழுது போக்கு இடங்கள் மற்றும் கழிப்பறைகள் அடைவதற்கு வழி வகுத்தல்.

- சிறப்புத் தேவையுடைய குழந்தைகளின் தேவைக்கேற்ப தகுந்த கற்றல் - கற்பித்தல் பொருட்கள், மருத்துவ வசதிகள், தொழில் பயிற்சி ஆதரவு, வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் மற்றும் சிகிச்சைகளை பல துறைகளை ஒருங்கிணைத்து செய்தல்.
- வகுப்பறையில் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுக்கு கற்பிக்கவும் அவர்களை வகுப்பறையில் ஈடுபடுத்தவும் பொது பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- தற்போதுள்ள சிறப்பு ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளுதல்.
- சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி ஆசிரியருடன் கூடிய வள அறைகள், தொழிற் கல்வி, பயிற்சி சேவைகள் மற்றும் ஆலோசனைகள் போன்றவற்றின் மூலம் அவர்களுக்கான ஆதரவு சேவைகளை கிடைக்க வழிவகுத்தல்.
- நம்முடைய மாநிலம் (தமிழ்நாடு) தொடக்கப்பள்ளி அளவில் நூறு சதவீதம் சேர்க்கை விகிதத்தை எட்டியுள்ளது. இது ஒருங்கிணைந்த மற்றும் அணுகக்கூடிய கல்வியை வழங்கப்படுவதற்கான முதல் படியாக நாங்கள் அங்கீகரிக்கின்றோம். கல்வி என்பது மாணவர்களின் சேர்க்கையை விட பல முக்கிய வஷயங்களை உள்ளடக்கியது என்பதை இங்கு நாங்கள் வலியுறுத்துகிறோம். ஒருங்கிணைந்த கல்வியை செயல்படுத்த கல்வி அமைப்புக்கு பள்ளியில் சேர்க்கையையும் தாண்டி, அதிக பொறுப்புகள் உள்ளது என்பதை வலியுறுத்துகிறோம். குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு வழக்கமான பள்ளி வாய்ப்புகள் தொலைதூரக் கனவாகவே இருக்கின்றன. நமது பள்ளி கல்வி அமைப்பு இந்த இடைவெளியை உணர்ந்து மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கும் சாதாரண குழந்தைக்கு வழங்கும் அதே வாய்ப்புகளை வழங்க வேண்டிய நேரம் இது். இதை நடைமுறைப்படுத்த செய்யப்படும் அனைத்து செயல்பாடுகளையும் மாற்றுத்திறனாளிகளுக்கு கொடுக்கப்படும் சலுகைகளாக எண்ணாமல் அவர்களின் கல்வி உரிமையை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கையாக மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். உரிமை அடிப்படையிலான இவ்வகை பிரச்சாரங்கள் மாற்றுத் திறனாளிகள் மீது அனுதாபத்திற்கு வழிவகுக்காமல் பச்சாதாபத்தை ஏற்படுத்தும். இது போன்ற பள்ளி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் பச்சாதாபம், ஆதரவு மற்றும் பன்முக தன்மையுடனும் கூடிய ஒரு பள்ளி கலாச்சாரத்தை உருவாக்குவதே எங்களின் எண்ணம் ஆகும். இது அனைத்து மாணவர்களையும் சிறந்த குடிமக்களாகவும் நல்ல மனிதர்களாகவும் கற்கவும் வளரவும் செய்கிறது.

**முழுமையான கல்வித்திட்டம்: (Samagra Shiksha Abhiyan)**

கல்வி உரிமைச்சட்டம் 2009-ன் படி மாற்றுத்திறனாளி குழந்தைகள் உள்ளிட்ட அனைத்து குழந்தைகளை ஒருங்கிணைக்க உறுதி செய்ய ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையாலான அனைத்து பள்ளி கல்விக்குமான திட்டம் ஆகும்.

☆☆☆☆☆

# 8) பணியாளர்களுக்கான கூடுதல் தகவல்கள்

**சட்டங்கள் மற்றும் கொள்கைகள்:**

நமது தேசம் மாற்றுத்திறனாளிகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்களையும் கொள்கைகளையும் உருவாக்கியுள்ளன. இந்த கொள்கைகளை அடிமட்ட அளவில் செயல்படுத்துவதில் இடைவெளிகள் உள்ளன. மேலும் மாற்றுத் திறனாளிகளுக்காக நியமிக்கப்படும் பெரும்பாலான திட்டங்கள் பயனாளிளை சென்றடைவதில்லை. இந்த சட்ட திட்டங்களைப்பற்றிய பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்தி, நடைமுறைப்படுத்துவதில் உள்ள இடைவெளியை குறைப்பதே எங்கள் நோக்கமாகும். மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய மூன்று முக்கியமான கொள்கைகளே இங்கே பார்க்கலாம்.

1. மாற்றுத்திறனாளி உரிமைச்சட்டம் - 2016
2. கல்வி பெறும் உரிமைச் சட்டம் -2009
3. புதிய கல்விக் கொள்கை 2020

இவை அனைத்தும் மாற்றுத்திறனாளிகளை நமது சமூகத்தில் உள்ளடக்குவதற்க்காக வடிவமைக்கப்பட்டது.

## 8.1) மாற்றுத்திறனாளி உரிமைச்சட்டம் - 2016

மாற்றுத்திறனாளிகள் சட்டம் 1995ல் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டு, புதிய சட்டமாக மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம்-2016 இயற்றப்பட்டுள்ளது.

**இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 21 வகையான குறைபாடுகள்**

1. இயக்ககுறைபாடுகள் (Locomotor Disability)
2. குணமடைந்ததொழுநோய் (Leprosy Cured)
3. மூளைமுடக்குவாதம் (Cerebral Palsy)
4. குள்ளத்தன்மை (Dwarfism)
5. தசைசிதைவுநோய் (Muscular Dystrophy)
6. அமிலவீச்சால் பாதிக்கப்பட்டோர் (Acid attack Victim)
7. கண்பார்வையற்றவர் (Blindness)
8. பார்வை குறைபாடுகள் (Low Vision)
9. காதுகேளாமை (Deaf and Hard of hearing)
10. பேச்சு மற்றும் மொழி நடைக் குறைபாடு (Speech and Language Disroder)
11. அறிவுசார் குறைபாடுகள் (Intellectual disability)
12. புறஉலக சிந்தனையற்றநிலை (Autism Spectrum disorder)
13. நாள்பட்ட நரம்பியல் நோய் (Other neurological disorder)
14. கற்றலில் குறைபாடு (Specific Learning Disability)
15. மனநோய் (Mental Illness)
16. தண்டுவட மரப்பு நோய் (Multiple Sclerosis)
17. உடல் தளர்ச்சிநோய் (Parkinsons disease)
18. இரத்தம் உறையாமை(Haemophilia)
19. சிவப்பு அணுக்கள் இல்லாதநோய் (Thalassemia)
20. அரிவாள் சிவப்பணு இரத்த சோகை (Sickle Cell anemia)
21. பல்வகைஊனம் (Multiple disability)

மாற்றுத்திறனாளி உரிமைச்சட்டம் 2016, ஐக்கியநாடுகள் சபையின் ஊனமுற்றோர் உரிமைச் சாசனத்தின் (United Nations Convention on Rights of Persons with Disability) முக்கிய 8 கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டுள்ளது.

1. தனிநபர் சுதந்திரம், உள்ளார்ந்த மரியாதை மற்றும் தன்னுடைய முடிவுகளை எடுப்பதை மதித்தல்.
2. ஊனத்தின் காரணமாக வேறுபடுத்தாமை.
3. முழுமையாக பங்காற்றுதல்.
4. ஊனம் என்பது மனிதர்களில் இருக்கும் வேறுபாடு. (பன்முகத்தன்மை)
5. சுமமான வாய்ப்பு.
6. தடையற்ற சூழல்.
7. ஆண், பெண் சமஉரிமை.
8. ஊனமுற்றகுழந்தைகளின் வளர்ந்துவரும் திறன்களைமதித்தல்.

அத்தியாயம்: 1

குறுந்தலைப்புமற்றும் தொடக்கம் (Short title and commencement)

1. தடை**(barrier)**
2. தொடர்பு(**Communication**)
3. உயர் ஆதரவு(**high support**)
4. ஒருங்கிணைந்தகல்வி(**Inclusive Education**)
5. வரையறுக்கப்பட்டஊனம் உடையநபர் (**person with benchmark disability**)
6. ஊனமுள்ளநபர் (**person with disability**)
7. உயர் ஆதரவுதேவைகளைகொண்டஊனமுற்றநபர் (**person with high support needs**)
8. செயல்புரிவதற்காகநியாயமானதகவமைப்பு(**reasonable accommodation**)
9. சிறப்புவேலைவாய்ப்பகம் (**Special employment exchange**)
10. அனைவருக்குமானவடிவமைப்பு **(universal design)**

<u>வரையறை (Definitions)</u>

•"தடை(barrier)"எனப்படுவது தொடர்பு, பண்பாடு, பொருளாதாரம், சுற்றுப்புறச்சூழல், நிறுவனம், அரசியல், சமூக, மனப்பான்மை அல்லது கட்டமைப்பு காரணிகளால் சமூகத்தில் ஊனமுற்றநபர்கள் முழுமையாகவும் மற்றும் செம்மையாகவும் பங்கேற்பை தடுப்பதற்கான காரணிகள்;

•"தொடர்பு (Communication)" என்பது தொடர்புக்கான வழிகள் மற்றும்படிவங்கள், மொழிகள், உரைவெளிப்படுத்துதல், பிரையில், தொட்டறியும் தொடர்புமுறை, அறிகுறிகள், பெரியஅளவில்அச்சு, அணுகும்படியான பன்முகஊடகம், எழுத்து, ஒலி, காணொளி, பார்வை சம்பந்தமான காட்சி, சைகைமொழி, எளியமொழி, மனிதவாசகர், மேம்படுத்தப்பட்ட மாற்றுவழி தொடர்புமுறை. எளிதில் அணுகத்தக்க தகவல் மற்றும் தொடர்பு தொழில் நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

•"உயர்ஆதரவு (highsupport)" என்பது கல்வி, வேலைவாய்ப்பு, குடும்பம் மற்றும் சமூகவாழ்க்கை மற்றும் சிகிச்சை மற்றும் பிணி நீக்கலுக்கான சிகிச்சை போன்ற தளங்களில்

வசதிகளை அணுகவும், பங்கேற்கவும், சுயமான முடிவு எடுக்கவும், குறைந்தபட்ச ஊனத்திற்கு மேற்பட்ட நபருக்கு தேவைப்படும் அதிகபட்ச உதவியைக் குறிக்கும்.

•"ஒருங்கிணைந்தகல்வி (InclusiveEducation)" என்பது மாணவர்கள் ஊனத்தால் பாதிக்கப்பட்டலோ அல்லது ஊனத்தால் பாதிக்கப்படாமல் இருந்தாலோ அனைவரும் ஒன்றுசேர்ந்து கற்கும் வகையிலான கல்வி அமைப்பு ஆகும். மற்றும் அனைத்து விதமான ஊனத்தால் பாதிக்கப்பட்டமாணவர்களுக்கு கற்றல் தேவைகளை சந்திக்கத்தக்க வகையில் பொருத்தமான கற்பித்தல் மற்றும் கற்றல் வழி முறைகளைக் கொண்ட கல்வி அமைப்பு ஆகும்.

•"வரையறுக்கப்பட்ட ஊனம் உடைய நபர் (person with benchmark disability)" எனப்படுவர் குறிப்பிட்ட ஊனத்தினை அளவீடு செய்யும் வகையில் எங்கே விவரிக்கப்படவில்லையோ அந்த குறிப்பிட்ட ஊனத்தினை நாற்பது விழுக்காட்டிற்குக் குறையாத ஊனமுற்ற நபரைக் குறிக்கும். எங்கே குறிப்பிட்ட ஊனத்தின் அளவீடு செய்யும் வகையில் விவரிக்கப்பட்டுள்ளதோ அந்த ஊனத்திற்கான சான்றளிக்கும் அதிகார அமைப்பினால் சான்றளிக்கப்பட்டுள்ள நபரும் இதில் அடங்குவர்.

➢"ஊனமுள்ளநபர் (personwithdisability)" என்று அழைக்கப்படுபவர் நீண்டகாலமாக உடல், மனம், அறிவு அல்லது புலன் உணர்வில் இருக்கும் குறைபாடுகளால் சமுதாயத்திலுள்ள தடைகளுடன் இணைகையில் சமூகத்தில் பிறருக்கு சமமாக முழுமையாக மற்றும் செம்மையாக பங்கேற்பதற்கு முடியாமல் உள்ளவர்.

➢"உயர்ஆதரவு தேவைகளை கொண்ட ஊனமுற்ற நபர்(person with high support needs)"என்பவர் உயர் ஆதரவு தேவை என சான்றளிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊனத்திற்குமேற்பட்ட நபர்.

➢"செயல் புரிவதற்காக நியாயமான தகவமைப்பு (reasonable accommodation)"என்பது ஊனமுற்ற நபர்கள் மற்றவர்களுக்கு சமமாக உரிமைகளை அனுபவிக்கவும் அல்லது கையாளும் வகையில் ஒரு குறிப்பிட்ட நபரின்மீது சமமில்லாத அல்லது அளவிற்கதிகமான சுமைஏற்படாதவாறிருக்க, தேவையான உரிய திருத்தங்கள் மற்றும் தகவமைப்புகளைக் குறிக்கும்.

➢சிறப்பு வேலைவாய்ப்பகம் (Special employment exchange)"என்பது பதிவேடுகள் பராமரித்தல் அல்லது பிறபணிகளுக்காக தகவல்கள் சேகரிப்பது மற்றும் வழங்குவதற்காக கீழ்கண்டவை தொடர்பாக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டு மற்றும் பராமரிக்கப்படும் எந்தவொரு அலுவலகம் அல்லது இடத்தினைக் குறிக்கும்.

•"அனைவருக்குமான வடிவமைப்பு (universaldesign)" என்பது கூடுமானவரை அனைத்து மக்களாலும் சரிபடுத்தவோ அல்லது சிறப்பாகவோ வடிவமைக்க வேண்டிய தேவையின்றி அதிக அளவு உபயோகப்படுத்தக்கூடிய தயாரிப்புகள், சுற்றுப்புறச்சூழல்கள், செயல்திட்டங்கள் மற்றும் சேவைகளின் வடிவமைப்பைக் குறிக்கும் மற்றும் ஒரு குறிப்பிட்ட வகைஊனமுற்றோருக்கான மேம்பட்ட தொழில்நுட்பங்கள் உட்பட துணைசாதனங்களுக்கும் பொருந்தும்.

## அத்தியாயம்: 2

## உரிமைகள் மற்றும் சலுகைகள் (Rights and Entitlements)

<u>**A.**சமத்துவம் மற்றும் பாகுபாடற்ற தன்மை (**Equality and Non discrimination)**</u>

➢மாற்றுத்திறனாளிகள் மற்றவர்களுக்குச் சமமான உரிமைகள், கண்ணியமான வாழ்க்கை மற்றும் உள்ளார்ந்த மரியாதையை அனுபவித்தல்.

➢பொருத்தமான சூழ்நிலைகள் மூலம் மாற்றுத்திறனாளிகளின் திறன்களை முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை.

➢ஊனத்தின் காரணமாக வேறுபடுத்தப்படாமை மற்றும் தனிமனித சுதந்திரம் தராமை.

➢நியாயமானதகவமைப்பு.

➢மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்களுடைய சுதந்திரத்தை அனுபவிப்பதை உறுதி செய்தல்.

B.மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் குழந்தைகள்:(**Women and Children with Disabilities)**

➢மாற்றுத்திறனாளி பெண்களும், குழந்தைகளும் மற்றவர்களுக்குச் சமமாக உரிமைகளை பெறுவதை உறுதிசெய்தல்.

➢மாற்றுத்திறனாளி குழந்தைகள் தங்களை சார்ந்த விஷயங்களில் தங்களுடைய எண்ணங்களைத் தெரிவிக்க அவர்களது ஊனம் மற்றும் வயதை கருத்தில் கொண்டு தேவையான ஆதரவை உறுதிசெய்தல்.

C.சமுதாயத்துடன் இணைந்த வாழ்க்கை:-(**CommunityLife)**

➢மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சேர்ந்து வாழும் உரிமை

➢வீடு மற்றும் குடியிருப்புகளில் (Undervarsal housing schemes) மாற்றுத்திறனாளிகள் தங்களது வயது, பாலினம் மற்றும் ஊனத்திற்கேற்ப வாழ்வதற்கு தகுந்த, மனிதர் உதவி உள்ளடக்கிய எல்லாவிதமான வசதிகளும் இருப்பதற்கு அரசு முயற்சி செய்தல்.

**D**.கொடுமை மற்றும் மனிதாபிமானமற்ற செயல்களில் இருந்து பாதுகாப்பு: (**Protectionfromcrueltyandinhumantreatment)**

➢சித்திரவதை, கொடுமை, இழிவாக, மனிததன்மையற்று நடத்தப்படுவதில் இருந்து பாதுகாத்தல் மற்றும் இதைப்பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

E. ஆராய்ச்சி:-(**Research)**

➢மாற்றுத்திறனாளிகளை அவர்களுடைய சம்மதம் இல்லாமல் ஆராய்ச்சிக்கு உட்படுத்தக்கூடாது.

➢ஊனத்திற்கு ஏற்ப அவருடைய சம்மதத்தை தகுந்த தகவமைப்பில்(accessible format)பெறுவதுடன் மாற்றுத்திறன் பற்றிய ஆராய்ச்சி குழுவின் ஒப்புதல் பெறுதல்.(மாற்றுத்திறனாளிகள் பற்றிய ஆராய்ச்சி குழு அமைக்கப்பட வேண்டும். அதில் பாதி உறுப்பினர்கள் மாற்றுத்திறனாளிகளாகவோஅல்லது மாற்றுத்திறனாளிகளுக்காக வேலை செய்யும் பதிவு பெற்ற நிறுவனம்)

**E**.தவறாக பயன்படுத்துதல், வன்முறை மற்றும் சுரண்டுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு **(Protectionfromabuse,violenceandexploitation**)

➢மாற்றுத்திறனாளிகளை தவறாக பயன்படுத்துதல், வன்முறை மற்றும் சுரண்டலில் இருந்து பாதுகாத்தல்.

➢தனிநபரோ, நிறுவனமோ, குறிப்பிட்ட மாற்றுத்திறனாளி துன்புறுத்தப்படவோ/அவமானப்படுத்தவோ படுகிறார் என்றால், அதைப்பற்றிய புகாரை காவல்நிலையத்திலோ அல்லது அப்பகுதிக்கான நிர்வாக நடுவரிடம் கொடுக்கலாம்.

➢பாதிக்கப்பட்ட நபரை காப்பாற்றி அவருக்கு தகுந்த மறுவாழ்வு அளித்தல் மற்றும் அந்த நபருக்குத் தேவையான சட்ட உதவி இலவசமாக தருதல்.

## F.பாதுகாப்புஅளித்தல் மற்றும் பாதுகாப்பானசூழல்:-(**Protection and safety)**

➢பேரிடர், நெருக்கடிநிலை, ஆபத்தான சூழ்நிலை மற்றும் போரின் போது மற்றவர்களுக்குச் சமமாக பாதுகாப்பு அளித்தல்.

➢மத்திய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை வாரியம், பேரிடர் மேலாண்மைசட்டம்2005-ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல் மாற்றுத்திறனாளிகளையும் உள்ளடக்கிய பாதுகாப்பு திட்டத்தை வகுத்தல்.

➢மாவட்ட பேரிடர் மேலாண்மை அமைப்பு மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பற்றிய தகவலை சேகரித்து வைப்பதுடன், பேரிடர் ஏற்படும் முன் தகுந்த முன்னேற்பாடு நடவடிக்கைகளை அவர்களுக்கு தெரிவித்தல்.

➢மறுசீரமைப்பு பணிகளின்போது, மாநிலமாற்றுத திறனாளிகளுக்கான ஆணையரை தொடர்புகொண்டு, எளிதாக அணுகல் தன்மையுள்ள அமைப்புகளை (accessible infrastructure) ஏற்படுத்துதல்.

### G.வீடு மற்றும் குடும்பம்:-(**Home and family)**

➢ஊனத்தின் காரணமாக எந்த குழந்தையையும் பெற்றோரிடமிருந்து பிரிக்கக்கூடாது.

➢பெற்றோர்களால் பாதுகாக்க இயலாத பட்சத்தில் குழந்தையின் நலன் கருதி தகுந்த நீதிமன்றங்கள் மூலம் உறவினர்களிடமோ வேறு ஏதாவது சமூக அமைப்புகளிலோ, இல்லங்களிலோ சேர்க்கலாம்.

### H.இனப் பெருக்கஉரிமைகள்:-(**Reproductive Rights)**

➢இனப்பெருக்கம் மற்றும் குடும்பக்கட்டுப்பாடு பற்றிய தகவல்களை மாற்றுத்திறனாளிகள் பெறுவதை உறுதி செய்தல்.

➢மாற்றுத்திறனாளியுடைய சம்மதம் இல்லாமல் மருத்துவ முறைகளின் மூலம் அவர்களின் கருவுறாமைக்கு இட்டுச் செல்வது குற்றமாகும்.

### I.தகவமைக்கப்பட்ட தேர்தல்/வாக்கு:-(**Accessibility in Voting)**

➢அனைத்து வாக்குசாவடிகளும் மற்றும் தேர்தல் தொடர்பான அனைத்து செயல்பாடுகளும் எளிதாக புரிந்து கொள்ளும்படியும், அணுகல் தன்மையுடனும் இருத்தல்.

**J**.நீதி பெறுவதற்கு அணுகுதல்:-(**Access to Justice)**

➢நீதிக்காக அனைத்து நீதிமன்றங்களையும் தடையின்றி அணுகுதல்.

➢உயர் ஆதரவு தேவைப்படும் மற்றும் குடும்ப அமைப்பிற்கு வெளியில் இருக்கும் மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய சட்டஉரிமைகளை நிலைநாட்ட தேவையான ஆதரவை அளித்தல்.

➢தேசிய மற்றும் மாநில சட்டசேவைகள் அமைப்பின் மூலம் கிடைக்கும் திட்டங்களையும், பயன்களையும் பெறும்வகையில் அணுகல் தன்மையுடன், நியாயமான தகவமைப்புடனும் இருத்தல்.

➢அரசின் பொது ஆவணங்கள் அணுகக்கூடிய தன்மையுடன் இருத்தல்.

➢பதிவுத்துறை மற்றும் தகவல்களை பதியும் துறைக்கு, அணுகல்தன்மையுடன் பதிய தேவையான உபகரணங்களை வழங்குதல்.

➢மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய கருத்துக்கள், வாதங்கள் மற்றும் சாட்சியங்களை தாங்கள் விரும்பும் வடிவில் கொடுக்கவும், அதை ஆவணப்படுத்தவும் செய்தல்.

**K**. சட்டரீதியான தகுதி**:-(Legal Capacity)**

➢மாற்றுத்திறனாளிகள் அசையும், அசையா சொத்துக்களை வாங்குவதற்கும், விற்பதற்கும், தன்னுடைய சொத்தை விரும்பியவருக்கு கொடுக்கவும், பரம்பரை சொத்தை பெறுவதற்கும் உரிமை உண்டு.

➢சட்டத்திற்கு முன் சமமான அங்கிகாரமும், தகுதியும் உண்டு.

➢மாற்றுத் திறனாளிக்கும், அவருக்கு ஆதரவு தருபவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்படுமாயின், அந்த நபரை ஆதரவு தருவதை விலக்கி கொள்தல்.

➢தனக்கு அளிக்கப்படும் ஆதரவை விரும்பிய வடிவில் மாற்றவும், தடுக்கவும் உரிமை உண்டு.

➢மாற்றுத்திறனாளிகளுக்கு ஆதரவு அளிப்பவர், அவர்மீது தவறான செல்வாக்கு காட்டக்கூடாது. மேலும் அவரது சுய அதிகாரம் அந்தரங்கம் மற்றும் கௌரவம் ஆகியவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டும்.

**L**. வரையறுக்கப் பட்ட பாதுகாவலர்:-(**Limited guardianship)**

➢தேவையான வசதிகள் கொடுத்த பிறகும் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு முடிவெடுப்பதில் மேலும் உதவி தேவைப்படுமென்றால் சில முடிவுகளை எடுப்பதற்கு, தேவைப்படும் காலம் மட்டும் மாற்றுத்திறனாளியின் ஒப்புதலோடு வரையறுக்கப்பட்ட பாதுகாவலர் தகுந்த/அதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரியின் மதிப்பாய்வின் படி நியமிக்கப்படுவார்.

**M**. ஆதரவு அளித்தலுக்கான அதிகார அமைப்பு:-(**Designation of authorities of support)**
➢சமுதாயத்தில் மாற்றுத்திறனாளிகளின் சட்டத்தகுதிகளை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவும், உயர் ஆதரவு தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கும், நிறுவனங்களில் வசிக்கும்

மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான சட்டத்திறனை கையாளுவதற்கு பொருத்தமான ஆதரவு அளிக்க அதிகாரியை நியமித்தல்.

**அத்தியாயம் : 3**

**கல்வி(Education)**

➢அரசுமற்றும் உள்ளுர்துறை அதிகார அமைப்பு-அரசின் நிதி பெறும் மற்றும் அரசின் அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்கள் ஒருங்கிணைந்த கல்வி அளிப்பதை உறுதி செய்ய வேண்டும். அதற்காக

➢பாகுபாடு இல்லாமல் மாற்றுத்திறனாளி குழந்தைகளை சேர்த்து கொள்தல் கல்வி கொடுத்தல் மற்றும் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குகளில் மற்றவர்களுக்கு சமமான வாய்ப்பளித்தல்.

➢தனிப்பட்டநபருக்குத்தேவைக்கேற்பநியாயமானதகவமைப்புசெய்தல்.

➢ஒருங்கிணைந்த கல்வி என்ற இலக்கிற்கு ஒத்தவாறு குழந்தைகளின் கல்வி மற்றும் சமூக வளர்ச்சியை அதிகப்படுத்தத் தேவையான தனிப்பட்ட/பிரத்தியேகமாக ஆதரவோ, சூழலில் மாற்றமோ செய்தல்.

➢அணுகுவதற்கு ஏற்ற கட்டிடங்கள், வளாகங்கள்

➢பார்வையற்ற/காதுகேளாதோர் மற்றும் இரண்டும் பாதிக்கப்பட்டோர்களுக்கு தகுந்த மொழி மற்றும் தொடர்பு கொள்ளும் வகையில் கற்பித்தல்.

➢கற்றலில் குறைபாடு இருப்பவர்களை ஆரம்பகாலத்திலேயே கண்டறிந்து தேவையான பயிற்சி அளித்தல்.

➢மாற்றுத்திறனாளி குழந்தைகள் பங்கேற்றல், கற்றலில் மேம்பாடு அடைதல் மேலும் உயர் ஆதரவு தேவைப்படும் குழந்தைகளின் வருகையை கண்காணித்தல்.

➢மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு போக்குவரத்து வசதி மற்றும் உயர் ஆதரவு தேவைப்படும் குழந்தைகளை அழைத்து வருபவருக்கும் போக்குவரத்து வசதி.

➢ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் ஒரு முறை பள்ளி செல்லும் குழந்தைகளை ஆராய்ந்து ஊனத்தை கணக்கெடுத்தல்.

➢தேவையான அளவு ஆசிரியர் பயிற்சி மையங்களை ஏற்படுத்துதல்.

➢சைகை மொழி, பிரெய்லி மற்றும் அறிவுத்திறன் குறைபாடுடைய குழந்தைகளுக்கு கற்பிக்கும் படி ஆசிரியர்களுக்கு பயிற்சிஅளித்து,பணி நியமனம் செய்தல்(including teacher swith disability).

➢பள்ளிக்கல்வியின் எல்லா நிலைகளிலும் ஒருங்கணைந்த கல்வியை ஆதரிக்க ஆசிரியர்களுக்கும் மேலும் கல்வித்துறை நிபுணர்களுக்கும் பயிற்சி அளித்தல்.

➢பொருத்தமான கற்றல் உபகரணங்களை இலவசமாக 18வயது வரை வழங்குதல்.

➢தேவைப்படும் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை.

➢தேவையான அளவு வள ஆதார மையங்களை நிறுவி, பள்ளி கல்வி நிறுவனங்களுக்கு, பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளிலும் உதவுதல்.

➢மேம்படுத்தப்பட்டமாற்றுவழிதொடர்புமுறையைஊக்குவித்தல்,பிரெய்லி,சைகைமொழிகளையும்ஊக்குவித்தல்.

➢பாடத்திட்டத்திலும்,கற்பிக்கும்முறையிலும்தேவையானமாற்றங்களைகொண்டுவருதல்.அதிகநேரம்,எழுதுபவர்வசதிமேலும்2,3ஆம்மொழிகளைகற்பதில்விலக்கு.

➢கல்வியைமேம்படுத்துவதில்ஆராய்ச்சி.

➢மேல்கல்வியிலும்,தொடர்கல்வியிலும்மாற்றுத்திறனாளிகள்பங்கேற்பதைஊக்குவித்துஉறுதிசெய்தல்.

# அத்தியாயம் : 4
# திறன் மேம்பாடுமற்றும் வேலைவாய்ப்பு
# (Skill development and Employment)

**தொழிற்பயிற்சி மற்றும் சுயவேலைவாய்ப்பு: (VocationaltrainingandSelfEmployment)**

➢பொதுவான முறையான மற்றும் முறை சாரா தொழில் பயிற்சிகளில் மாற்றுத்திறனாளிகளை சேர்த்துக் கொள்தல்; அவர்கள் அந்த தொழில் பயிற்சியினை முழுமையாக பெற தேவையான வசதிகளைச் செய்தல்.

➢சலுகை விகிதத்தில் தொழில்கடன்.

➢சந்தைப் படுத்துவதலுக்கான உதவி.

➢ஆட்டிசம், மூளை முடக்குவாதம் மற்றும் அறிவுத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கென பிரத்தியேகமான தொழிற்பயிற்சியுடன், சந்தைப்படுத்துவதற்கான இணைப்பு.

➢தொழில்பயிற்சி மற்றும் சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்துதலில் உள்ள முன்னேற்றம் குறித்து தகவல்களை சேகரித்து வைத்தல்.

**வேலை வாய்ப்பில் பாகுபாடின்மை:-(NondiscriminationinEmployment)**

➢வேலைவாய்ப்பில் பாகுபாடு ஏற்படுத்தாதிருத்தல்.

➢பணியை செய்வதற்கு தேவையான நியாயமான தகவமைப்பும், தடைகளற்ற சூழலும் ஏற்படுத்துதல்.

➢ஊனத்தை காட்டிபணி உயர்வு மறுக்காதிருத்தல்.

➢பணிக்காலத்தின் போது ஊனமுற்றால் வேலையை விட்டு நீக்கக் கூடாது; அந்தப்பணிக்கு தகுதியில்லையென்றால் நிகரான சம்பளம் மற்றும் இதர பலன்கள் உள்ள நிகரான பணிக்குமாற்றுதல் (அ) பணிஓய்வு (அ) பதவி முதிர்வு வரும் வரை பணியில் தொடர்தல்.

சமவாய்ப்புக் கொள்கை:-(**Equalopportunitypolicy**)

➢ஒவ்வொரு நிறுவனமும் வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு அளிப்பதற்கான கொள்கைகளை அமல்படுத்த தேவையான நடவடிக்கை குறித்து விளக்கமாக அறிக்கை வெளியிடுதல். இதைமத்திய, மாநிலமாற்றுத்திறனாளி ஆணையத்தில் பதிவுசெய்தல்.

**பதிவேடுகளை பராமரித்தல்:-(Maintenanceofrecords)**

➢ஒவ்வொரு நிறுவனமும் வேலைவாய்ப்பு பெற்ற மாற்றுத்திறனாளி பற்றியும், அவருக்கு அளிக்கப்பட்ட வசதிகள் பற்றியும் பதிவேடு செய்தல்.

➢வேலைவாய்ப்பு நிறுவனங்கள் வேலை தேடும் ஊனமுற்ற நபர் பற்றிய பதிவேடுகளை பராமரித்தல்.

**குறைதீர் அதிகாரியை நியமித்தல்:-(AppointmentofgrievanceRedressalofficer)**

➢அரசு குறைதீர் அதிகாரியை நியமித்தல்.

➢பாதிக்கப்பட்ட நபர் புகார் கொடுக்கலாம்; பெற்ற புகார் சரியான படி ஆவணப் படுத்தப்பட்டிருக்க வேண்டும்; இரண்டு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

➢திருப்தி ஏற்படாத பட்சத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் குழுவை அணுகலாம்.

# அத்தியாயம்:5

# சமூக பாதுகாப்பு, சுகாதாரம், மறுவாழ்வுமற்றும் பொழுதுபோக்கு(Social security, Health, Rehabilitation and Recreation)

**சமூகபாதுகாப்பு:-(Socialsecurity)**

➢போதிய தரமான வாழ்க்கை வாழ உாயி அரசு செயல் திட்டங்கள் ஏற்படுத்துதல். அந்த செயல் திட்டங்களின் பலன்கள் மற்ற பொது செயல் திட்டங்களை காட்டிலும் 25% அதிகமாக இருக்க வேண்டும்.

➢பாதுகாப்பு, தூய்மை, மருத்துவ வசதி மற்றும் ஆலோசனையுடன் கூடிய சமுதாய மையங்கள்.

➢ஆதரவற்ற, வேலையில்லாத, குடும்பம் இல்லா மற்றும் குழந்தை மாற்றுத் திறனாளிகளுக்குமான வசதிகள்.

➢இயற்கை மற்றும் செயற்கை இடர்பாடுகளின் போது வசதிகள் செய்தல்.

➢நகர்ப் புற குடிசைப் பகுதிகள், கிராமப் புறப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், பொருத்தமான அணுகக் கூடிய வகையிலான கழிவறைகள்.

➢இலவசமாக உதவி உபகரணங்கள், மருந்து, நோய்கண்டறியும் சோதனை, அறுவை சிகிச்சை(வருமானஉச்சவரம்பைகுறிப்பிட்டு)

➢ஊனமுற்றோா உதவித்தொகை.

➢வேலை வாய்ப்பு மையத்தில் பதிவு செய்து இரண்டு வருடங்களாகியும், சரியான வருமானம் வேலைவாய்ப்பு இல்லாத பட்சத்தில் வேலையின்மைப் படி உதவிப்பணம்.

➢உயர் ஆதரவு தேவைப்படும் ஊனமுற்றோர்க்கு பராமரிப்பு படி வழங்குதல்.

➢முழுமையான காப்புறுதி திட்டங்கள்.

**நல்வாழ்வு:-(Health)**

➢வசிப்பிடத்திற்கு அருகாமையிலேயே இலவச மருத்துவ வசதி, முக்கியமாக கிராமப்புரங்களில்

➢அரசு தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்வி நிறுவனங்களில் முழுமையான அணுகல் தன்மை.

➢மருத்துவம் பெறும் வரிசையில் முன்னுரிமை.

➢(அரசு மற்றும் உள்ளூர் துறை அதிகார அமைப்பும்)உடல் நலத்தை பேணுவதற்கான மற்றும் ஊனம் ஏற்படாமல் தடுப்பதற்கான வழி வகைகளை மேற்கொள்தல்; அதற்காக ஊனம் ஏற்படுவதின் காரணங்களைப் பற்றிய ஆராய்ச்சி மற்றும் மதிப்பாய்வு.

➢ஊனத்தை தடுப்பதற்கான வழி முறைகளை ஊக்குவித்தல்.

➢ஊனத்திற்கான காரணம் மற்றும் தடுக்கும் வழி முறைகள் குறித்த விழிப்புணர்வு.

➢பேரிடர் மற்றும் இடர் சமயங்களிலும் நலவாழ்வு அளித்தல்.

➢அத்யாவசிய மருத்துவ வசதிகள் மூலம் உயிரைக் காக்க அவசரசிகிச்சை.

➢பாலியல் மற்றும் இனப் பெருக்க சேவைகளை குறிப்பாக ஊனமுற்ற பெண்களுக்கு அளித்தல்.

➢வருடத்திற்கு ஒரு முறை குழந்தைகள் வளர்ச்சி படி நிலைகள் குறித்த பரிசோதனை.

➢ஆரம்ப சுகாதார பணியாளருக்கான பயிற்சிகள்.

➢பொது சுகாதாரம், தூய்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

➢குழந்தை பிறப்புக்கு முன்,பிறப்பின் போது மற்றும் பிறந்த பிறகு தாய்சேய் நலன் பதுகாக்க நடவடிக்கை.

**காப்பீட்டு திட்டங்கள்:-(Insurance scheme)**

➢மாற்றுத் திறனாளி தொழிலாளர்களுக்கு உாயி காப்பீட்டு திட்டங்கள்.

**மறுவாழ்வு:-(Rehabilitation)**

➢மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி, நல வாழ்வு மற்றும் வேலைவாய்ப்பிற்காக மறுவாழ்வு திட்டங்களை ஏற்படுத்துதல்.

➢மாற்றுத் திறனாளிகளுக்காக பணி செய்யும் நிறுவனங்களுக்கு நிதியுதவி.

➢மறுவாழ்வு கொள்கைகளை வகுக்கும் போது அரசு சாரா நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்துதல்.

**ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம்:-(ResearchandDevelopment)**

➢மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டை கருத்தில் கொண்டு தனி நபரோ, நிறுவனங்களோ மறுவாழ்வு மற்றும் இதர பயிற்சிகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்வதை ஊக்குவித்தல்.

**பண்பாடு மற்றும் பொழுதுபோக்கு:-(CultureandRecreation)**

➢மாற்றுத் திறனாளிகள் மற்றவர்களுக்குச் சமமாக பண்பாடு மற்றும் பொழுதுபோக்கு செயல்களில் சமமாக பங்கு கொள்வதற்கு நடவடிக்கைஎடுத்தல். அதற்காக மாற்றுத்திறனாளி கலைஞர்களையும், எழுத்தாளர்களையும் ஊக்குவித்தல்.

➢காலக் கிரமமாக மாற்றுத்திறனாளிகளின் வாழ்வுகுறித்து ஆராய்ந்து மாற்றுத்திறனாளிகள் பற்றிய வரலாற்று அருங்காட்சியம் ஏற்படுத்துதல்.

➢பல்வேறு கலைகளை மாற்றுத்திறனாளிகள் அணுகுவதற்கு ஏற்பாடு செய்தல்; அதற்கான வடிவமைப்பில் தேவைப்படும் மாற்றங்களை கொண்டு வருதல்.

➢பொழுதுபோக்கு மையங்களை ஊக்குவித்தல்.

➢சாரணர் படை, நாட்டியம், கலை வகுப்புகள், வெளிப்புற முகாம்கள் மற்றும் சாகச செயல்களில் பங்கேற்பதற்கு ஊக்குவித்தல்.

➢தொழில்நுட்பம், உதவி உபகரணங்கள் மற்ற பிற கருவிகள் மூலம் மாற்றுத்திறனாளிகள் பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடுவதை ஊக்குவித்தல்.

**விளையாட்டு செயல்பாடுகள்:-(Sporting Activities)**

➢மாற்றுத் திறனாளிகள் விளையாட்டுகளில் திறன் பட பங்கேற்பதை ஊக்குவித்தல்.

➢விளையாட்டுக் கல்வி மற்றும் திட்டங்களில் தேவையான மாற்றங்களை கொண்டு வருவதன் மூலம் ஒருங்கிணைப்பதை உறுதி செய்தல்.

➢விளையாடும் இடங்கள் மற்றும் சார்ந்த இடங்களை

➢தொழில் நுட்பத் திறன்களை வளர்ப்பதன் மூலம் ஆற்றல், செயல் திறன் மற்றும் திறமைகளை வெளிக் கொண்டு வருதல்.

➢பல புலன் உணர்வு அம்சங்களை வழங்குதல்.

➢உயர் தரம் வாய்ந்த விளையாட்டு வசதிகள் ஏற்படுத்த நிதி வசதி.

➢மாற்றுத் திறனாளிகளுக்கென அவர்களின் ஊனத்தைப் பொறுத்து தனித்தனி விளையாட்டு போட்டிகளை ஏற்படுத்துதல்.

# அத்தியாயாம் : 6
# வரையறுக்கப்பட்டமாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புவசதிகள்(Special provisions for Persons with Benchmark Disabilities)

**இலவசகல்வி:-(FreeEducation)**

➢6 18 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அருகில் உள்ள பள்ளியில் அல்லது அவர்களின் விருப்பத்தின் பேரில் சிறப்புப் பள்ளியில் சரியான சூழ்நிலையில் இலவச கல்வி.

➢உயர் கல்வி நிறுவனங்களில 5% இட ஒதுக்கீடு மற்றும் ஐந்து வருடங்கள் வரை உயர்ந்த பட்ச வயது வரம்பை தளர்த்துதல்.

**இட ஒதுக்கீட்டிற்கான பதவிகளை இனம் காணுதல்:-(Identification of posts forben chmark disabilities)**

➢வரையறுக்கப்பட்ட ஊனமுடைய நபர்களின் பிரதிநிதித்துவத்துடன் குழு அமைத்து இட ஒதுக்கீட்டிற்கான பதவிகளுக்கான பணியிடங்களை கண்டறிதல்.

➢இனம் காணப்பட்ட பதவிகள் குறித்து ஒவ்வொரு 3 ஆண்டுக்கும் மறுசீராய்வு மேற்கொள்ளல்.

**இடஒதுக்கீடு:-(Reservation)**

➢அரசு நிறுவனங்களில் ஒவ்வொரு நிலைகளிலும 4% இடஒதுக்கீடு.

➢1%- பார்வையின்மை மற்றும் பார்வை குறைபாடு

➢1%- காது கேளாமை மற்றும் செமத்திறன் குறைபாடு

➢1%- இயக்க குறைபாடு உடையவர்-

மூளை முடக்குவாதம், தொழுநோய் பாதிப்பிலிருந்து குணமடைந்தவர், குள்ளத்தன்மை உடையவர், அமில வீச்சில் பாதிக்கப்பட்டோர், தசைசிதைவு நோய்.

➢1%–புற உலக சிந்தனையின்மை மனவளர்ச்சி குறைாடு, குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு, மனநலம் பாதிப்பு மற்றும காது கேளாமை மற்றும் பார்வை திறன் குறைபாடு.

➢ஒரு காலிப் பணி இடத்திற்கு பொருத்தமான நபர்கள் இல்லை என்றால் அந்தப் பணி இடத்தை அடுத்து வரும் நியமன ஆண்டுக்கு எடுத்துச் செல்லல்.

➢அப்பொழுதும் இல்லையென்றால் 5 பிரிவில் மற்ற ஊன வகைகளுக்கு எடுத்துச்செல்லல்.

➢அப்பொழுதும் இல்லையென்றால் மாற்றுத்திறன் அல்லாதவர்களை நிரப்பலாம்.

தனியார் துறையில் வேலைவாய்ப்பளிப்பவர்களை ஊக்குவித்தல்:-

➢5% வேலைவாய்ப்பு வழங்குவதை ஊக்குவித்தல்.(வரையறுக்கப்பட்ட ஊனம் உடையவர்களுக்கு)

**சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்:-**

➢வரையறுக்கப்பட்ட ஊனமுடையவர்களுக்காக ஒதுக்கப்பட்ட காலி இடங்கள், நியமித்த நபர்கள் மற்றும் வரப் போகும் காலி இடங்களை சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அனுப்புதல்.

**சிறப்புத் திட்டங்கள் மற்றும் பொதுமேம்பாட்டுத் திட்டங்கள்:-**

➢விவசாய நலம், வீட்டுவசதி மற்றும் பொது திட்டங்களிலும் மற்றும் வறுமை ஒழிப்பு திட்டங்களிலும் இடஒதுக்கீடு; இதில் பெண் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை.

➢சலுகை விலையில் நிலங்களை ஒதுக்கும் போது 5%.

## அத்தியாயாம்:7

# உயர் ஆதரவு தேவையுள்ள ஊனமுற்றோர்க்கான சிறப்பு வசதிகள்(Special Provisions for Persons with High support needs)

➢வரையறுக்கப் பட்ட ஊனமுடைய ஒருவருக்கு உயர் ஆதரவு தேவைப்படும் எனம பட்சத்தில் அவரோ, அவருக்காக மற்றவரோ (அ) நிறுவனமோ அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் உயர் ஆதரவு தேவை என்பதற்கு விண்ணப்பிக்கலாம்.

➢அவரை திறன் மதிப்பீட்டு வாரியத்திற்கு பரிந்துரை செய்தல்.

➢திறன் மதிப்பீட்டு வாரியம் மத்திய அரசு குறிப்பிட்டுள்ள படி மதிப்பீடு செய்து உயர் ஆதரவு அளிக்க வேண்டியதின் அவசியம் மற்றும் தன்மை பற்றி அறிக்கை.

➢இந்த அறிக்கையின் படி, தகுந்த அரசு வகுத்துள்ள திட்டங்கள் வழங்க நடவடிக்கை.

## அத்தியாயாம்:8

## அரசின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்

## (Duties and Responsibilities of Appropriate Governments)

**விழிப்புணர்வு நிகழ்ச்சி(AwarenessCampaign)**

➢உரிய அரசு மத்திய மற்றும் மாநில ஊனமுற்றோர் ஆணையத்தின் ஆலோசனையோடு, இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஊனமுற்றோர் உரிமைகளை பாதுகாக்கப்படுகிறது என்பதை உறுதி

செய்யும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள். மேலும் மாற்றுத் திறனாளிகளின் பங்களிப்பு, அவர்களின் உரிமைகள், முடிவுகளுக்கு மதிப்பளித்தல், மனித நிலைகளில் ஊனம் இயல்பானது என்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்.

➢பள்ளி, கல்லூரி, பல்கலை கழக பாடத்திட்டங்களில் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை சேர்த்தல்.

➢சுற்றுப்புறம், போக்குவரத்து, தகவல்தொடர்பு மற்றும் இன்ன பிற சேவைகளை அணுகுவதற்கான தரங்களை நிர்ணயித்தல்(AccessibilityStandard).

**தடையற்ற சூழல்:-(Accessibility)**

சுற்றுப்புறம், போக்குவரத்து, தகவல்தொடர்பு, பொதுமக்களுக்கான பிற சேவைகள் மற்றும் வசதிகளில் தடையற்ற சூழலை ஏற்படுத்த தர நிர்ணயம் செய்தல்.

**போக்குவரத்தில் தடையற்ற சூழல்:(AccessibilityinTransportation)**

➢வாகன நிறுத்துமிடம், கழிவறை, பயணச் சீட்டு வழங்குமிடம் மற்றும் இயந்திரம் ஆகியவை அணுகுவதற்கு எளிதாக அமைத்தல்.

➢பழைய வகை போக்குவரத்தில் தகுந்த மாற்றம் செய்தல் (பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் வடிவமைப்பில் சாத்தியமானால்).

➢எல்லா விதமான போக்குவரத்து வசதிகளிலும் தடைகளற்ற சூழல்.

➢தடைகளற்ற சாலைகள்

➢ஊனமுற்றோரின் தடையற்ற தனிப்பட்ட நகர்வு/ போக்குவரத்தை ஊக்குவிக்க திட்டங்கள்.

➢ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள வாகனங்களை மாற்றியமைத்தல். உதவியாளர்

**தகவல் மற்றும் தொடர்பு தொழிற்நுட்பத்திற்கான ணுகு வசதி (Accesstoin formation and communication technology)**

➢உரிய அரசு கீழ்கண்ட நடவடிக்கைகளை உறுதி செய்ய வேண்டும்.

➢ஒலி, அச்சு, மின்னனு ஊடகங்களிலுள்ள விபரங்கள் அனைத்தும் அணுகக் கூடிய வடிவத்தில் இருத்தல்.

➢ஊனமுற்ற நபர்கள் மின்னனு ஊடகத்தை அணுகுவதற்கு ஒலி விவரிப்பு, சைகை மொழி விளக்கம், சுருக்கமான தலைப்பு ஆகியவற்றை வழங்குதல்.

➢அன்றாட தேவைக்கு பயன்படுத்தக் கூடிய மின்னனு சாதனங்கள், கருவிகள் போன்றவற்றை அனைவருக்கும் பொதுவான வடிவமைப்பில் கிடைத்தல்.

### நுகர்வோர் பொருட்கள்(Consumergoods)

➢உரியஅரசு, ஊனமுற்ற நபர்களின் பொதுவான பயன்பாட்டிற்கென அனைவருக்கும் ஏற்ற முறையில் வடிவமைக்கப்பட்ட நுகர்பொருட்கள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான உதிரிபாகங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் மற்றும் வினியோகத்தை மேம்படுத்துதல்.

### அணுகு வசதிகளுக்கான அளவுகோள்களை கட்டாயமாகக் கடைபிடித்தல் (Mandatory observance of Accessibility norms)

➢மத்திய அரசால் உருவாக்கப்பட்ட விதிகள் கடைபிடிக்காத பட்சத்தில் எந்த ஒரு நிறுவனத்திற்கும் கட்டிடம் கட்டுவதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கக்கூடாது.

➢மத்திய அரசால் வரையறுக்கப்பட்ட விதி முறைகளுக்கு இணங்காத எந்த ஒரு நிறுவனத்திற்கும் கட்டிடம் முழமை அடைந்ததற்கான சான்றிதழ் வழங்கவோ அல்லது கட்டிடத்தை பயன்படுத்த அனுமதிக்கவோ கூடாது. தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளாகங்களை அணுகக்கூடிய வகையில் மாற்றியமைப்பதற்கான காலவரையறை மற்றும் அதற்கான நடவடிக்கை

➢இருந்த போதிலும் மாநில சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அணுகு தன்மை ஏற்படுத்த ஒவ்வொரு மாநில அரசின் தயார்நிலை மற்றும் பிற தொடர்புடைய விஷயங்களை கணக்கில் கொண்டு அவற்றுள் அணுகல் தன்மையை ஏற்படுத்துவதற்கான காலவரையை தனித்தனியாக நிர்ணயிக்கலாம்.

➢உரிய அரசும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளும் அனைத்து கட்டிடங்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகள் வழங்கும் இடங்கள் குறிப்பாக ஆரம்ப சுகாதார நிலையம், பொதுமருத்துவமனை, பள்ளிகள் பேருந்துநிலையம், இரயில்நிலையம் ஆகியவைகளில் அணுகுவதற்கு ஏற்றவாறு செயல் திட்டம் வகுத்து முன்னுரிமை அடிப்படையில் வெளியிடுதல்.

### மனித வள மேம்பாடு (HumanResourceDevelopment)

➢இந்திய மறுவாழ்வு குழுமத்திற்கு முரணாக இல்லாமல் இச்சட்ட நோக்கங்களை நிறைவேற்ற மனிதவளத்தை மேம்படுத்துதல்.

➢ஊனமுற்றோரின் உரிமைகளைப் பற்றிய பயிற்சிகளை ஊராட்சி ஒன்றியதலைவர்கள்,

➢பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழக ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், துணை மருத்துவர்கள், துணை மருத்துவ பணியாளர்கள், சமூக நல அதிகாரிகள், ஊரக வளர்ச்சி அதிகாரிகள், ஆஷா பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், பொறியாளர்கள், கட்டிட வடிவமைப்பாளர்கள், இதர தொழிற் முறை வல்லுநர்கள் மற்றும் சமுதாய பணியாளர்கள் ஆகியவர்களுக்கான கல்விப் பாடதிட்டத்தில் ஊனம் பற்று ஒரு பகுதியைச் சேர்த்தல்.

➢திறன் வளர்ப்பு பயிற்சிகளான சுயமாக வாழ்தல் மற்றும் சமுதாயத்துடன் இணைந்திருத்தல் போன்ற பயிற்சிகளை குடும்பத்தார், சமுதாயத்தினர் மற்றும் இதர பங்குதாரர்களுக்கும், பராமரிப்புமற்றும் ஆதரவு அளித்தல் பயிற்சியை பராமரிப்பாளர்களுக்கும் உருவாக்குதல்.

➢தற்சார்பினை உறுதி செய்யும் வகையில், பரஸ்பரபங்களிப்பு மற்றும் மரியாதை மூலம் சமூக உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சிகளை ஊனமுற்ற நபர்களுக்கு வழங்குதல்.

➢விளையாட்டு ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சிகள்.

➢தேவைக் கேற்ப மற்ற திறன் வளர்ப்பு நடவடிக்கைகள்

➢அனைத்து பல் கலை கழகங்களிலும் ஊனம் பற்றிய படிப்பிற்காக கற்றல் மையங்கள் ஏற்படுத்துதல் உட்பட ஊனம் தொடர்பான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்துதல்.

➢ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேவைக்கேற்ப பயிற்சிகளை நடத்துதல்

**சமூகதணிக்கை(SocialAudit)**

➢பொதுத் திட்டங்கள் மற்றும் செயல்முறை திட்டங்கள் மூலம் ஊனமுற்ற நபர்களுக்கு எதிரான விளைவுகள் ஏற்படாதவாறும் மற்றும் அவர்களுடைய தேவைகளை உறுதிசெய்வதற்கும் அனைத்து பொதுவான திட்டங்கள் மற்றும் செயல்முறை திட்டங்களை ஊனமுற்ற நபர்களைக் கொண்டு சமூக தணிக்கையை உாயி அரசு மேற்கொள்ளுதல்.

# அத்யாயம்-12

## ஊனமுற்ற நபர்களுக்கான தலைமை ஆணையர் மற்றும் மாநில ஆணையர் (Chief Commissioner and State Commissioner for Persons with Disabilities)

**ஊனமுற்றோர்க்கானதலைமைஆணையர்**

1.ஒரு தலைமை ஆணையர்.

2.இரண்டு உதவி ஆணையர் (அதில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருத்தல்).

**(ஆணையர் ஊனமுற்றோர் மறுவாழ்வுமற்றும் உரிமைகள் பற்றிய அறிவு மற்றும் அனுபவம்)**
**பணிகள்:-**

இந்தச் சட்டத்திற்கு ஒவ்வாத விதி, கொள்கைகள், திட்டங்கள், ஷரத்துக்கள் ஆகியவற்றை கண்டு பிடித்து அதை சரி செய்வதற்கான வழி முறைகள்

➢பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் உரிமைகள் மீறப்படும் பொழுது, அதை விசாரித்து சீர் செய்வதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறைக்கு எடுத்துரைத்தல்.

➢இந்தச் சட்டம் பயனுள்ள வழியில் செயல் படுத்துவதற்கு வழி முறைகளை பரிந்துரைத்தல்.

➢ஊனமுற்றோர் அவர்களது உரிமைகளை முழமையாக அனுபவிக்க தடையாக இருக்கும் விஷயங்களை ஆராய்ந்து அதை சரி செய்ய வழி முறைகள்.

➢ஊனமுற்றோர்க்கான பன்னாட்டு உரிமைகள் மீதான ஒப்பந்தங்களை ஆராய்ந்து அதை நடைமுறை படுத்துவதற்கான வழிமுறைகள்.

➢ஊனமுற்றோர் உரிமைகள் பற்றியஆராய்ச்சி

➢ஊனமுற்றோர் பயன்பாட்டுக்கானநிதியின் உபயோகத்தினைகண்காணித்தல்.

## தலைமை ஆணையரின் பரிந்துரையின் மீது உரிய அதிகார அமைப்புக்களின் நடவடிக்கை.

➢மாநிலங்களில் ஊனமுற்றோர்க்கான மாநில ஆணையர் இதர அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள்.

**வருடாந்திர சிறப்பு அறிக்கை:-**

➢ஆணையம் சிறப்பறிக்கை வருடத்திற்கு ஒரு முறை (தேவைப்பட்டால் இடையில்)

➢மத்திய அரசு அந்த அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

# அத்யாயம் 13

➢ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சிறப்பு நீதிமன்றம் இந்தசட்டத்தின் கீழ் உள்ள குற்றங்களை விசாரிக்க சிறப்பு பொது வழக்கறிஞர்.

**குறைபாடுள்ள நபருக்கான எடுத்துக்காட்டு**

மாற்றுத்திறனாளிகளுக்கு அநீதி ஏற்ப்பட்டால் எங்கே யாரை அனுகலாம்?

- மாற்றுதினாளி உரிமைகள் ஆணைய நீதிமன்றம்
- தேசிய மாற்றுத்திறனாளி ஆணையர்
- மாநில மாற்றுத்திறனாளி நீதிமன்றம்

**இந்த சட்டத்தில் ஏதேனும் விதி மீறல் ஏற்பட்டால் மாற்றுத்திறனாளிகளுக்கு என்ன நிவாரணம் கிடைக்கும்?**

சட்டத்தில் விதிமீறல் இருந்தால் 6 மாதங்கள் வரை சிறை தண்டனை மற்றும் / அல்லது ரூ.1000 அபராதம் விதிக்கப்படும். அடுத்தடுத்த மீறல்களுக்கு அதிகப்படியான அபராதம் விதிக்கப்படும். மீண்டும் மீண்டும் மீறினால் இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும்/அல்லது ரூ.50000 முதல் 5 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்.

மாற்றுத்திறனாளி ஒருவரை வேண்டுமென்றே மற்றும் அவமானப்படுத்துவது அல்லது மிரட்டுவது, மாற்றுத்திறானளி பெண் அல்லது குழந்தையை பாலியல் ரீதியாக சீண்டினால், ஆறு மாதங்கள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதம் அளிக்கப்படும். இந்திய தண்டனைச் சட்டம், 1860-ன் பிரிவு 354, எந்தவொரு பெண்ணின் நாகரீகத்தையும் மீறும்

குற்றத்திற்கு ஒரு வருடம் முதல் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கின்றது.

**புகாரை எங்கே பதிவு செய்வது?**

இந்த சட்டத்தின் கீழ் குற்றங்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சிறப்பு நீதிமன்றமாக ஒரு அமர்வு நீதிமன்றத்தை மாநில அரசு அறிவிக்கும். இது சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளின் ஒப்புதலுடன் செய்யப்படும் அமர்வு நீதிமன்றங்கள் இல்லாத பட்சத்தில், புகார்களை கடிதங்கள் மற்றும் மனுக்கள் மூலம் நேரடியாக மாநில ஆணையத்திற்கு எடுத்துச் செல்லலாம்.

**6.1.2) கல்விக்கான உரிமை (RTE)**

ஆறு முதல் பதினான்கு வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தைகளுக்கும், தனது ஆரம்பக் கல்வி முடியும் வரை, அருகிலுள்ள பள்ளியில் இலவச மற்றும் கட்டாயக் கல்வி பெற உரிமை உண்டு.

இந்த சட்டம் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் கல்வி பெறும் உரிமையை உறுதி செய்வதில் பெற்றோர், பள்ளி மற்றும் அரசாங்கத்தின் பங்கு மற்றும் பொறுப்பை தெள்ளத் தெளிவாக்கியுள்ளது. எளிதான விளக்கத்திற்கு சட்டங்களின் முக்கிய அம்சமானது கல்வியை வழங்குவதில் ஒவ்வொரு பங்குதாரரின் பங்கு மற்றும் பொறுப்பு என பிரிக்கப்பட்டுள்ளது.

**குழந்தையின் உரிமைகள்:**

எந்தவொரு குழந்தையும் தனது ஆரம்பக் கல்விக்கு கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. சமூகம் மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த குழந்தைகள், அவர்களின் சாதி, வகுப்பு, பாலினம் மற்றும் இயலாமை போன்றவற்றை பொருட்படுத்தாமல், அவர்களது கல்வியைத் தொடர்வதைத் தடுக்க முடியாது. பல குறைபாடுகள் கொண்ட அல்லது கடுமையான குறைபாடுகள் உள்ள ஒரு குழந்தை வீட்டில் இருந்து கல்வி கற்பதை தேர்ந்தெடுக்கும் உரிமையைக் கொண்டுள்ளது. 6 வயதுக்கு மேற்பட்ட குழந்தை இன்னும் பள்ளியில் சேர்க்கப்படவில்லை என்றால், அந்த குழந்தை வயதுக்கு ஏற்ற வகுப்பில் சேர்க்கப்பட வேண்டும். ஒரு குழந்தை தனது ஆரம்ப கல்விக்காக ஒரு மாநிலத்திலோ அல்லது வெளி மாநிலத்திலோ எந்த பள்ளியிலும் மாற்றுவதற்கு உரிமை உள்ளது மற்றது இடமாற்றச் சான்றிதழ் இல்லாததால் எந்த பள்ளியிலும் சேர்க்கையை மறுக்க முடியாது.

**பெற்றோரின் பொறுப்பு:**

தங்கள் குழந்தையை தனியார் பள்ளியில் சேர்த்த பெற்றோருக்கு தொடக்கக் கல்விக்கான செலவினங்களைத் திரும்ப பெறுவதற்கு உரிமை கோர முடியாது. தொடக்கக் கல்விக்காக தங்கள் குழந்தையை பக்கத்திலுள்ள பள்ளியல் சேர்ப்பது ஒவ்வொரு குழந்தையின் பெற்றோர் / பாதுகாவலரின் கடமையாகும்.

**பள்ளிகள் வகிக்கும் பொறுப்பு மற்றும் பங்கு:**

வகுப்பில் குறைந்தது 25% குழந்தைகள் அக்கம் பக்கத்தில் உள்ள நலிவடைந்த பிரிவினர் மற்றும் பின்தங்கிய பிரிவினராக இருக்க வேண்டும் மற்றும் அவர்கள் தொடக்க கல்வி நிறைவு பெறும் வரை இலவச மற்றும் கட்டாய கல்வியை வழங்க வேண்டும். எந்தப் பள்ளியும் மூலதனக் கட்டணத்தை வசூலிக்கவோ, அல்லது குழந்தையையோ அவர்களது பெற்றோர்களையோ தொடக்க கல்வி சேர்க்கைக்காக பரிசோதிக்க முடியாது. பிறப்புச் சான்றிதழை ஒரு குழந்தையின் வயதுச் சான்றாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பிறப்புச் சான்றிதழ் இல்லாததை பள்ளிச் சேர்க்கையை நிராகரிப்பதற்கு ஒரு காரணமாக கூற முடியாது. தொடக்கக்

கல்வியை முடிக்கும் வதை எந்த ஒரு குழந்தையும் எந்த ஒரு வகுப்பிலும் நிறுத்தி வைப்பதோ அல்லது பள்ளியிலிருந்து வெளியேற்றவோ முடியாது. ஒரு குழந்தை கல்வியாண்டின் தொடக்கத்திலோ, அல்லது பரிந்துரைக்கப்படும் நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் ஒரு பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும்.

உள்ளூரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் பெற்றோர்கள் அல்லது அத்தகைய பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட குழந்தையின் பாதுகாவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொண்ட பள்ளி மேலாண்மைக் குழுவை பள்ளிகளில் அமைக்க வேண்டும். அத்தகைய குழுவில் நான்கில் மூன்று பங்கு உறுப்பினர்களாக பெற்றோர் அல்லது பாதுகாவலர்களாக இருத்தல் வேண்டும். பின் தங்கிய சமுதாயத்தினர் மற்றும் நலிவடைந்த பிரிவைச் சார்ந்த குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு விகிதாசார பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். அத்தகைய குழுக்களில் 50% பெண்களாக இருக்க வேண்டும். இந்தக் குழுவானது பள்ளியின் செயல்பாட்டைக் கண்காணித்தல், பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் பரிந்துரைத்தல், உரிய அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பு அல்லது வேறு ஏதேனும் ஆதாரங்களில் இருந்து பெறப்பட்ட மானியங்களின் பயன்பாட்டை கண்காணிக்கும்.

**அரசின் கடமை:**

இந்த சட்டம் அமைந்ததிலிருந்து மூன்று ஆண்டுக்குள், பரிந்துரைக்கப்பட்ட பகுதிகளில் பள்ளி நிறுவப்படமாலிருந்தால் அத்தகைய பகுதியில் அல்லது பகுதிக்கு அருகாமையில் பொருத்தமான இடத்தில் பள்ளியை நிறுவுவது அரசு மற்றும் உள்ளூர் அதிகாரத்தின் கடமையாகும். முந்தைய தொடக்கக் கல்வியை வழங்குவதும் குழந்தைகளின் ஆரம்பு வளர்ச்சிக்காக அங்கன்வாடிகளை நிறுவுதல் அரசின் கடமையாகும்.

# 8.2 கல்வி உரிமை சட்டம் 2009

- இந்திய அரசியலைமைப்பில் கல்வி என்பது பொதுப் பட்டியலின் அதிகார வரம்பில் இருக்கும் ஒரு துறை ஆகும். எனவே மத்திய அரசு மற்றும் மாநிலங்கள் இரண்டுமே இந்த விவகாரத்தில் சட்டமியற்ற முடியும்.
- 1992 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் (கர்நாடக மாநிலத்திற்கு எதிரான மோகினி ஜெயின் எனபவரது வழக்கு) இந்திய அரசியலமைப்பின் 21 வது சரத்தின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட வாழ்க்கைக்கான உரிமையில் சேர்க்கப்பட்டுள்ள கல்வி உரிமை என்பது ஒரு அடிப்படை உரிமை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- அரசியலமைப்பு (எண்பத்து ஆறாவது சட்டத் திருத்தம்) சட்டம் 2002 ஆம் ஆண்டு ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின் தங்கிய வகுப்புகளைச் சேர்ந்த அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்குவதற்காக இந்திய அரசியலைப்பில் 21- A சரத்து ஆனது அடிப்படை உரிமை பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.
- இலவசக் கல்வி என்பது எந்தவொரு குழந்தையும் தனது ஆரம்பக் கல்வியைத் தொடரவும் முடிக்கவும் இயலாமல் தடுக்கக் கூடிய எந்தவொரு கட்டணங்களையும் அல்லது செலவுகளையும் செலுத்த அவசியமில்லை என்னும் நிலையாகும்.
- கட்டயாகக் கல்வி என்பது 6-14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளும் தொடக்கக் கல்வியைப் பெற அனுமதித்தல். அவர்களது வருகை மற்றும் பளிளிக் கல்வியை நிறைவு செய்தல் ஆகியவற்றை உறுதி செய்வது ஆகும். இது அரசு மற்றும் உள்ளாட்சி அரசு அதிகாரிகளின் குறிப்பிடத்தக்க கடமைகளின் ஒன்றாகும்.

RTE சட்டத்தின் கூறுகள்

- அண்மையில் உள்ள பள்ளியில் ஆரம்பக் கல்வி முதல் இடைநிலை கல்வி வரை இலவச மற்றும் கட்டாயக் கல்வியைக் குழந்தைகள் பெறும் உரிமை உண்டு.
- கட்டாயக் கல்வி என்பது ஆறு முதல் பதினான்கு வயதுக்குட்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச தொடக்கக் கல்வியை வங்குவதையம் கட்டாயச் சேர்க்கை, வருகை மற்றும் தொடக்கக் கல்வியை நிறைவு செய்வதையும் உறுதி செய்வது அரசாங்கத்தின் கடமை என்று இந்தச் சட்டம் தெளிவுபடுத்துகிறது.
- இதுவரை பள்ளியில் சேர்க்கப்படாத குழந்தையை அதன் வயதுக்கு ஏற்ற வகுப்பில் சேர்க்க இது ஏற்பாடு செய்கிறது.
- இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்குவதில் அரசாங்கங்கள், உள்ளாட்சி அரசு மற்றும் பெற்றோர் ஆகியோரது கடமைகள் மற்றும் பொறுப்புகளை இது குறிப்பிடுகிறது. மேலும் அரசுகளுக்கு இடையில் நிதி மற்றும் பிற பொறுப்புகளை பகிர்ந்து கொள்ளவும் இச்சட்டம் வழிவகுக்கிறது.

- மாணவர் ஆசிரியர் விகிதங்கள் கட்டிடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு, பள்ளி வேலை நாட்கள் ஆசிரியர் வேலை நேரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் தரங்களை இது வகுக்கிறது.
- ஒவ்வொரு பள்ளிக்கும் குறிப்பிட்ட மாணவர் ஆசிரியர் விகிதம் பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலம் இது மாநில அல்லது மாவட்டம் அல்லது வட்டாரங்களில் சராசரியாக இல்லாமல் ஆசிரியர்களை தகுந்த எண்ணிக்கை ரீதியாக தர வரிசைபடுத்திப் பணியில் அமர்த்துவதற்கு இந்தச் சட்டம் உதவுகிறது. இதன் மூலம் ஆசிரியர் பதவிகளில் நகர்புற- கிராமப்புர எற்றத்தாழ்வு இல்லை என்பதை இது உறுதி செய்கிறது.
- கல்விசாரா பணிகள் பத்து வருடங்களுக்கு ஒருமுறை எடுக்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு உள்ளூர் அதிகாரசபை, மாநில சட்டமன்றங்கள் மற்றும் பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் மற்றும் பேரழிவு நிவாரணம் ஆகியவற்றில் ஆசிரியர்களைப் பணியில் அமர்த்துவதையும் இந்தச் சட்டம் தடை செய்கிறது.
- இது சரியான பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அதாவது தேவையான நுழைவு மற்றும் கல்வித் தகுதிகள் கொண்ட ஆசிரியர்களை நியமிக்க வழி வகுக்கிறது.
- இது ஆரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள மதிப்புகளுக்கு இணங்க பாடத்திட்டத்தை மேம்படுத்துவதற்கு வழங்குகிறது.
- இந்தச் சட்டம் ஆனது பின்வருவனவற்றை உறுதி செய்கிறது.
    - குழந்தையின் முழு வளர்ச்சி
    - குழந்தையின் அறிவை மேம்படுத்துதல்.
    - குழந்தையின் திறன் மற்றும் திறமையை வளர்த்தல் மற்றும்
    - குழந்தை மையமாக கொண்ட கற்றல் முறையின் மூலம் குழந்தையைப் பயம், அதிர்ச்சி மற்றும் பதட்டம் ஆகியவற்றிலிருந்து விடுவித்தல்.
- இந்த சட்டம் ஆனது பின்வருவனவற்றைத் தடை செயய்கிறது.
    - உடல் தண்டனை மற்றும் மன ரீதியான துன்புறுத்தல்
    - குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்க்காக நடைபெறும் நுழைவுத் தேர்வு போன்ற நடைமுறைகள்.
    - நிர்ணயக் கட்டணம்.
    - ஆசிரியர்களின் தனிப்பட்ட வேலைநேரக் கல்வி.
    - அங்கிகாரம் இல்லாமல் பள்ளிகளை நடத்துதல்.
- இந்தச் சட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது.
    - அரசுப் பள்ளிகள் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வியை வழங்க வேண்டும்.
    - பொதுவாக பள்ளிகளை பள்ளி நிர்வாகக் குழுக்கள் நிர்வகிக்கும்.
    - பள்ளி நிர்வாகக் குழு ஆனது உள்ளாட்சி அரசு அதிகாரிகள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஆகியோர்களை கொண்டுள்ள அமைப்பு ஆகும்.
    - பள்ளி நிர்வாகக் குழுவில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் மட்டும் 75% இருக்க வேண்டும்.
    - பள்ளி நிர்வாக குழுக்களில் பின்தங்கிய பிரிவினரைச் சேர்ந்த 20 சதவீத பெண்கள் மற்றும் குழந்தைகளின் பெற்றோர்களை சேர்க்க இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது.
- சிறுபான்மை நிறுவனங்களைத் தவிர அனைத்துத் தனியார் பள்ளிகளும் 25% இடங்களை இலவசக் கல்வி பெறும் குழந்தைகளுக்கு ஒதுக்க வேண்டும் ( பொது – தனியார்

கூட்டாண்மைத் திட்டத்தின் ஒரு பகுதியாக அரசால் இவர்களுக்கான கட்டணம் ஆனது திருப்பித் செலுத்தப்படும்.

- பொருளாதார நிலை அல்லது சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு ஆகிய அடிப்படையில் குழந்தைகள் தனியார் பள்ளிகளில் அனுமதிக்கப்படுகிறார்கள்.
- இந்த ஒதுக்கீட்டின் கீழ் எந்த இடங்களையும் காலியாக விட முடியாது.
- இந்த சட்டத்தின் படி 1 முதல் 5 ஆம் வகுப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு 1 கீ.மீ நடை தூரத்திலும் 6 முதல் எட்டாம் வகுப்பு வரையிலானவர்களுக்கு 3 கீ.மீ நடை தூரத்திலும் ஒரு பள்ளி இருக்க வேண்டும். இத்தகைய பள்ளிகள் அண்மைப் பள்ளிகள் அல்லது அண்மைத் தொலைவில் உளள பள்ளிகள் என்று அழைக்கப்படுகின்றன.
- பள்ளியின் இருப்பிடத்தைத் தீர்மானிக்க பள்ளியின் இருப்பிட வரைபடத்தை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.
- இது அங்கிகரிக்கப்படாத அனைத்து பள்ளிகளையும் தடை செய்கிறது, மேலும் இச்சட்டத்தின் மூலம் நன்கொடை அல்லது நிர்ணயக் கட்டணங்கள் மற்றும் பள்ளியில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு குழந்தை அல்லது பெற்றோருக்கு நேர்காணல் வைத்தல் போன்றவை தடை செய்யப் படுகின்றன.
- தொடக்க கல்வியைப் பெறுவதற்கு குழந்தை அல்லது பெற்றோர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய நேரடி செலவான பள்ளிக் கட்டணம் அல்லது மறைமுக செலவுகளான பள்ளி சீருடைகள் பாடப்புத்தகங்கள் , மதிய உணவு, போக்குவரத்து போன்றவை அதில் இல்லை.
- நிதித் திறனைக் காட்டிலும் பள்ளிக்கும் வீட்டிற்க்கும் இடையிலான தூரம் மட்டுமே இதில் ஒரே தடையாக உள்ளது.
- தொடக்க கல்வி முடிவடையும் வரை எந்தவொரு குழந்தையையும் பள்ளி விட்டுத் தடுத்து நிறுத்தவோ வெளியேற்றவோ அல்லது வாரியத் தேர்வில் தேர்ச்சி பெற்றாக வேண்டும். என்று கட்டாயக் படுத்தவோ கூடாது என்பதையும் இந்தச் சட்டம் கூறுகிறது.
- வேறு வார்த்தைகளில் கூறுவதனால், ஆரம்பக் கல்வியை (வகுப்பு 8) முடிக்கும் வரை குழந்தைகளுக்கு தேர்ச்சி வழங்காமல் தடுத்து வைப்பதை இந்தச் சட்டம் தடை செய்கிறது.
- பள்ளிக்குச் செல்லாமல் இடையில் நின்ற மாணவர்களுக்கு அதே வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு இணையாக சிறப்புப் பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாட்டையும் இந்தச் சட்டம் உறுதி செய்கிறது.
- வேறு வார்த்தைகளில் கூறுவதனால், முதன்முறையாக பதிவு செய்ப்பட்ட குழந்தை அதன் வயதுக்கு ஏற்ற வகுப்பில் அனுமதிக்கப்பட வேண்டும்.
- 18 வயது வரை உள்ள மாற்றுத் திறனாளிகளின் கல்வி உரிமையானது ஒரு தனிச் சட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகள் சட்டம் என்ற சட்டத்தின் கீழ் குறிப்பிடப் பட்டு இருக்கிறது.
- தொடக்கக் கல்வியின் தரம் உட்பட அனைத்து அம்சங்களையும் கண்காணிக்க தேசிய தொடக்கக் கல்வி ஆணையம் ஒன்று அமைக்கப்படும்.
- தொடக்க கல்வியில் சேருவதற்கான நோக்கத்திற்காக பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவுச் சட்டம் 1856 இன் படி வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழின் அடிப்படையில் அல்லது பிற ஆவணங்களின் அடிப்படையில் ஒரு குழந்தையின் வயது தீர்மானிக்கப்படும்.
- வயது நிரூபணம் இல்லாததால் எந்தவொரு குழந்தைக்கும் பள்ளியில் சேர்க்கைகான அனுமதி மறுக்கப்படாது.
- தொடக்க கல்வியை முடிக்கும் குழந்தைக்குச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

- ஒன்று முதல் 5ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு 30 மாணவர்களுக்கும் ஒரு ஆசிரியரும், ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை ஒவ்வொரு முப்பத்தைந்து மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரும் இருக்க வேண்டும்.
- ஆரம்பக் கட்டத்தில் ஒவ்வொரு அறுபது மாணவர்களுக்கும் இரண்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வழங்கப்படுவார்கள்.
- ஆசிரியர்களின் எண்ணிக்கை அவர்களின் தரத்தை விட மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது.
- அறிவியல் மற்றும் கணிதம், சமூக அறிவியல் மற்றும் மொழிப் பாடங்களைக் கற்பிப்பதற்கு தலா ஒரு சிறப்பு ஆசிரியர்கள் இருக்க வேண்டும்.
- நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு பள்ளிக்கு முழு நேர தலைமை ஆசிரியர் பரிந்துரைக்கப்படகிறார்.
- 1 முதல் 5 வரையிலான வகுப்புகளுக்கு 3200 வேலை நாட்கள் மற்றும் 6 முதல் 7 வரையிலான வகுப்புகளுக்கு 220 வேலை நாட்கள் என்ற கணக்கில் வாரம் ஒன்றுக்கு 45 மணி நேர வேலையுடன் ஒரு கல்வியாண்டிற்கு பணித் திட்டமானது இருக்க வேண்டும்.
- பள்ளியின் ஒவ்வொரு ஆசிரியருக்கும் அனைத்து காலநிலைக்கும் ஏற்ற வகையில் வகுப்பறைகள் ஒரு அலுவலகம், ஒரு பண்டக அறை மற்றும் ஒரு தலைமை ஆசிரியர் அறை ஆகியவை ஒவ்வொரு பள்ளிக்கும் இருக்க வேண்டியது அவசியமாகிறது.
- மதிய உணவு பாதுகாப்பான குடிநீர் வசதி, சிறுவர்களுக்கும் சரியான தடுப்புடன் கூடிய தனித்தனி கழிப்பறைகள், விளையாட்டு மைதானம், படிப்பதற்கு எற்ற புத்தகங்கள் மற்றும் கற்பிக்க உதவும் வசதிகளுடன் கூடிய நூலகம், சுகாதாரமான சமையலறை வசதி போன்றவை உறுதி செய்யப்பட வேண்டும்.
- குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம் (National Commission for the Protection of child Rights NCPCR)ஆனது இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் விதிகளைச் கண்காணிக்கும் நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.
- இந்த சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமைகளுக்கான பாதுகாப்புகளை மதிப்பாய்வு செய்வதிலும் புகார்களை விசாரிப்பதும் வழக்குகளை விசாரிப்பதிலும் NCPCR ஆனது சிவில் நீதிமன்றத்தின் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

**பாகுப்பாய்வு**

- இருப்பினும் தொடக்கக் கல்விக்கான உரிமையை வழங்க அதிகாரிகள் தவறினால், அவர்களுக்கு குறிப்பிட்ட அபதாரங்கள் எதுவும் இதிலல் விதிக்கப்படவில்லை.
- இலவச மற்றும் கட்டாய தொடக்க கல்வியை வழங்க வேண்டிய கடமை மாநில அரசிற்கும் உள்ளூர் அரசிற்கும் உள்ளது. ஆனால் இந்த கடமையைப் பகிர்வது என்பதால் எந்தவொரு அரசாங்கத்தையும் பொறுப்பிற்கு உள்ளாக்கப்படாமல் போககூடும்.
- இந்தச் சட்டம் பள்ளிக்கல்வி மற்றும் பள்ளி உள்கட்டமைப்புக்கான உரிமையை வழங்குகிறது. ஆனால் குழந்தைகள் கற்றுக் கொள்வதற்கு சரியான உத்தரவாதத்தை அளிப்பதில்லை.
- அரசுப் பள்ளிகளுக்கு குறிப்பிட்ட விதிமுறைகளைப் பூர்த்தி செய்யாவிட்டாலும் அதற்கு எந்தவொரு விளைவுகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகின்றன.
- இந்த சட்டம் பல்வேறு தரங்களின் அடிப்படையிலான கற்பித்தல் நடைமுறையை நியாயப்படுத்துகிறது.

**கல்வி உரிமை சட்டம் 2019**

- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத் திருத்தம் 2019 ஆனது ஜனவரி 3, 2019 அன்று நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.
- இது 2019 ஜனவரி 10 அன்று ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்றது.
- பள்ளிகளில் அனைத்து வகுப்பிலும் கட்டாயத் தேர்ச்சிக் கொள்கையை அகற்ற இந்தச் சட்டம் முயல்கிறது.
- கல்வி உரிமை சட்டம் 2009 ஆனது ஆரம்பக் கல்வி அதாவது 8 ஆம் வகுப்பு முடிக்கும் வரை குழந்தைகளின் தேர்ச்சியைத் தடுத்து வைப்பதைத் தடை செய்கிறது.
- ஒவ்வொரு கல்வியாண்டின் முடிவிலும் 5 ஆம் வகுப்பு மற்றும் 8 ஆம் வகுப்புகளில் வழக்கமான தேர்வு நடத்தப்படும் என்று குறிப்பிடுவதற்காக 2019 சட்டமானது இந்த விதிமுறையைத் திருத்துகிறது.
- ஒரு குழந்தை தேர்வில் தோல்வியடைந்தால், அவருக்கு கூடுதல் அறிவுறுத்துதல்கள் வழங்கப்பட்டு மறு தேர்வு நடத்தப்படும்.
- மறு தேர்வில் ஒரு குழந்தை தோல்வியுற்றால், குழந்தையை அடுத்த வகுப்பிற்கு அனுப்பாமல் அதே வகுப்பில் தடுத்து வைக்க பள்ளிகளை அனுமதிக்க சம்பந்தப்பட்ட மத்திய அல்லது மத்திய அல்லது மாநில அரசு முடிவு செய்யலாம்.
- கல்விக்கான தேசியக் கொள்கையை வகுப்பதற்கான டி.எஸ்.ஆர் சுப்பிரமணியக் குழுவும் 5-ஆம் வகுப்பிற்குப் பிறகு கட்டாயக் தேர்ச்சி நிலை இல்லை என்ற கொள்கையை நிறுத்த வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

## 8.3 தேசிய கல்விக்கொள்கை 2020 (NEP 2020)

NEP 2020, மாற்றுத்திறனாளிகள் சட்டம் 2016 மற்றும் கல்விக்கான உரிமை 2009 ஆகியவற்றிலிருந்து உள்ளடங்கிய கல்விக்கான விதிகளை செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பை வழங்குகிறது.

NEP 2020 ஆனது, கல்வி ஒரு பொது சேவை என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டது. தரமான கல்வியைப் பெறுவது ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை உரியையாக கருதப்பட வேண்டும். அனைத்து மாணவர்களும் இந்த கல்வி முறையில் நிலைகொள்ள முடியும் என்பதை உறுதி செய்வதற்கான அனைத்து கல்வி சம்பந்தமான முடிவுகளுக்கு மூலமாக சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் இருக்கும் என்று நம்பப்படுகிறது. 3 வயது முதல் கல்வி மற்றும் குழந்தைப் பருவ பராமரிப்பு ஆகியவற்றில் வலுவான அடிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இது சிறந்த கற்றல் மேம்பாடு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பள்ளிக்கல்வி முறையின் முதன்மை இலக்குகளில் ஒன்று, குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுவதையும் பள்ளிக்குச் செல்வதையும் உறுதி செய்வதாக இருக்க வேண்டும் ஏனென்றால்

- முதலாவது, பயனுள்ள மற்றும் போதுமான உள்கட்டமைப்பை வழங்குவதன் மூலம் அனைத்து மாணவர்களும் முன்-தொடக்கப் பள்ளி வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை அனைத்து மட்டங்களிலும் பாதுகாப்பான மற்றும் பொருத்தமான பள்ளி கல்வியைப் பெறலாம்.

- புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் பல்வேறு சூழ்நிலைகளால் பள்ளியை விட்டு வெளியேறும் பிற குழந்தைகளை மீண்டும் பிரதான கல்வி கற்பதை உறுதி செய்வதற்காக உள்ளூர் சமூக நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மற்றும் புதுமையான கல்வி மையங்கள் மாற்று அமைக்கப்படும்.

- உள்ளூர் சமூக அமைப்புகள் / சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறைகள் மற்றும் மாநில / மாவட்ட அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதில் ஈடுபட்டுள்ள அரசுப் பணியாளர்களின் பயிற்சி பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த சமூகப் பணியாளர்கள், மாநில / யூனியன் பிரதேச அரசுகளால் பின்பற்றப்படும். பல்வேறு புதுமையான வழிமுறைகள் மூலம் இந்த முக்கியமான வேலையைச் செய்ய பள்ளிகளுடன் இணைக்கப்படலாம்.

- அனைத்து மாணவர்களுக்கும் கற்றலை எளிதாக்க சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கிய குழுக்களுக்கு (SEDGs) அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில், முறையான மற்றும் முறைசாரா கல்வி முறைகளை உள்ளடக்கிய கற்றலுக்கான பல வழிகளை எளிதாக்கும் வகையில் பள்ளிக் கல்வியின் நோக்கம் விரிவுபடுத்தப்படும்.

- நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆ்ஃப் ஓபன் ஸ்கூலிங் (NI & State Open Schools) வழங்கும் திறந்த மற்றும் தொலைதூரக் கற்றல் திட்டங்கள் அனைத்தும் இந்தியாவில் பள்ளிக்கு உடல்நிலை காரணத்தால், நேரடியாகச் செல்ல இயலாத இளைஞர்களின் கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக விரிவுபடுத்தப்பட்டு பலப்படுத்தப்படும்.

- இந்திய சைகை மொழி (ISL) நாடு முழுவதும் தரப்படுத்தப்படும். மேலும் செவித்திறன் குறைபாடுள்ள மாணவர்களின் பயன்பாட்டிற்காக தேசிய மற்றும் மாநில பாடத்திட்டங்கள் உருவாக்கப்படும். தேவையான மற்றும் சாத்தியமான இடங்களில் உள்ளூர் சைகை மொழிகளுக்கு முக்கியத்துவம் அளித்து கற்பிக்கப்படும்.

- ஆசிரியர்களுக்கு அவர்களது சுய முன்னேற்றம் மற்றும் அவர்களில் தொழில்களில் சமீபத்திய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையானவற்றைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் தொடர்ச்சியாக வழங்கப்படும்.

- பள்ளிக் கல்வியில் சில துறைகளில் சிறப்புக் கல்வியாளர்களின் தேவை கூடுதலாக, உடனடியாக தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக இவ்வாறு நிபுணர்கள் தேவைப்படும் இடங்களானவை குறிப்பிட்ட கற்றல் குறைபாடுகளுக்கான கற்பித்தல் உட்பட இடைநிலை மற்றும் இடைநிலைப் பள்ளி மட்டத்தில் குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு பாடம் கற்பித்தல். ஆத்தகைய ஆசிரியர்களுக்கு பாடம் கற்பித்தல் அறிவு மற்றும் பாடம் தொடர்பான கல்வியின் நோக்கம் பற்றிய புரிதல் மட்டுமல்லாமல், குழந்தைகளின் சிறப்புத் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கான பொருத்தமான திறன்களும் தேவைப்படுகின்றது.

- அனைத்து பி.எட் (B.Ed) திட்டங்களிலும் நேர – சோதனை செய்யப்பட்ட மற்றும் கல்வியியலின் மிக சமீபத்திய நுட்பங்கள் பற்றிய பயிற்சிகள் அடங்கும். அவற்றுடன் இணைந்து அடிப்படை கல்வியறிவு மற்றும் எண்ணியல், பல நிலை கற்பித்தல், சிறப்பு ஆர்வங்கள் அல்லது திறமைகள் கொண்ட குழந்தைகளுக்கு கற்பித்தல் கல்வியில் தொழில்நுட்ப பயன்பாடு கற்பவரை மையமாக கொண்ட கற்றல் மற்நும் கூட்டு கற்றல் அடங்கும்.

பள்ளிக் கல்வியில் அணுகல், பங்கேற்பு மற்றும் கற்றல் விளைவுகளில் உண்டாகும் சமூக இடைவெளிகளைக் குறைப்பது, அனைத்துக் கல்வித்துறை மேம்பாட்டுத் திட்டங்களின்

முக்கிய இலக்குகளில் ஒன்றாகத் தொடரும் என்பதை இந்தக் கொள்கை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

குறிப்பாக சமூக - பொருளாதார ரீதியாக பின்தங்கிய குழுக்களுக்கு, வரலாற்று ரீதியாக கல்வியில் குறைவாகவே பிரதிநிதித்துவம் செய்யப்பட்டுள்ளது. சமூக ரீதியாக பின்தங்கிய குழுக்கள் (SEDGs).

- பாலின அடையாளங்கள்
- சமூக கலாச்சார அடையாளங்கள்
- புவியியல் அடையாளங்கள்
- குறைபாடுகள்
- சமூக – பொருளாதார நிலைமைகள்
- தரம் 1 முதல் 12 வரை பள்ளி சேர்க்கை குறைந்தே உள்ளது. மேலும் சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கிய குழுக்கள். பலவற்றில் இந்த சேர்க்கை இன்னும் அதிகமாக குறைந்திருக்கிறது.

  இந்த குழுக்களிலும் பெண்களின் எண்ணிக்கை இன்னும் சரிந்து காணப்படுகிறது. உயர் கல்வியில் இந்த சரிவு அதைவிட மிக அதிகமாக உள்ளது. மாற்றுத் திறனாளி குழந்தைகள் (1.1% முதல் 0.25 %) இந்த பிரிவில், பெண் குழந்தையின் பள்ளி சேர்க்கை மேலும் சரிந்தே காணப்படுகிறது.

- இந்த கொள்கையானது சிறப்பு தேவையுடைய குழந்தைகள் மற்றும் திவ்யாங் (மாற்றுத்திளனாளிகளுக்கு) மற்ற குழந்தைகளுக்குள்ள தரமான கல்வி பெறும் வாய்ப்புகளைப் போன்றே வாய்ப்புகளை உருவாக்குவது மற்றும் அங்கீகரிக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

  பள்ளிக் கல்வியில் சமூகத்தினால் ஏற்படும் இடைவெளிகளைக் குறைப்பதில் கவனம் செலுத்துவதற்கான உத்திகள்.

- ECCE, அடிப்படைக் கல்வியறிவு மற்றும் எண்ணியல், அணுகல், சேர்க்கை மற்றும் வருகைப் பதிவு, போன்றவைகள் தொடர்பான சிக்கல்கள் மற்றும் பரிந்துரைகள் குறைவான பிரதிநிதித்துவம் மற்றும் பின் தங்கிய குழுக்களுக்கு முக்கியமானவை.
- வெற்றிகரமான கொள்கைகள் மற்றும் திட்டங்களான குறிப்பிட்டவர்களுக்கான உதவித்தொகைகள் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதற்கு நிபந்தனையுடன் கூடிய பணப் பரிமாற்றங்கள், போக்குவரத்துக்காக மிதிவண்டிகளை வழங்குதல் போன்றவை, சில குறிப்பிட்ட பகுதிகளில் பள்ளிக் கல்வி அமைப்பில் சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கிய குழுக்களின் பங்கேற்பை கணிசமாக அதிகரித்துள்ளன. இந்த வெற்றிகரமான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் நாடு முழுவதும் கணிசமாக வலுப்படுத்தப்பட வேண்டும்.
- ஒருவருக்கு – ஒரு கற்பிப்பவர் மற்றும் ஆசிரியர், சக தோழர்கள் கற்பித்தல், திறந்த வகை பள்ளிகள், பொருத்தமான உள்கட்டமைப்பு மற்றும் அணுகலை உறுதி

செய்வதற்கான பொருத்தமான தொழில்நுட்பத் தலையீடுகள் போன்றவை குறிப்பாக சில வகை குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு பயனள்ளதாக இருக்கும்.

- கல்வியில் பின்தங்கிய சமூக – பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்கள் அதிகமாக உள்ள பகுதிகள் சிறப்புக் கல்வி மண்டலங்களாக (SEZs) அறிவிக்கபட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. அங்கு அவர்களில் கல்வி பரப்பை மாற்றுவதற்காக அனைத்து திட்டங்களும், கொள்கைகளும் கூடுதல் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் அதிகபட்ச அளவில் செயல்படுத்தப்படுகின்றன.

- சமூக – பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்கள் எதிர்கொள்ளும் விலக்குதல் மற்றும் சமத்துவமின்மை இந்த வகையைச் சார்ந்த பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். SEDG களில் உள்ள மாணவர்களைச் சேர்க்க வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறிப்பாக இந்த குழுக்களில் உள்ள பெண்களை இலக்காகக் கொள்ள வேண்டும் என்று இந்த கொள்கை பரிந்துரைக்கிறது.

- பாலினச் சேர்க்கை நிதியானது அனைத்து சிறுமிகளுக்கும் மேலும் மூன்றாம் பாலினத்தவர்க்கும் சமமான, தரமான கல்வியை வழங்குவதற்கான நாட்டின் திறனை அதிகரிக்க வேண்டும்.

  இதன் சாராம்சமாக எந்தவொரு பாலினம் அல்லது பிற சமூக – பொருளாதார ரீதியாக பின்தங்கிய குழுவிலிருந்தும் குழந்தைகளுக்கு (தொழில்சார் கல்வி உட்பட) கல்விக்கான அணுகலில் ஏனைய வேறுபாடுகளை அகற்றுவதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மாற்றுத்திறனாளி குழந்தைகளை ECC ல் மற்றும் பள்ளி கல்வியில் சேர்ப்பதற்கும் மற்றும் சமமான பங்களிப்பை உறுதி செய்வதற்கும் அதிக முன்னுரிமை அளிக்கப்படும். மாற்றுத்திறனாளிகள் உரிமை சட்டம் (RPWD) 2016 உள்ளடக்கிய கல்வியை "குறைபாடுள்ள மற்றும் குறைபாடுகள் இல்லாத மாணவர்கள் ஒன்றாக கற்பதும் மற்றும் ஒன்றாக கற்பிப்பதும் மேலும் பல்வேறு வகையான மாற்றுத்திறனாளி மாணவர்களின் கற்றல் தேவைகளுக்கு ஏற்றமாதிரி பூர்த்தி செய்யமாறு மாற்றியமைக்கப்படும் கல்வி" என்று வரையறுக்கிறது.

- இதற்காக மாற்றுத்திறனாளியை ஒருங்கிணைப்பதற்கும் மாற்றுத்திறனாளிகளை வேறுபடுத்தாது பயிற்சி அளிக்கும் சிறப்பு ஆசிரியர்களை வேலையில் சேர்ப்பதற்கும் தேவையான இடங்களில், குறிப்பாக கடுமையான அல்லது பல்வகையான குறைபாடுகள் கொண்ட குழந்தைகளுக்கு ஆதார வள மையங்களை நிறுவுவதற்கும் பள்ளிகள் / பள்ளி வளாகங்களுக்கு வளங்கள் அளிக்கப்படும். RPWD சட்டத்தின்படி குறைபாடுகள் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தடையற்ற அணுகல்.

# References


1) https://practiceconnect.azimpremjiuniversity.edu.in/the-inclusion-of-people-with-disabilities/
2) https://www.cdc.gov/ncbddd/disabilityandhealth/disability.html#:~:text=A%20 disability%20is%20any%20 condition,around%20them%20(participation%20 restrictions).
3) https://www.disabled-world.com/disability/awaren
4) https://careforchildren.info/disability-awareness/

Right to Education (RTE)

https://pib.gov.in/PressReleasePage.aspx?PRID=1592829

https://samagra.education.gov.in/inclusive.html

Data on Children with Disability

https://www.dailypioneer.com/2019/india/inclusive-education-a-distant-dream--report.html

Sider, S., Maich, K., & Morvan, J. (2017). School Principals and Students with Special Education Needs: Leading Inclusive Schools. <i>Canadian Journal of Education / Revue Canadienne de l'éducation,</i> <i>40</i>(2), 1-31. Retrieved August 24, 2021, from https://www.jstor.org/stable/90010122

https://vawnet.org/sites/default/files/materials/files/2016-09/AR_Disab.pdf

Pictures

https://hollandbloorview.ca/research-education/knowledge-translation-products/chronic-pain-assessment-toolbox-children

Child in a wheelchair:
https://www.google.com/imgres?imgurl=https%3A%2F%2Fcdn4.vectorstock.com%2Fi%2F1000x1000%2F62%2F58%2Fdisabled-boy-going-to-school-with-friends-vector-16506258.jpg&imgrefurl=https%3A%2F%2Fwww.vectorstock.com%2Froyalty-free-vector%2Fdisabled-boy-going-to-school-with-friends-vector-16506258&tbnid=d5ooR-bKXo3mmM&vet=12ahUKEwjw-dKD-c3yAhWeOLcAHQ5nAR8QMygBegUIARDCAQ..i&docid=pwORoiOhUkJGQM&w=1000&h=780&q=child%20in%20a%20school%20with%20wheelchair%20catroons&ved=2ahUKEwjw-dKD-c3yAhWeOLcAHQ5nAR8QMygBegUIARDCAQ

Koyambedu Market: https://www.google.com/url?sa=1&url=https%3A%2F%2Fwww.deccanchronicle.com%2Fnation%2Fin-other-news%2F280820%2f Koyambedu-market-to-open-from-september-18.html&psig=AOvVaw0UUfJckfLft6KM7yjyWmdD&ust=1630396759885000&source=images&cd=vfe&ved=0CAsQjRxqFwoTCMCdqr2j2PICFQAAAAAdAAAAABAs

Enrollment of Children with disability 2016-17 https://www.education.gov.in/shikshakparv/docs/Anita_Julka.pdf

Data on Women with Disability

https://www.epw.in/engage/article/invisible-victims-violence-gender-and-disability

Amar Seva Sangam:

https://www.youtube.com/watch?v=62rIT0227OQ&t=6s

Cover page pic

https://www.google.com/url?sa=i&url=https%3A%2F%2Fwww.atlantaparent.com%2Ftalkingtokidsaboutdisabilities%2F&psig=AOvVaw23hWkvWT6r1o55xyR0X5ah&ust=1630471927762000&source=images&cd=vfe&ved=0CAwQjhxqFwoTCPCquby72vICFQAAAAAdAAAAABAD

Rama Krishnan Bio https://www.youtube.com/watch?v=S7qKpZhnhR

https://wwwhttps://www.youtube.com/watch?v=41x10wsqgLQ&t=21s

Sankara Raman

youtube.com/watch?v=S7qKpZhnhRw

Avani Lekhara Bio

https://olympics.com/tokyo-2020/en/paralympics/news/avani-lekhara-wins-gold-for-india

Avani Lekhara pic

https://www.google.com/imgres?imgurl=https%3A%2F%2Fimages.livemint.com%2Fimg%2F2021%2F08%2F30%2F1600x900%2F PARALYMPICS-2020-SHOOTING-22_1630299962358_1630300015801.JPG&imgrefurl=https%3A%2F%2Fwww.livemint.com%2Fnews%2Findia%2Fanand-mahindra-dedicates-first-customised-special-suv-to-avani-lekhara-11630298422886.html&tbnid=2mner-CKEE31AM&vet=12ahUKEwjUlOLWxNryAhXw1HMBHXR3AdgQMygCegUIARCPAQ..i&

docid=JAiAvVnsWQKlWM&w=1600&h=900&itg=1&q=avani%20lekhara&ved=2ahUKEwjUlOLWxNryAhXw1HMBHXR3AdgQMygCegUIARCPAQ

Right to persons with disability


https://legislative.gov.in/actsofparliamentfromtheyear/rights-persons-disabilities-act-2016


https://www.prsindia.org/uploads/media/Person%20with%20Disabilities/Legislative%20Brief%20%20-%20Disabilities%202014.pdf


Water Cycle audio visual aids

https://www.khanacademy.org/science/biology/ecology/biogeochemical-cycles/v/the-water-cycle

## விழிப்புணர்வு பேனர்




மகளிர் விழிப்புணர்வு நிகழ்ச்சி
அமர் சேவா சங்கம்
#சேவையேவாழ்க்கை
பெண் மாற்றுத் திறனாளிகள் சமுதாயத்தில் அதிக அளவில் தடைகளையும் களங்கங்களையும் சந்திக்கிறார்கள். இதைப்பற்றி நாம் எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறோமா ?
குடும்பத்திற்குள்ளும் வெளிநபர்களாலும் பாலியல் துன்புறுத்தல்கள்
nior executive
நான் மட்டுமே என்னுடைய குழந்தையை கவனித்துக் கொள்ள வேண்டி இருக்கிறது
என்னுடைய வீட்டின் அனைத்து வேலைகளையும் செய்கிறேன். ஆனாலும் பூர்விக சொத்தில் எனக்கு பங்கு கிடையாது
உன்னால் தான் குழந்தை ஊனமாக பிறந்தது . இந்த குழந்தையோடு உன்னோடு என்னால் வாழமுடியாது
பொது இடங்களுக்கு செல்வதிலும் சமுதாய சேவைகளை பெறுவதிலும் தடைகள்
AMAR SEVA SANGAM
Live to Serve
AYIKUDY.


மாணவர் விழிப்புணர்வு நிகழ்ச்சி
அமர் சேவா சங்கம்
#சேவையேவாழ்க்கை
கேலி செய்தல்
மற்ற மாணவர்களின் பெற்றோரிடமிருந்து எதிர்ப்பு
அணுகல் தன்மை இல்லாத பொது போக்குவரத்து மற்றும் சரியான உதவி உபகரணங்கள் இல்லை
இவன் ஏன் இந்த பள்ளியில் படிக்கிறான். எங்கள் குழந்தைகளும் இவனைப் போல மாறி விடுவர்
அணுகல் தன்மை இல்லாத பள்ளி வளாகம்
Science LaB
School
என்னால் அறிவியல் ஆய்வு கூடத்திற்கு உள்ளே செல்ல இயலாது
தினமும் நான் இவனை பள்ளிக்கு தூக்கி செல்ல முடியாது
நான்கில் ஒரு மாற்று திறனாளி குழந்தை ஆரம்ப பள்ளி கூட செல்வதில்லை. ஆரம்ப பள்ளி செல்லும் 90% மாற்று திறனாளி குழந்தைகள் பள்ளி கல்வியை முடிப்பதில்லை
AMAR SEVA SANGAM
Live to Serve
AYIKUDY.